வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

வாரமலர் ஈழநாடு

Eelanadu








Email : news@eelanadu.lk | மலர் : 04 | 10.09.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 274 | பக்கங்கள் : 20





07

இந்தியாவை உலுக்கும் உதயநிதியின் 'சனாதன தர்ம' புயல்!





08

தெற்கிலிருந்து கிளம்பும் சர்வதேச விசாரணைக் கோரிக்கைகள்





09

ஈஸ்டர் தாக்குதல் சனல்-4 ஆவணம் ரணிலுக்கு பாலில் விழுந்த பழமாகுமா?





11

நீதியைக் கோரி நிற்கும் சிங்களத் தலைவர்களின் இரட்டைமுகம்


# ஈஸ்டர் தாக்குதலை வைத்து அரசியல் நடத்துவது கேவலம்!

## கர்தினால், சஜித் ஆகியோரை சாடுகிறார் செல்வம்



**வவுனியா, செப்ரெம்பர் 10**

**“தமிழினப் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்காத எதிர்க்கட்சித்தலைவர், கர்தினால் மற்றும் ஏனையவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடத்துவது உண்மையில் கேவலமான விடயம்.”**

**- இவ்வாறு சாடியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.**

15

## ஏற்படவுள்ள பின்விளைவுகளுக்கு சனல் 4 பொறுப்பேற்கவேண்டும்!

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

*கொழும்பு, செப். 10*

*ஆவணப்படத்தில் கூறப்பட்ட மோசமான ஆதார பூர்வமற்ற உரிமை கோரல்கள், தீங்கிழைக்கும், மற்றும் எதிர்பாரா செயல்கள் அல்லது பின்விளைவுகளுக்கு சனல் 4 சந்தேகத்திற்கு இடமின்றி பொறுப்பேற்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.*

*ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக பிரித்தானிய தொலைக்காட்சி வலையமைப்பான*

15

## பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கைக்கு மல்கம் கண்டனம்!

*கொழும்பு, செப். 10*

*சனல் 4 காணொலி ஊடாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையை கொழும்பு பேராயர் இல்லம் வன்மையாக கண்டித்துள்ளது.*

*குறித்த வெளிப்படுத்தல் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தாமல் அதனை உடனடியாக நிராகரிப்பது பொருத்தமற்ற செயற்பாடு என கொழும்பு பேராயர் இல்லத்தின் செய்தித் தொடர்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.*

15



## மொரோக்கோவில் பெரும் நிலநடுக்கம்!

### பலி எண்ணிக்கை 1037ஆக உயர்வு!!

*ரபாட், செப். 10*

*வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மொராக்கோவில் ஏற்பட்ட சத்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 1037 பேர் வரை உயிரிழந்துவிட்டனர் என அந்நாட்டு உள்துறை தெரிவித்துள்ளது.*

*மேலும் நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோரின் வீடுகள் சேதமடைந்துள்ளன. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவாகியுள்ளது.*

*மராகேஷுக்கு தென்மேற்கே 71 கிலோ மீற்றர் (44 மைல்) தொலைவில் உள்ள ஹை அட்லஸ்*

15

## கொக்குத்தொடுவாயில் நேற்றும் எச்சங்கள் மீட்பு

*முல்லைத்தீவு, செப். 10*

*முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் நான்காம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று இடம்பெற்றபோது மேலும் சில எச்சங்கள் மீட்கப்பட்டன.*

*கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வு பணிகள் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.*

*இந்நிலையில் நேற்று நான்காம் நாள் அகழ்வுப் பணிகள் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன்*

15

## சஹ்ரானின் சகோதரரை சிறையில் சந்தித்தேன்!

### கூறுகிறார் பிள்ளையான்

*கொழும்பு, செப். 10*

*ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தில் பிரதான சூத்திரதாரி எனக்கருதப்படும் சஹ்ரான் ஹாசிமின் சகோதரரை தாம் சிறையில் இருந்தபோது சந்தித்தார் என இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.*

*தனியார் வானொலி ஒன்றின் நிகழ்ச்சியில்*

15

### சனல்-4 வீடியோ குறித்து

## சர்வதேச விசாரணை நடத்த கோருக்கின்றார் மைத்திரி



*கொழும்பு, செப். 10*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள காணொளி தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.*

*“சனல் 4 ஊடாக வெளியிடப்பட்டுள்ள தகவல்களை நூறு வீதம் ஏற்கவும் முடியாது, அதே போல நிராகரித்து விடவும் முடியாது. எனவே*

15

## சனல் 4 வீடியோ குறித்து ஆராய மூவர் அடங்கிய குழு விரைவில்!

### நியமிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை

*கொழும்பு, செப். 10*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்பான நிகழ்ச்சி தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஒய்வு பெற்ற மூன்று சிரேஷ்ட அரச அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.*

15

## சீனாவுக்கு செல்கிறார் ரணில்

*கொழும்பு, செப். 10*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஒக்ரோபர் 16 ஆம், 17 ஆம், 18 ஆம் திகதிகளில் சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.*

*குறித்த விஜயத்தின் போது சீன ஜனாதிபதி ஜி ஜின்*

15

## வடக்கு தொல்பொருள் திணைக்களங்களில் அதிகளவில் பெரும்பான்மை இனத்தவர்கள்!

*யாழ்ப்பாணம், செப். 10*

*வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுவதற்காக அதிகளவில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

*ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழே குறித்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*அதிலும் குறிப்பாக தொல்பொருள் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவகத்தின் கீழ் பணியாற்ற 30 வரையான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் தொல்பொருள் மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.*

15

## இப்படியும் நடக்கிறது

ஆபிரிக்கக் கிளி ஒன்றைக் கூண்டினுள் வைத்து ஒருவர் வளர்த்து வந்தார். ஒரு முறை அவர் ஆபிரிக்கா செல்லும் போது கிளி சொல்லியதாம், 'என் ஜோடிக் கிளி அங்கிருக்கும். அதனிடம் நான் இங்கு கூண்டில் இருப்பதாகச் சொல்லுங்கள்.'

அவரும் தன் வேலை முடிந்த பின் சிரமப்பட்டு காட்டில் தனி யாக இருந்த அந்தக் கிளியைக் கண்டு விவரம் சொல்ல, அது உடனே கண்ணீர் உகுத்துக் கீழே சுருண்டு விழுந்து விட்டது.

'அடடா, இந்தக் கிளி இறந்ததற்கு நாம் காரணமாகி விட்டேனே' என்று வருத்தப்பட்டு ஊருக்கு வந்து கூண்டுக் கிளியிடம் விவரம் சொல்ல, அக்கிளியும் கண்ணீர் உகுத்து கூண்டினுள்ளேயே விழுந்துவிட்டது.

நம்மால் இந்தக் கிளியும் அநியாயமாய் இறந்து விட்டதே என்ற வருத்தத்துடன் கூண்டைத் திறந்தார். அந்தக் கிளி பறந்து போய் பக்கத்திலிருந்த மரக்கிளையில் அமர்ந்தது.

உடனே அவர், 'உன் ஜோடிக் கிளி இறந்தது தெரிந்தும் நீ என்னிடம் நடித்துத் தப்பிவிட்டாயே' என்றார்.

அதற்கு அக்கிளி, 'என் ஜோடிக் கிளியும் இறக்கவில்லை. கூண்டில் அடைபட்ட நான் தப்பிக்கும் வழியை உங்களிடமே அது சொல்லி அனுப்பியிருக்கிறது.' என்று கூறி விட்டுத் தனது ஜோடிக் கிளியைத் தேடி பறந்து விட்டது.

அடுத்த 'அறகலய' நிம்மதியாக இருக்காது. அது இரத்த வெள்ளமாக இருக்கும். மக்களின் கோபத்தைக் குறைத்து மதிப்பிடாதீர்கள் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சப்பாத்தாக நான் இருந்திருந்தால்கூட பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டிருப்பேன். தோல்வி பயம் காரணமாக ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கு செல்லவில்லை. நாட்டின் வீழ்ச்சியை ரணில் விக்கிரமசிங்கவால் விரைவாகத் தடுத்து நிறுத்தமுடிந்தது. ஆனால், ஊழல் அரசியல்வாதிகளுடன் இணைந்து பணியாற்றியதால் அவரால் முன்னேற முடியவில்லை' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அவர் சொல்வது சரியா பிழையா என்பது குறித்து இந்தப் பத்தியில் ஆராய்வது எமது நோக்கம் அல்ல.

ஆனால் அவர் சொல்லியிருக்கும் ஒரு செய்தி பற்றி இந்த ஊர்க்குருவி ஏற்கனவே சில விடயங்களை அறிந்திருந்தது.

'அடுத்த அறகலய நிம்மதியாக இருக்காது. அது இரத்த வெள்ளமாக இருக்கும்' என்று அவர் தெரிவித்திருப்பது கவனத்திற்குரியது. அவர் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கோபத்தை வைத்து இப்படிச் சொல்கிறார் என்பது தெரிகின்றது. ஆனால், ஏற்கனவே அறகலயவில் முக்கிய பங்காற்றியவர்களில் சிலரைத் தெரிவு செய்து அவர்களுக்கு அதுபோன்ற போராட்டங்கள் நடத்துவது பற்றியும், அவற்றை எவ்வாறு அதன் நோக்கத்தை அடையும்வரை கொண்டு நகர்த்துவது என்பது பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது என்று கொழும்புத் தகவல் ஒன்று அண்மையில் தெரிவித்திருந்தது.

அவர்களுக்கு உள்ளூரில் வழங்கப்பட்ட பயிற்சிகளுக்கு மேலதிகமாக வெளிநாட்டிலும் பயிற்சி வழங்கப்படவிருப்பதாகவும், அதனை இலங்கையின் நேச நாடு ஒன்று செய்து வருவதாகவும் தகவல் தந்த தெற்கின் ஊடகர் ஒருவர், அந்தப் பயிற்சி முடிந்ததும் நாட்டில் மீண்டும் ஒரு அறகலய தொடங்குவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதியும் அதே கருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆக, இந்த நாட்டில் தத்தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக வெளிச்சக்திகள் அரசியல் செய்ய புறப்பட்டிருப்பது, இனி இந்த நாடு இப்படித்தான் நெருக்கடிகளுடனேயே நகரப்போகின்றது என்பதையே கோடிட்டுக் காட்டியிருக்கின்றது.

மேலேயுள்ள கிளிக்கதை மாதிரித்தான் அறகலய இறந்துவிட்டது என்று எல்லோரும் நம்பிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் அது அந்தக் கிளியின் வேலைபோல இறந்ததுபோல நடித்துவிட்டு மீண்டும் வரப்போகிறதோ தெரியவில்லை.!

என்ன, மீண்டும் அறகலய எனில் நாட்டைவிட்டு வெளியேறுவோர் தொகை இன்னும் பல மடங்காக அதிகரிக்கும். அவ்வளவுதான்!

- ஊர்க்குருவி.






## தெய்வேந்திரமுனையிலிருந்து பருத்தித்துறை முனையில் நிறைவடைந்த ஓட்டமும் நடையும்

வடமராட்சி, செப். 10

இலங்கையின் தெய்வேந்திர முனையிலிருந்து கடந்த 29 ஆம் திகதி ஆரம்பித்த நடை பயணம் நேற்று சனிக்கிழமை பருத்தித்துறை முனை அமைந்துள்ள சக்கோட்டை முனையில் நிறைவடைந்துள்ளது.

தெய்வேந்திர முனையிலிருந்து 600 கிலோ மீற்றர் தொலைதூரத்தை நேற்று 12 ஆவது நாளில் நடந்து நிறைவு செய்துள்ளார் எஸ்.பி. விக்கிரமசிங்க.

சப்ரகமுவ மாகாணம் ரம்புக்கணையை பிறப்பிடமாக கொண்ட எஸ்.பி.விக்கிரமசிங்க, தனது 58 ஆவது வயதில் சாதனை புரிவதற்காக இந்த நடை பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இவரது நடை பயணத்திற்கு பொலீஸார், இராணுவம், விளையாட்டுத்துறையினரும் முழுமையான பாதுகாப்பு மற்றும் அனுசரணையை வழங்கியிருந்தனர். (அ-02)

## போலிப் போலந்து விஸாவில் சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்ல முயன்ற இளைஞன் கைது!

கொழும்பு, செப். 10

போலி போலந்து வதிவிட விசாவைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் இத்தாலி நாட்டிற்கு தப்பிச் செல்ல முயன்ற இளைஞர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் தனது பயண அனுமதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பில் சந்கேகமடைந்த அதிகாரிகள் அவரை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில், குறித்த நபரின் கடவுச்சீட்டை பரிசோதித்த அதிகாரிகள் வீஸா போலியாக தயாரிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து இளைஞனிடம் மேற்கொண்ட விசாரணையில் தரகர் ஒருவரிடம் 40 இலட்சம் ரூபா கொடுத்து போலியான வீசா தயாரிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த இளைஞனின் பயணப் பையில் இருந்து இரண்டு போலி குடிவரவு முத்திரைகள் பொறிக்கப்பட்ட மற்றொரு கடவுச்சீட்டு, இலங்கை குடிவரவு முத்திரை மற்றும் போலி விமான பயணச்சசீட்டு ஆகியவை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட இளைஞனை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர்.

## மாணவர்களின் மனநலப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு புதியதொரு வேலைத்திட்டம்

கொழும்பு, செப். 10

பாடசாலை மாணவர்களின் மனநலப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த திட்டத்தில் கல்வி அமைச்சும் இணைந்து செயற்படும், என சுகாதார குடும்ப நல பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், மாணவர்களின் மனநலப் பிரச்னைகளைக் கண்டறிய ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படும்.

மனநலப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களை கண்டறிந்து சிகிச்சை மற்றும் ஆலோசனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குடும்ப நலப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

அண்மைய நாட்களில் பாடசாலை மாணவர்கள் பல மனநலப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என மனநல மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் உளவியல் மருத்துவர் ரூமி ரூபன் கூறுகையில் -

அதிக கோபம் மற்றும் அவர்களின் சொந்த மனநலப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான அறிவின்மை ஆகியவையே மாணவர்களின் மனநலப் பிரச்னைக்கு பிரதான காரணம் - என்றார். (அ)

## அடுத்த வருடமும் தனியாரிடம் மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்

### எரிசக்தி அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, செப். 10

அடுத்த வருடமும் தனியாரிடம் மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமென எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கான அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக ருவிட்டர் சமூக வலைத்தளத்தில் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு மழைவீழ்ச்சி குறைவான வருடமாக எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில், முன்னேற்பாடாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த ஆண்டில் மழைவீழ்ச்சி குறைவடைந்துள்ளமையினால், நீர்மின் உற்பத்தியை 3500 முதல் 3750 கிகாவாட் மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அனல் மின் உற்பத்தியைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிப்பதற்கான வேலைத் திட்டத்தை செயற்படுத்தி வருவதாகவும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (அ)



## அளவெட்டி அரிசி ஆலையில் தீ!

யாழ்ப்பாணம், செப். 10

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்ட அளவெட்டி வடக்கு பகுதியில் அரிசி ஆலையில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

நேற்று காலை 8 மணியளவில் குறித்த தீ விபத்து ஏற்பட்டதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ பரவலினால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான அரிசி ஆலை இயந்திரங்கள், ஏனைய உபகரணங்கள், தளபாடங்கள் என்பன முற்றாக தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த தீ பரவலுக்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், தெல்லிப்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## சனல்-4 வீடியோ போன்ற சூழ்ச்சிகள் மூலம் பெரமுனவின் அரசியலை தடுக்கமுடியாது!

### ரோஹித அபேகுணவர்தன சூளுரை



கொழும்பு, செப். 10

**“சனல்-4 வீடியோ போன்ற சூழ்ச்சிகள்மூலம் ராஜபக்ஷக்களினதோ அல்லது பொதுஜன பெரமுன கட்சியினதோ அரசியல் பயணத்தை தடுக்க முடியாது. தேர்தலொன்று நடக்கட்டும், மக்கள் யார் பக்கம் என்பதை காண்பிப்போம்.”**

- இவ்வாறு சூளுரைத்துள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ரோஹித அபே குணவர்தன.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு:

கோட்டாபயவை வெற்றி பெற வைக்கவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் திட்டமிடப்பட்டதாம் எனக் கூறப்படுகின்றது. 2019 இல்தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது, ஆனால் 2018 பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் நாம் அமோக வெற்றியை பதிவு செய்துவிட்டோம்.

உள்ளாட்சி தேர்தலை முடிந்தகையோடு மொட்டு கட்சி அல்ல, நாட்டு மக்கள் தான் கோட்டாபயவை கோரினர். இதுதான் உண்மை.

அதேவேளை, சனல்-4 திரைப்படம் இப்ராஹிம் என்பவரை ஏன் மறந்தது? இப்ராஹிம் என்பவர் ஜே.வி.பியின் தேசிய பட்டியல் வேட்பாளராக இருந்தார். அவரின் இரு மகன்மார் தற்கொலை குண்டுதாரிகள். இந்த விடயம் ஏன் மறக்கப்பட்டது? இப்படி யான நகர்வுகள்மூலம் எமது அரசியல் பயணத்தை தடுக்க முடியாது- என்றார். (அ)

## ஈஸ்டர் தாக்குதல், தேசிய பாதுகாப்பு குறித்து சபையில் இரு நாட்கள் விவாதம் நடத்த முடிவு

கொழும்பு, செப். 10

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாராளுமன்றத்தில் இரு நாட்கள் விவாதம் நடைபெறவுள்ளது.

பாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற பாராளுமன்ற நடவடிக்கை தொடர்பான குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் விவாதம் நடத்த நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை எதிரணி கொண்டு வரவுள்ளது. (அ)

## திருமலை தமிழர் குடியிருப்பு மத்தியில் விகாரையின் பெயர்ப் பலகை நாட்டல்!



திருமலை, செப். 10

திருகோணமலை, நிலாவெளி, இலுப்பைக்குளம் பகுதியில் விகாரைக்கான பெயர்ப்பலகை நாட்டப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரையென்ற பெயரில் விகாரையொன்றை அமைக்க பௌத்த பிக்குகள் எடுத்த முயற்சி, கிழக்கு ஆளுநரால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

அந்த காணிக்குள் விகாரைக்குரிய பௌத்த பிக்கு நுழைய தடை விதித்து அறிவித்தலும் விடப்பட்டது.

என்றாலும், அண்மையில் திருகோணமலை மாவட்ட செயலகத்துக்குள் புகுந்த பிக்குகள் கலாட்டாவில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, அந்த தடை அறிவித்தல் விலக்கப்பட்டிருந்தது.

ஆயினும், அங்கு விகாரை அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில், நேற்று பௌத்த பிக்குகள் சிலர் விகாரைக்கான பெயர்ப்பலகையை அங்கு நாட்டியுள்ளனர்.

அந்த பகுதியில் சிங்கள மக்கள் குடியிருக்கவில்லை. தமிழ் மக்களின் குடியிருப்பின் மத்தியில் விகாரை அமைப்பதற்கு எதிராக அண்மையில் தமிழ் மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கிழக்கு முனையத்தின் 80 வீத பணிகள் பூர்த்தி

கொழும்பு, செப். 10

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின் 80 சதவீத நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் செயற்பாடுகளை அடுத்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர குறிப்பிட்டார்.

கிழக்கு முனையத்தின் செயற்பாடுகளுக்காக முதற்கட்டமாக 12 அதிநவீன பாரந்தூக்கிகளை பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் செயலாளர் தெரிவித்தார். (அ)

## கசிப்பு உற்பத்திக் குகை வத்திராயனில் முற்றுகை





வடமராட்சி, செப். 10

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலீஸ் பிரிவிற்குட்பட்ட வத்திராயன் பகுதியில் சுமார் 600 லீற்றர் கோடாவும், கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்ற பொருட்களும் மருதங்கேணி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

மருதங்கேணி பொலீஸ் பிரிவிற்குட்பட்ட வத்திராயன் கிராமத்தில் கசிப்பு உற்பத்தி தொழிலகம் ஒன்று இயங்கிவருவதாக மருதங்கேணி பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் வெள்ளி இரவு குறித்த உற்பத்தி நிலையத்தை சுற்றிவளைத்த மருதங்கேணி பொலிஸார் நான்கு கொள்கலன்களில் 600 லீற்றருக்கு மேற்பட்ட கசிப்பு வடிப்பதற்கு தேவையான கோடா மற்றும் பொருட்கள் என்பனவற்றை கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் கட்சி ஒன்றின் முக்கியஸ்தர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-02)

## நாட்டில் சீரற்ற காலநிலையால் 6,000 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

கொழும்பு, செப். 10

சீரற்ற காலநிலையால் 14 மாவட்டங்களில் 6,000 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் 1,747 குடும்பங்களைச் சேர்ந்த 6,333 பேர் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலி, மாத்தறை, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, நுவ ரெலியா, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத் தீவு, வவுனியா, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் 1,208 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் கொழும்பு மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் நாடு முழுவதும் 301 வீடுகளும் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அறிவித்துள்ளது. (அ)



# தோப்பூர் மதுபானசாலைக்கு எதிராக மக்கள் போராட்டம்

திருமலை, செப். 10

திருகோணமலை, தோப்பூரில் அமைக்கப்படும் மதுபானசாலைக்கு எதிராக பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கூர்கண்டம் பகுதியில் மதுபானசாலை அமைக்கும் முற்சிகள் நடக்கின்றன. கூர்கண்டம் ஜூம்ஆ பள்ளிவாசலில் நேற்று முன் தினம் தொழுகைகள் முடிந்ததும் மக்கள் மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை- மட்டக்களப்பு வீதியில் பேரணியாகவும் சென்றனர்.

(அ)

# ஜனாதிபதி பதவியை வழங்கினால் அரசாங்கத்துடன் இணையத் தயார்!

## கூறுகின்றார் மைத்திரிபால



**கொழும்பு, செப். 10**

**ஜனாதிபதி பதவியை தமக்கு வழங்கினால், அரசாங்கத்துடன் இணைந்துக் கொள்ளத் தயார் என ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

பிரதமர் பதவியையோ, அமைச்சர் பதவியையோ பெறவேண்டும் என்ற ஆசை தனக்கு இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் கட்சிகளில் பிளவுகள் ஏற்படுவது சகஜம், அவை இன்று இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் பொதுவானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில் இருப்பதாக அக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாகவே, தம்மை பொதுச் செயலாளர் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேன நீக்கியதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

(அ)

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாதுகாப்பு மீளாய்வுக் குழு நியமனம்

கொழும்பு, செப். 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக்க தலைமையில் பாதுகாப்பு மீளாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த மீளாய்வுக் குழுவில் 2030 வரையான மற்றும் அதன் பின்னரான அணுகுமுறைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

தேசிய பாதுகாப்புக் கொள்கை தயாரிப்பின் முதற்கட்டமான “பாதுகாப்பு நிலவர மீளாய்வு - 2030” என்ற யோசனையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நியதிகளுக்கமைய, சவால்களை எதிர்கொள்வதற்கான மாற்று அணுகுமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக “பாதுகாப்பு நிலவர மீளாய்வு - 2030” அவசியப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய,

2030 இல் இலங்கையின் மூலோபாய அறிவு , சவால்கள், இலங்கையின் பாதுகாப்பு முக்கியத்துவம், 2030 பாதுகாப்பு கொள்கையின் நோக்கங்கள், மூலோபாய சவாலை எதிர்கொள்ளும் இயலுமை மற்றும் வலு தற்போதுள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப அவசர தேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன் மூலம் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதற்காக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக்க தலைமையிலான மீளாய்வுக்குழு நியமிக்கப்பட்டிருப்பதுடன், அந்த குழுவில் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் ஜே.ஜே. ரணசிங்க, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஆர்.வணிகசூரிய , ஓய்வுபெற்ற எயார்வைஸ் மார்சல் அன்றூ விஜேசூரிய , இலங்கை வெளிநாட்டுச் சேவையின் சசிகலா பிரேமவர்தன, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் ஆலோசகர் டேனியல் அல்போன்ஸ் ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

சேவையிலிருக்கும் முப்படை அதிகாரிகள், வெளிநாட்டு சேவை அதிகாரிகள், திறைசேரி அதிகாரிகள், நிபுணர்கள், ஜனாதிபதியினால் நியமிக்கப்படவுள்ள செயலாளர் ஒருவரும் பணிக்குழுவும் அதற்கான ஒத்துழைப்புகளை வழங்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

# தவறை ஒப்புக்கொண்டால் மன்னிப்பு வழங்கத் தயார்!



கொழும்பு, செப். 10

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் தங்களுடைய தவறை ஒப்புக்கொண்டால் தான் உட்பட கத்தோலிக்க திருச்சபை அவர்களுக்கான மன்னிப்பை வழங்க தயாராக உள்ளதாக மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்ய முடியவில்லை எனின் நாம் மதங்களை பின்பற்றுவதால் உள்ள பயன் தான் என்ன எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதன்படி, நேற்று முன்தினம் கொழும்பு கொச்சிக்கடை ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளின் பின்னரே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்ன நடந்தது என்பது எங்களுக்கு இன்னும் தெளிவாக தெரியவில்லை. மேலும் மேலும், புதிய காரணங்கள் , புதிய விடயங்கள் வெளிக்கொணரப்பட்டு வருகின்றன.

இவ்வாறான விடயங்களால் சிலருக்கு சில சமயங்களில் கோபம் கூட வர வாய்ப்புண்டு. ஏனெனில் இந்த விடயங்களில் அவர்களது பெயர் பயன்படுத்தப்படுகிறது.

பயப்பட வேண்டிய அவசியம் இல்லை; அவர்களுக்கும் , குறித்த சம்பவத்துக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை எனில் அவர்கள் பயப் பட வேண்டிய அவசியம் இல்லை.

எவ்வாறாயினும் இது தொடர்பிலான காரணங்களை ஆராய்ந்து பார்ப்பது உரிய தரப்பினரின் பொறுப்பாகும்.

உண்மையான , சாதாரணமான, உண்மைத் தன்மையை வெளிப்படுத்தக்கூடிய ஆய்வொன்றை நடத்தி நடந்தது என்ன என்பது தொடர்பில் தெரிவியுங்கள்.

அது அவ்வளவு கஷ்டமான ஒரு விடயம் அல்ல. இந்த சந்தர்ப்பத்தில் நான் எமது நாட்டின் தலைவரிடம் மிகவும் தேவையுடன் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றேன் . ” இதோ, ஒவ்வொன்றாய் வெளிவர ஆரம்பித்துள்ளன, அதனால் இப்பொழுதாவது நாங்கள் கேட்கும் , உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ள கூடிய வகையிலான ஒரு ஆய்வை மேற்கொள்ளுங்கள்.”

அதேபோல் குறித்த சம்பவத்தில் எவரொருவரின் பெயர் தெரிவிக்கப்படுகிறதோ அவர்கள் மரியாதையுடன் தத்தமது பதவிகளிலிருந்து விலகவேண்டும்.

அது தொடர்பில் உரிய ஆய்வுகளை நடத்த முன்வர வேண்டும் . அதுவே நேர்மையான முறை. நேர்மை என்பது பதவிகளுக்கு பின்னால் மறைந்து கொள்வது அல்ல. தான் தவறு செய்திருப்பின் அதனை ஆராய வழிவிடுவது தான் நேர்மை. அவ்வாறு இல்லையெனில், தவறு செய்ததை ஒப்புக்கொள்ளுதல்.

அவ்வாறு தவறு செய்திருந்தால், அதனை ஒப்புக்கொள்ளுங்கள் நாம் மன்னிக்க தயாராக உள்ளோம்-என்றார்.

# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை தொடர்ந்து வழங்க ஐரோப்பிய ஒன்றியம் அவதானம்

கொழும்பு, செப். 10

ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், தற்போதைய நெருக்கடியில் இருந்து மீண்டெழவும் மிகவும் பக்கபலமாகவும் உதவியாகவும் இருக்குமென ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை தூதுவர் கிரேஸ் ஆசிர்வதம் தெரிவித்துள்ளார்.

பிரஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதரகத்தின் நடைபெற்ற “இலங்கையின் நண்பர்கள்“ என்ற சினேகப்பூர்வ இரவு விருந்துபசார நிகழ்விலேயே இந்த கருத்தை தூதுவர் கிரேஸ் ஆசிர்வதம் வெளியிட்டார்.

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐரோப்பிய மக்கள் கட்சியின் அங்கத்தவரான செக் குடியரசைச் சேர்ந்த மெப் தோமஸ் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் மூலோபாயத்தின் விரிவான கண்ணோட்டத்தை தூதுவர் கிரேஸ் ஆசிர்வாதம் வரவேற்றார்.

சவாலான காலங்களில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுதியான ஆதரவு மற்றும் உதவிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஆதரவுக்கும் தூதுவர் பாராட்டு தெரிவித்தார்.

அடுத்த தசாப்தத்திற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி. எஸ்.பி பிளஸ் சலுகை புதிய ஒழுங்குமுறை தொடர்பான விவாதங்கள் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றன.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான பயணத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகளை தொடர வேண்டியதன் முக்கியத்துவத்தை தூதுவர் ஆசிர்வதம் வலியுறுத்தினார்.

தூதுவர் ஆசிர்வதம் சுற்றாடல் நிலைத்தன்மை மற்றும் காலநிலை நடவடிக்கைகளுக்கான இலங்கையின் உறுதியான அர்ப்பணிப்பு குறித்தும் விளக்கமளித்தார்.

2050 ஆம் ஆண்டளவில் நிகர பூச்சிய கார்பன் வெளியேற்றத்தை அடைவதற்கான இலங்கையின் இலட்சிய இலக்கை அவர் மீண்டும் வலியுறுத்தினார், மேலும் காடுகளை விரிவுபடுத்துவதற்கும் புதுப்பிக்கத்தக்க எரி சக்தியை உருவாக்கும் இலங்கையின் முயற்சிகளையும் தூதுவர் ஆசிர்வாதம் எடுத்துரைத்தார்.

ஐரோய்ப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கையின் நண்பர்கள் குழுவின் தலைவரான மெப் தோமஸ், உறுதியான கொள்கைகள் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் நாட்டை ஒரு நேர்மறையான பாதைக்கு இட்டுச் செல்லவும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டினார். (அ)

# கல்கிசையில் தொடர்மாடிக் குடியிருப்பின் 13ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து யுவதி பலி!

கொழும்பு, செப். 10

கல்கிசை - அல்விஸ் பிளேஸில் அமைந்துள்ள தொடர்மாடிக் குடியிருப்பின் 13 ஆவது மாடியிலிருந்து வீழ்ந்து 27 வயதான யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் கூறினர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
10.09.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தற்போது இடம்பெறும் ஊடக அலசல்களை நோக்கும் போது, நமது உரையாடல்கள் அதிகம் அறிவுசார் பார்வையிலிருந்து விலகியிருப்பதையும், வெறும் செவிவழிக் கதைகளுக்குள் சிக்கிக் கிடப்பதையும், தெளிவாக காண முடிகின்றது.

ஈஸ்டர் தாக்குதல், 2019 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்றது. மூன்று கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் கொழும்பின் பிரதான உல்லாச விடுதிகளை சிலவற்றை, இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தக் தாக்குதலில், 268 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதில் 40இற்கு மேற்பட்ட வெளிநாட்டு பிரஜைகளும் அடங்குவர். இதில் ஐந்து பேர் அமெரிக்கர்களாவர். குறித்த அமெரிக்கர்களில், உத்தியோகபூர்வ அலுவல்களுக்காக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த, அமெரிக்க வர்த்தக திணைக்களத்தின் அதிகாரியும் கொல்லப்பட்டார்.

இலங்கையின் முஸ்லிம் தற்கொலை குண்டுதாரிகளே, இந்தக் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியை சேர்ந்த சஹ்ரான் என்னும் நபரே இந்தக் தாக்குதலுக்கு தலைமை தாங்கியிருந்தார். தற்கொலைதாரிகளில் குறித்த நபரும் அடங்குகின்றார். இந்தக் தாக்குதல் இடம்பெற்று இரு தினங்களின் பின்னர் - சக்திவாய்ந்த உலகளாவிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். - குறித்த தாக்குதலுக்கு, உத்தியோகபூர்வமாக உரிமை கோரியது. அவர்களது ஊடக வலயமைப்பான அமாக் செய்தி முகவரகம் (Amaq News Agency) இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களை ஐ.எஸ். ஐ.எஸ். பேராளிகளென்று அறிவித்தது. இதன் மூலம் உலகெங்கும் இயங்குவது போன்று, இலங்கையிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். முகாமிட்டிருப்பது வெளிச்சத்திற்கு வந்தது.

ஏப்ரல் 23இல், தற்கொலைதாரிகள், அவர்களின் தலைவர் அபூபக்கர் அல் - பக்தாதியின் படத்திற்கு முன்னால், உறுதி மொழியெடுத்துக் கொள்வதான காணொளி வெளியானது. அதேவேளை, ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவரான அல் - பக்தாதி, ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து, அது தொடர்பில் உரையாடும் காணொலியொன்றையும், அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கி வரும் புலனாய்வு அமைப்பான சைட் (U.S.-based SITE Intelligence Group) வெளியிட்டது. அந்தக் காணொளியில், ஈஸ்டர் தாக்குதலில் ஈடுபட்டவர்களை, பக்தாதி, பாராட்டும் வரிகள் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன.

அமெரிக்க பிரஜைகள் கொல்லப்பட்டதன் பின்னணியில், அமெரிக்க உள்ளக உளவுத் துறை (FBI), இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. இதற்கு இலங்கை அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தது. இதன் தொடர்சியாக - FBI, டிசம்பர், 2020இல், லொஸ்ஏஞ்சல் - மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தது. இதன் கீழ், இந்தக் தாக்குதலுக்கு பல்வேறு வழிகளில் உதவியவர்கள் என்னுமடிப்படையில், மூன்று முஸ்லிம் நபர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ்.இனால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இல்லை. அப்படி இருக்கவும் முடியாது. ஆனால் தற்போது இலங்கையில் இடம்பெற்றுவரும் அரசியல் உரையாடல்களை நோக்கினால் - அதில் ஐ.எஸ்.ஐ.எஸ். - என்னும் சொல்லையே காண முடியவில்லை. வெறும் உள்ளூர் தேர்தல் அரசியலை இலக்கு வைத்தே அனைத்து உரையாடல்களும் இடம்பெறுகின்றன. ஒரு புறம் தமிழ் கட்சிகள் பிள்ளையானை முன்னிலைப்படுத்தி தங்களின் பிரசாரங்களை முன்னெடுக்கின்றன - மறுபுறம், எதிர்கட்சிகளோ, கோட்டாபய ராஜபக்ஷவை இலக்கு வைத்து, ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி கொடுப்பதற்கான ஒரு துருப்புச் சீட்டாக இதனை பயன்படுத்துகின்றன. ஆனால் ஏற்கனவே அமெரிக்க மற்றும் இந்திய உளவுத் துறைகளால் மிகவும் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்ட ஐ.எஸ். ஐ.எஸ். விவகாரத்தை அனைவருமே தங்களின் தேவை கருதி மறந்துவிட்டனர். இலங்கையின் பாதுகாப்பு நோக்கில் சிந்தித்தால், இது மிகவும் ஆபத்தானது. இஸ்லாமிய பங்கரவாத அமைப்புக்கள், இலங்கையை மீண்டும், ஒரு இலக்காக பயன்படுத்துவதற்கான சூழலையே இது இலகுபடுத்தும்.

இந்தக் தாக்குதல் இடம்பெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே, இந்திய உளவுத் துறை இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்திருந்தது. ஆனால் அதனை கருத்தில் கொண்டு இலங்கை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இந்த பின்புலத்தில், உள்ளூரில் இந்தத் தாக்குதலுடன் எவரேனும் தொடர்பட்டிருந்தால், ஒருவேளை தற்போது குற்றம்சாட்டப்படுவது போன்று, இலங்கை அதிகாரிகள் தொடர்புபட்டிருந்தால், அவர் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும். அந்த அடிப்படையில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். ஆனால் அதற்காக. இதனை ஒரு உள்ளூர் விவகாரமாக சுருக்கி, ISIS - வலமைப்பை பாதுகாக்கும் நோக்கில் செயற்பட முற்படுவது, மிகவும் மோசமான தவறாகும். எனவே இந்த விடயம் தொடர்பில் பேச முற்படுபவர்கள், இது தொடர்பில் ஆழமாக கற்றுக்கொள்வது அவசியம். குறிப்பாக ஐ.எஸ்.ஐ.எஸ். வலைமைப்பு தொடர்பிலான தங்களின் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

# நல்லூரில் சுகாதாரத் திருவிழா

## உடல் பாகங்களில் புற்றுநோய் இருக்கின்றமையை கண்டறிய புதிய தொழில்நுட்பம் மூலம் சோதனை

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி யாழ் போதனா வைத்தியசாலை புற்று நோயியல் பிரிவினரின் ஏற்பாட்டில் 'வரும் முன் காப்போம்' சுகாதாரத் திருவிழா விழிப்புணர்வு செயற்பாட்டை நடத்தி வருகின்றனர்.



புற்று நோயியல் சத்திரசிகிச்சை நிபுணர் கணேசமூர்த்தி சிறிதரன் தலைமையிலான மருத்துவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் இவ் விழிப்புணர்வு செயற்திட்டம் மாலை 6.00மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை வரை நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இலவசமாக இடம் பெற்று வருகின்றது.

இச் செயற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுடன் அடிப்படை மருத்துவ பரிசோதனைகள் உடல் பருமன், குருதி அமுக்கம், நீரிழிவு, பெண் நோயியல், புற்றுநோயியல் , மற்றும் உணவு , விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி பிரிவு என பல்வேறு மருத்துவப் பிரிவினராலும் ஆண் பெண் வேறுபாடின்றி அனைத்து வயதினருக்கும் பரிசோதனைகள் இடம் பெற்று வருவதுடன் நோய் நிலை தொடர்பான ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப் பட்டு வருகின்றன.

அதேவேளை புற்று நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு சுகமடைந்தவர்களின் அனுபவங்கள் வீடியோக் காட்சியாக காண்பிக்கப்படுவதுடன் யாழ் பரியோவான் கல்லூரி யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மற்றும் யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களின் பங்குபற்று



தலுடன் விழிப்புணர்வு நாடகமும் பாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீட பழைய மாணவர்கள் அமைப்பின் கனடா கிளையினரும் மற்றும் கேன் அமைப்பினரினதும் அணுசரணையில் இடம் பெற்று வரும் இச் செயற்திட்டத்தில்

மிக முக்கிய விடயமாக தொழில்நுட்ப பயன்பாட்டினூடாக தொலைபேசியில் கண்களை படம் எடுத்து கண்கள் ஊடாக புற்றுநோய்த் தாக்கம் அல்லது ஆரம்ப அறிகுறிகள் உடலின் பாகங்களில் இருக்கின்றமையினை கண்டறியும் புதிய தொழில் நுட்பத்தினையும் கண்டுபிடித்து பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே , ஆலய சூழலில் இடம்பெறும் இப் பணியில் மக்கள் பங்குபற்றி தம் உடல் சுகாதார நிலைமைகளை அறிந்து கொள்ளும்படி வைத்தியர் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இப்பரிசோதனையில் பங்குபற்றிய திருமதி ப. யோகலெட்சுமி குறிப்பிடுகையில்-

கண்களை படம் எடுத்து பார்க்கும் பரிசோதனை பற்றி சொல்லும்போது புரியவில்லை. புற்றுநோய் என்ற பெயரைக் கேட்பதே பயம். அந்த நிலையில் பரிசோதனை செய்து பார்ப்போம் என்று செய்துள்ளேன். வழமையான கண் பரிசோதனை போன்றுதான் ஆனால் கைபேசி ஊடாக தான் படம் பிடித்தனர்.அதன் முன் இது ஒரு பரீட்சார்த்த



முயற்சி பின் விளைவு இல்லை. உடலின் வெவ்வேறு பாகங்களில் இருந்து நோய்த் தாக்கம் இருப்பதற்கான அறிகுறிகளை கண்டறிதல் மட்டுமே என சம்மத ஒப்பந்தம் வாங்கிக் கொண்ட பின்பே பரிசோதனை செய்தனர்.நம்பிக்கையோடு செய்துள்ளோம்- என்றார்.


வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகையில்-

கோவில் அயலில்தான் உள்ளேன். கான்ஸர் என்றால் எடுத்ததும் எல்லோரும் இறப்பதில்லை. இப்படி விழிப்புணர்வு அவசியம்தான். கண்ணைப் படம் பிடிக்கும் பரிசோதனை செய்துள்ளேன் - என்றார்.

எனவே தம் உடல் உள சுகாதாரம் தொடர்பில் கவனம் கொள்ளவேண்டிய சமுதாயப் பொறுப்பு மிக்க பணியை வழங்கி வரும் புற்றுநோயியல் பிரிவிற்கு சென்று எம்மை நாமே பரிசோதிக்க முன் வருவது அவசியம் ஆகும்.

இவ்வருட நல்லூர் உற்சவ காலத்தில் மட்டுமன்றி 40 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தயக்கமின்றி யாழ் போதனா வைத்தியசாலையின் 'புற்று நோயை ஆரம்பத்தில் கண்டறியும் மையம்' பிரிவில் 021 222 2640 அல்லது 070 777 2640 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -94

# பணியிடங்களில் கைத்தொலைபேசி பாவனையா?

கணபதி சர்வானந்தா

“கைத்தொலைபேசி இன்றியமையாது உலகம்”என்பது போல கூடவே கைத்தொலைபேசியை வைத்திருக்கும் பழக்கம் அநேகரிடம் காணப்படுகிறது.அது இல்லாவிட்டால் இவ்வுலகம் இல்லை என்றது போலாகிவிட்ட நிலையில் அது இல்லாமலும் வாழலாம் என்று சிலர் உதாரண புருஷர்களாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதுவும் குறிப்பிடப்பட வேண்டியதொன்று.

யாழ்.நகரில் பல வியாபார நிறுவனங்களை வைத்து நடத்தி வரும் ஒரு முக்கிய பிரமுகரிடம் கைத்தொலைபேசி இல்லை. கைத்தொலைபேசி இல்லாமலும் பல கோடிகள் பெறுமதியான நிறுவனத்தை நடத்திச் செல்லலாம் என்பதற்கு அவர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

அது மட்டுமல்லாது நான் அடிக்கடி சென்றுவரும் ஓர் அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தங்கள் கைத்தொலைபேசியை உள்ளே கொண்டு செல்ல அனுமதி இல்லை. பணிக்குச் சேர்த்துக் கொள்ளும்போது அது பற்றிய விளக்கமும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அவசர நிலைமையில் அவர்களுக்கு அழைப்பை ஏற்படுத்த அல்லது ஏற்றுக் கொள்ள அங்குள்ள அச்சகத் தொலைபேசியை அவர்கள் தாரளமாகப் பயன்படுத்தலாம். அதற்கு அனுமதியுண்டு.

பொதுவாகப் பொதுப் போக்குவரத்துகளில் கைத்தொபேசியினால் ஏற்படுத்தப்படும் இம்சைகளைத் தாங்க முடிவதில்லை. சில நாட்களுக்கு முன்னர் வவுனியாவுக்குப் போய்வர வேண்டிய தேவை உண்டானபோது யாழ்.நகரில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சேவைக்குரிய பஸ் ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டேன். மூன்று பேர் அமரக் கூடிய இருக்கையில் நடுவில் நான் அமர்ந்திருந்தேன். எனக்கு இடது புறத்தில் அமர்ந்திருந்தவர் கையில் காணப்பட்ட கைத்தொபேசியில் அவர் வடிவேலு நகைச்சுவையை இரசித்துக்கொண்டிருந்தார். வலது பக்கத்தில் இருந்தவருக்கு அழைப்புகள் வருவதும் போவதுமாக இருந்தது. நடுவில் இருந்த எனக்கு இருபுறமும் அவர்கள் தந்த நெருக்கடிகள் தாங்க முடியாது தருணம் பார்த்து கிளிநொச்சியில் இடம் மாறிக் கொண்டேன்.

இப்படிப் பல அனுபவங்களை எடுத்துச் சொல்லலாம். தொழில் நுட்பம் என்னதான் வளர்ச்சிப் பாதைக்கு வழிவகுத்திருந்தாலும் கூடவே பல வேண்டாதவைகளையும் எம் மத்தியில் விதைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு கிராமத்திலுள்ள வயது வந்த ஒருவருக்குக் கைத்தொலைபேசியில் இட்டுப் பயன்படுத்தக் கூடிய சாதாரண அட்டைக்கும் டேற்றா அட்டைக்கும் வித்தியாசத்தைத் தெரிய வைத்ததுதான் நவீன தொலைபேசிக் கம்பனிகளின் வெற்றி எனலாம். பல குடும்பங்களின் உறவு முறிவுக்குக் காரணமாக இக் கைத்தொலைபேசி இருந்திருக்கிறதென்பதுதான் ஆச்சரியப்படக் கூடிய உண்மை.

“வேலை செய்யும் இடங்களில் கைத்தொலைபேசிப்ப பாவனை பலருடைய கவனக்குறைவுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. கடமை நேரத்தில் நிறுவனத்தின் பொதுத்தொலை பேசிகளை மட்டும் பாவிக்கும் முறையை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.” என தனது முகநூலினூடாக ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார் லதா கந்தையா. அவர் தொடர்ந்து அது பற்றிப் பதிவிடுகையில்...

இது ஒரு பொது மனநிலை

அலுவலகத்தேவைகள் , அலுவலக மற்றும் மருத்துவத்தில் சில கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் சில தரவுப் பரிமாற்றங்கள்..... குறிப்புக்கள் , உரையாடல்கள் என்பன இத் தொலைபேசியினூடாகவே நடைபெறுகின்றன. அதனால் அதை எப்படித் தடுப்பது? என்ற கேள்வியை முன்வைக்கலாம்.

ஆனால் , அந்த அந்த அலுவலகம் / நிறுவனத்தில் உள்ள பொதுத்தொலைபேசி, தொலைநகல் (Fax) , கணணிகள் (Computer) ஊடாக வேலைத்திட்டங்களை மேற்கொள்வதே சிறப்பானது. ஆரோக்கியமானதும் ஆகும்.

தனிப்பட்ட தொலைபேசிகள் கடமை நேரத்தில் பாவிக்கும் போது, காதல், வீண் அரட்டை, அலுவலகத்தில் இருந்தபடியே அலுவலக வேலையை மேற்கொள்ளாது கைத்தொலை பேசியூடாகப் பிறிதொரு நிறுவனத்தினுடைய அல்லது பிறிதொரு வெளி வேலையை நடத்துதல் போன்ற செயற்பாடுகள் துறை சார்ந்த வேலையில் கவனமின்மையை ஏற்படுத்துகின்றது. சிலர் இரட்டிப்பு உழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காகத் தமது கடமை நேரத்தை பயன்படுத்தியும் கொள்கிறார்கள்.

இது தம்மை நாடிவரும் மக்களுக்கான பணியைத் திறம்பட மேற்கொள்ள முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றது. கடமைக்கு வந்த பின்பு குடும்ப நெருக்கடிகளையும், நண்பர்கள் அரட்டையையும், பிறிதொரு வெளிவேலைகளையும் தொடரும் போது, தமக்கான கடமைநேரத்தில் கடமையைச் சிறப்பாக மேற்கொள்ள முடியாத நிலையும் அதன் மூலமான விளைவுகளும் ஆரோக்கியமற்றதாகவும் அமைகின்றன.

இது மிகமுக்கியமாக மருத்துவம் சார்ந்த துறைகளில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும். சிகிச்சைக்கு வரும் நோயாளர்களின் மீது பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும். கவனக்குறைவால் மருந்துகளை மாற்றி கொடுத்து சிக்கலிலும் தள்ளிவிடும்.அது மட்டுமன்றி தொலைதூரத்தில் இருந்து சேவைநாடிவரும் மக்களின் நேரத்தோடும் விளையாடுகின்றது. மக்கள் அதிகாரிகள் தொலைபேசி கதைத்து முடியும் வரை காத்திருக்க வேண்டும். அது மட்டுமன்றி வேலைத்தேக்கத்துக்கும் காரணமாகிவிடும்.

பொதுத்தொலைபேசியில் அவ்வாறு செய்ய முடியாது. மேலதிகாரியால் கண்காணிக்கப்படும். இது ஆரோக்கியமான விடயமும். எந்தத்துறையானாலும் ‘தலை’வர் சரியாக இருக்க வேண்டும். - என லதா தனது பதிவை முடித்திருக்கிறார்.

முன்பு ஒரு காலத்தில் பணியாளர்களுக்குக் கவனக் குறைவை ஏற்படுத்திவிடும் என்று வானொலிகளை காரியாலயத்துக்குள் அனுமதித்ததில்லை. தற்போது தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அலுவலங்கள் இல்லை என்று சொல்லுமளவுக்கு அவைகள் தாராளமாகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதனை ஒரு உளவியல் சார்ந்த நிலையாக விளக்க முற்பட்டாலும் எமது சூழலுக்குப் பொருத்தமற்ற விடயம் என்பதுதான் உண்மை.

•

# இந்தவார ராசிபலன் 10.09.2023 - 16.09.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 24

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 -

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சில காரியங்களில் அதிக முயற்சியும், நண்பர்களின் ஆதரவும் தேவைப்படலாம். பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில், பதிவேடுகளை இடம் மாற்றி வைத்து விட்டு அவசியத் தேவைக்கு உடனே கிடைக்காமல் சிரமப்பட நேரலாம். சகப் பணியாளர்களுடன் வீண் விவாதங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. கூட்டு வியாபாரம் சுமாராக நடந்தாலும், வழக்கமான லாபம் குறையாது.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

நீங்கள் ஈடுபடும் காரியங்கள் பலவற்றில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். திட்டமிட்ட பணவரவுகள் சரியான நேரத்தில் கைக்குக் கிடைக்கும். சகோதரர்களிடம் பொறுமை காக்க வேண்டியது அவசியம். உத்தியோகத்தில் சிலருக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். பணிகளில் கவனமாக இல்லாவிட்டால், உயர் அதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக்காக நேரிடும். சொந்தத் தொழில் செய்பவருக்கு, புதிய வாடிக்கையாளர் மூலமாக பணி கிடைத்து, அதில் வருமானமும் ஈட்டுவார்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

தடைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். எதிர்பார்க்கும் தன வரவுகளில் மாற்றம் இருக்காது. சிலருக்கு அரசாங்கத்தின் மூலம் விருது, பாராட்டு கிடைக்கக்கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, சகப் பணியாளர்களிடம் மதிப்பு உயரலாம். உயரதிகாரிகளின் ஆதரவையும், அதன் மூலம் சில சலுகைகளையும் பெறுவீர்கள். எதிர்பார்ப்புகள் அனுகூலமாகலாம். பணிகளின்போது முக்கிய கோப்புகளில் கவனம் தேவை. சுயதொழில் செய்பவருக்கு அதிக ஆதாயத்துடன் கூடிய புதிய வேலை வந்து சேரலாம்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

எடுக்கும் முயற்சிகள் சிலவற்றில் வெற்றி காண்பீர்கள். என்றாலும் வெள்ளிக்கிழமை பகல் 1.12 மணி வரை சந்திராஷ்டமம் உள்ளதால், சில காரியங்களில் எதிர்பார்த்த முன்னேற்றம், பண வரவு தாமதமாகும். உத்தியோகத்தில் சிலருக்கு பொறுப்புகள் அதிகமாகலாம். தள்ளி வைத்த வேலையை உயரதிகாரிகளின் விருப்பப்படி உடனே செய்ய நேரிடும். சொந்தத் தொழிலில் முன்னேற்றம் காணப்படும். புதிய வாடிக்கையாளர் வரவு திருப்தி அளிக்கும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உத்தியோகஸ்தர்கள், உயரதிகாரிகளிடம் வைத்த கோரிக்கை நிறைவேறும். நீண்டகால நண்பர் ஒருவர் அலுவலகம் வந்து உங்களை சந்திக்கலாம். அவசியமில்லாத பேச்சுகளால் அவதூறை சந்திக்க நேரிடும். சொந்தத் தொழில் செய்பவர்கள் சுறுசுறுப்பாகப் பணிகளில் ஈடுபடுவர். விரைவான செயல்பாட்டால், வாடிக்கையாளரின் பாராட்டைப் பெறுவீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் நன்றாக நடைபெறும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பண வரவுகளில் தாமதங்கள் ஏற்படக்கூடும். குடும்பத்தோடு வெளியூர் பயணங்கள் செல்லத் திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் அவசரமாகச் செய்த பணியொன்றில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வீர்கள். உயர் அதிகாரி சொல்லும் பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்யளிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள், தொழிலில் நல்ல அனுப வம் உள்ள உதவியாளர் ஒருவரை பணியமர்த்திக் கொள்ளத் திட்டமிடலாம். கூட்டு வியா பாரம் செய்பவர்களில் ஒருவர் மனவேறுபாடு காரணமாகப் பிரிந்து செல்லக்கூடும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

சிலவற்றில் தளர்வு ஏற்படலாம். நிதானித்து செயல்பட்டால் பிரச்சினைகள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள், தங்கள் பொறுப்புகளில் மிகவும் கவனமாக இல்லாவிட்டால், உயரதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரலாம். எதிர்பார்ப்புகள் சாதகமாகலாம். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். நவீன கருவிகளின் துணையோடு விரைவாக செய்து கொடுத்துப் பாராட்டுப் பெறுவார்கள். கூட்டுத்தொழில் செய்பவர்கள், வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபத்தைப் பெறுவர்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

செய்யும் காரியங்களில் தடை தாமதங்கள் குறுக்கே வந்தாலும் அவைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேலைப் பளுவினால் தொல்லைப்பட நேரலாம். அவசியமான வேலை ஒன்றை அவசரமாகச் செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும். சொந்தத் தொழிலில் முக்கிய பணியை நிறைவேற்ற அலைச்சலை சந்திப்பீர்கள். வரவேண்டிய ஆதாயம் தள்ளிப் போகலாம்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

முக்கியமான காரியங்களில் அதிக முயற்சியோடு செயல்பட்டு முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். சில செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் உண்டாவதில் தடை வரும். முக்கிய நபரின் அறிமுகம் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தில் சிலருக்கு முக்கிய பொறுப்புகள் வந்துசேரும். அலுவலகத்தில் நீண்ட காலமாக எதிர்பார்த்த கடன்கள் கைக்குக் கிடைத்து, நின்று போய் இருந்த வேலைகளைத் தொடருவீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எடுத்த செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் போராடுவீர்கள். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அலுவலகத்தில் அதிக பொறுப்புகளுடன் பதவி உயர்வும் கிடைக்கலாம். சகப் பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள் ஓய்வில்லா மல் பணிகளில் கவனம் செலுத்துவார்கள். தொழில் முன்னேற்றத்துக்குப் புதிய வாடிக்கையாளர் பெரிதும் உதவியாக இருப்பார்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

முன்னேற்றமான பலன்களை அடையும் வாரம் இது. அவசியமான நேரத்தில் முக்கியமான நண்பர்கள் கண்களில் படமாட்டார்கள். நினைத்தபடி வேலைகளைச் செய்ய முடியாமல் தடங்கல்கள் வரலாம். உத்தியோகத்தில், கவனக்குறைவால் சில தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். சகப் பணியாளர்களின் குடும்ப விவகாரங்களில் தலையிட்டால் விபரீதங்கள் ஏற்படலாம். பணிகளில் கவனமாக இல்லாவிட்டால், உயர் அதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக்காக நேரிடும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உங்கள் முயற்சிகள் பலவற்றில் வெற்றிகரமான போக்கு காணப்படும். தளர்வடைந்த காரியங்களில், தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தனவரவுகள் குறிப்பிட்ட காலத்தில் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, திறமையைப் பாராட்டி முக்கிய பொறுப்புகள் வழங்கப்படலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள், புதிய வாடிக்கையாளர் வருகையால் பொருளாதார முன்னேற்றம் பெறுவர். பணிகள் அதிகரிப்பதால் காலம் பார்க்காமல் பணியாற்ற வேண்டிய சூழல் ஏற்படும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும்.

# இந்தியாவை உலுக்கும் உதயநிதியின் 'சனாதன தர்ம' புயல்!




தமிழகத்தை ஆளும் திமுகவின் இளவரசர் உதயநிதி ஸ்டாலின் ஒரு மாபெரும் அரசியல் புயலைக் கிளப்பியிருக்கிறார். அது, நாடெங்கும் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது.

செப்டம்பர் 2ஆம் திகதி சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கம் நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய உதயநிதி, "சனாதன தர்மம் என்பது கொசுக்கள், டெங்கு, மலேரியா போன்ற தீமை. அதை ஒழிக்க வேண்டும், வெறுமனே எதிர்த்தால் போதாது. சனாதனம் என்றால் என்ன? இந்தப் பெயரே சமஸ்கிருதத்தில் இருந்துதான் உண்டானது. சனாதானம் சமத்துவத்திற்கும் சமூகநீதிக்கும் எதிரானது. சனாதனம் என்பதன் பொருள் என்ன?

நிலையானது, மாற்றமுடியாதது, யாரும் கேள்வி கேட்க முடியாதது என்பதுதான் இந்த சனாதானத்திற்கு அர்த்தம்." என்று பேசியிருந்தார்.

அவர் இவ்வாறு பேசியவுடன், ஒரு பிரளயமே கிளம்பிவிட்டது. இந்தியாவில் பெரும்பான்மையாக உள்ள இந்துக்களை அவமதித்ததாக பாஜகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் அவர்மீது குற்றம் சாட்டினர். உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மோடி அரசின் உயர்மட்ட அமைச்சர்களும் உதயநிதியைக் கடுமையாகச் சாடினர். சனாதன தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என இந்துக்களின் இனப்படுகொலையை உதயநிதி தூண்டியதாகக் காவித் தலைவர்கள், இந்து அமைப்புகள் மற்றும் இந்து மடாதிபதிகள் பலர் குற்றம் சாட்டினர். பாஜக மூத்த தலைவர் யோகி ஆதித்யநாத் முதலமைச்சராக ஆட்சி செய்யும் உத்தரபிரதேசத்தில் மடாதிபதி ஒருவர், உதயநிதியின் தலைக்குப் பத்து கோடி ரூபாய் பரிசு அறிவிக்கும் அளவுக்குச் சென்றார். இந்துக்களின் இனப்படுகொலையைத் தூண்டியதாகவும், பெரும்பான்மை சமூகத்திற்கு எதிராக வெறுப்பைப் பரப்பியதாகவும் உதயநிதிமீது நடவடிக்கை எடுக்கக் கோரி பல காவிக் கட்சியினர் இந்திய உச்ச நீதிமன்றம் உட்பட, பல்வேறு நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்துள்ளனர். சமூக ஊடகங்களில் அதிகம் உலவி வரும் பாஜகவின் அமித் மாளவியா தனது ட்வீட்டில், "சனாதன தர்மத்தைப் பின்பற்றும் 80 சதவீதமான பாரதீயர்களின் இனஅழிப்புக்கு அழைப்பு" விடுத்ததாக உதயநிதி மீது குற்றம் சாட்டியுள்ளார். எதிரணி கூட்டணியின் ஒரு முக்கிய அங்கமாகவும் காங்கிரஸின் நீண்ட நாள் நட்பிலும் இருக்கும் திமுகவைச் சுட்டிக்காட்டிய அவர், "மும்பைக் கூட்டத்தில் இதற்குத் தான் (இன அழிப்பு) ஒப்புக்கொள்ளப்பட் டதா?" என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். அண்மை யில், பாஜகவின் எதிர்க்கட்சித் தலைவர்கள் மும்பையில் நடத்திய கூட்டத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சர்ச்சை குறித்து இதுவரை காங்கிரஸ் மௌனம் காத்து வருகிறது. சனாதனத்தின் மீதான உதயநிதியின் இந்தத் தாக்குதல், வரும் மே மாத நாடாளுமன்றத் தேர்தலில் தனக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று ஒருவேளை அக்கட்சி உணர்ந்திருக்கலாம். காங்கிரஸ் கூட்டாளி திமுக, இந்து ஒரு டெங்கு, அதை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறது என்ற பிரச்சாரத்தை வட இந்தியாவில் பாஜக ஆதரவாளர்கள் தொடங்கி விட்டார்கள். இது, காங்கிரஸ் தலைமையைக் கதிகலங்கச் செய்திருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியும் உதயநிதி



யின் சனாதன ஒழிப்புக் கருத்துக்களை விமர்சித்ததுடன், செப்டம்பர் 9-10 திகதிகளில் டெல்லியில் நடக்கும் ஜி-20 உச்சி மாநாட்டைப் பற்றி விவாதிக்கக் கூட்டப்பட்ட தன் அமைச்சரவைக் கூட்டத்தில், உதயநிதியின் கருத்துக்கு சரியான பதிலை அளிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார். சாதிப் பாகுபாடு போன்ற சனாதன தர்மத்தின் எதிர்மறை அம்சங்களின் அடிப்படையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒரு பழங்குடியினப் பெண் என்ற காரணத்திற்காகத் தான் புதிதாகக் கட்டப்பட்ட நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு அவரை அழைக்கவில்லையோ என்று திமுகவினர் கேள்வி எழுப்பியதையடுத்து, மோடி கலக்கமடைந்ததாகத் தெரிகிறது.

முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது மகன் உதயநிதிக்கு ஆதரவாகப் பேசியதுடன், உண்மையில் அவர் என்ன பேசினார் என்பது பற்றிய முழு விவரம் தெரியாமல் பிரதமர் மோடி பேசுவதாகவும் குற்றம் சாட்டினார்.. "மணிப்பூர் பற்றியோ, சி ஏ ஜி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 7.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முறைகேடுகள் பற்றியோ பிரதமரும் ஒன்றிய அமைச்சர்களும் இன்னும் வாயே திறக்கவில்லை. ஆனால், சனாதனத்தைப் பற்றிப் பேசியவுடன் ஒன்றிய அமைச்சரவையே கூடி இருக்கிறது என்றால் இவர்கள் தான் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங் குடியின மக்களைக் காப்பாற்றப் போகிறார்களா? பெண்ணினத்தை முன்னேற்றப் போகிறார்களா?" என்று முதல்வர் ஸ்டாலின் தன் காட்டமான அறிக்கையில் கேள்வி எழுப்பினார்.



## காவிப் பேரரசுக்கு பின்வாங்காத தென்மாநில திராவிட அரசு!

தொடர்ந்து தன் கருத்தை விவரித்த அவர், "அதனால்தான் நேற்று அண்ணல் அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர்கூட, தீண்டாமையை ஆதரிக்கும் சனாதனத்தை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? என்று கேட்டுள்ளார். இதற்குப் பிரதமரின் பதில் என்ன?" என்று வினா எழுப்பியுள்ளார்.

"பாஜகவுக்கு எதிரான கட்சிகள் அனைத்தும் சேர்ந்து உருவாக்கியுள்ள I.N.D.I.A கூட்டணியானது, பிரதமரை நிலைதடுமாற வைத்துவிட்டது. 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' என ஏதோ பூச்சாண்டி காட்டி வருகிறார். நாடாளுமன்றத் தேர்தலைப் பார்த்துப் பயந்திருப்பது பாஜகதானே தவிர, I.N.D.I.A கூட்டணி அல்ல" என்று ஸ்டாலின் கூறினார். "பாஜகவுக்கு இப்போது வந்திருப்பது சனாதனத்தின் மீதான ஈடுபாடு அல்ல. I.N.D.I.A

## எதிரணி கூட்டணிக்குள் விரிசலை ஏற்படுத்தும் பா. ஜ. க. வின் அரசியல் கணக்கு?

கூட்டணிக்குள் எப்படியாவது விரிசலை ஏற்படுத்திவிட முடியாதா என்ற அரசியல் கணக்கு, இதைப் புரிந்து கொள்ளப் பெரிய அரசியல் வித்தகம் எதுவும் தேவையில்லை. மேலும், ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பாகவத்கூட, 'சமூக அமைப்பில் சக மனிதர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டோம். அவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. மேலும், அது 2000 ஆண்டுகளாகத் தொடர்கிறது. நாம் அவர்களுக்குச் சமத்துவத்தை வழங்கும் வரை, இட ஒதுக்கீடு உள்ளிட்ட சிறப்புத் தீர்வுகள் இருக்க வேண்டும்' என்று பேசியிருக்கிறார். எனவே, இதற்கு மேலும் உதயநிதி பேசியது தொடர் பாக பாஜகவினருக்கு விளக்கம் வேண்டும் என்றால், மோகன் பாகவத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். பழுத்த அனுபவமும், நாட்டின்மீது மாறாப் பற்றும் கொண்ட தலைவர்கள், அரசியலுக்காக மத உணர்வைக்கிளறி ஆதாயம் தேடும் அற்ப அரசியலைப் புறந்தள்ளி, பாஜகவிடமிருந்து நாட்டைக் காக்கும் கடமையை மேலும் வேகப்படுத்துவார்கள்." என்று ஸ்டாலின் எச்சரித்தார். "திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொரறுத்தவரையில் அதனுடைய கொள்கை, கோட்பாடுகள் என்பவை வெளிப்படையானவை. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றும் இயங்கும் இயக்கம். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடி மக்களுக்கும் சிறுபான்மைச் சமூகத்துக்கும் பெண்ணினத்துக்கும் ஏழை எளிய மக்க ளுக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும்' என்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களது உயர்வுக்காகக் குரல் கொடுத்து வரும் இயக்கம். அதனால்தான் ஆறாவது முறையாக ஆட்சியைக் கொடுத்து அலங்கரித்துள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள். அனைத்து இந்துக்களும் அர்ச்சகர் ஆக முடியும் என்பதை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். இந்தியாவிலேயே முதலில் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை கொடுத்து, சனாதனம் மறுத்ததைச் சாத்தியம் ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். எந்தத் தனி மனித உணர்வுக்கும் மதிப்பளித்து, அவர்களைச் சுயமரியாதை உள்ள மனிதர்களாக ஆக்கி வரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்." என்றும் அவர் கூறினார்.

"இனம், மொழி, சாதி வேறுபாடு இன்றி அனைவரும் ஒருதாய் மக்களாக வாழும் அமைதிமிகு வாழ்க்கையை உறுதிசெய்து வரும் இயக்கம். கொள்கையை அறிவுப் பிரச்சாரம் செய்தவர்களே தவிர, எந்தக் காலத்திலும் வன்முறையில் நம்பிக்கை இல்லாத இயக்கம். அத்தகைய பழம்பேரியக்கத்தின்மீது களங்கம் கற்பிப்பதன் மூலமாக அரசியல் செய்ய நினைத்தால் அந்தப் புதை குழியில், பாஜக தான் மூழ்கும்!" என்று தன் பதிலடியை முடித்தார் முதல்வர் ஸ்டாலின். ஸ்டாலின் மற்றும் அவரது மகன் உதயநிதிக்கு எதிராக பாஜகவின் தமிழகத் தலைவர் அண்ணாமலை சமூக வலைதளங்களில் கடுமையாகச் சாடியுள்ளார். "சனாதன தர்மம் திராவிடத்தின் சமூக நீதிக்கு எதிரானது என்ற பொய்யைக் கூறி அவர்கள் இருவரும் வஞ்சகமாக ஏமாற்றி வருவதாக அவர் குற்றம் சாட்டினார். சனாதன தர்மம், உண்மையில் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் ஒரு வாழ்க்கை முறை என்றும், இந்து மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற அனைத்து மதங்களிலும் உள்ள அனைத்து நல்ல விஷயங்களை உள்ளடக்கியதாகவும் உள்ளது, என்றும் உதயநிதி கூறியது போல், அதை ஒழிக்க முடியாது என்றும் அண்ணாமலை கூறினார். திமுகவில் எப்போதும் செல்வாக்கு மிக்க உயர்சாதி பிராமணரல்லாதார் ஆதிக்கம் செலுத்துவதாகவும், அதே நேரத்தில் அதன் தலைவர்கள் தலித்துகள் மற்றும் பிற ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நலனுக்காகச் செயல்படுவதாகப் பாவனை செய்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார். நரேந்திர மோடியின் 79 பேர் கொண்ட மத்திய அமைச்சரவையில் 20 அமைச்சர்கள் தலித் அல்லது பழங்குடியினர், 11 பெண்கள் மற்றும் 5 சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் (முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள்) உள்ளனர் என்றும், மொத்தம் 35 அமைச்சர்கள் கொண்ட ஸ்டாலின் அமைச்சரவையில் மூன்று தலித்துகள் மற்றும் இரண்டு பெண்கள் மட்டுமே உள்ளனர் என்றும் அவர் புள்ளிவிவரங்களை வெளியிட்டார். "நீங்கள் அவர்களுக்கு (தலித்துகளுக்கு) அரசியல் உரிமை களையும் அதிகாரத்தையும் வழங்கவில்லை; அப்படியென்றால், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றி நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? நீங்கள் பிரசங்கம் செய்வதை உண்மையில் நடைமுறைப் படுத்துவதில்லை..." என்றார்

அவர். அண்ணாமலை 'எக்ஸ்' (ட்விட்டர்) தளத்தில் வெளியிட்ட காணொலி தமிழில் அல்லாமல் ஆங்கிலத்தில் உள்ளது, ஆனால் அவரோ ஸ்டாலினிடம் உரையாற்றுவதாகக் கூறினார். ஒருவேளை, அவர் உண்மையில் தனது செய்தியை டெல்லியில் உள்ள பாஜக மேலிடத்துக்குச் சென்றடையச் செய்ய முயன்றிருக்கலாம். இந்த சனாதன தர்ம சர்ச்சை இந்தியாவில் தலைதூக்குவது பற்றியும், மோடி மற்றும் அவரது அரசாங்கம்மீது ஸ்டாலினின் கடுமையான தாக்குதலைப் பற்றியும் நான் விரிவாக இங்கு விவரித்துள்ளதற்குக் காரணம், இலங்கையின் சமூக-அரசியல் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு பிரச்னையை முன்னிலைப் படுத்துவதற்காக மட்டுமல்லாமல், தலைமுறை தலைமுறையாக நம் சமூகத்தை ஆட்டிப் படைத்து வரும் சாதிப் பாகுபாடு போன்ற மிகவும் உணர்ச்சிகரமான பிரச்னையில் டெல்லியில் உள்ள வலிமைமிக்க காவிப் பேரரசுக்கு எதிராக தென் மாநில மான தமிழ்நாடு எவ்வாறு உறுதியாக நிற்கிறது என்ப தைக் காட்டுவதற்காகவும் தான். இந்த காட்டுத் தீ இன்னும் சில மாதங்களுக்கு, குறைந்த பட்சம் அடுத்த ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் வரை தொடர்ந்து அனல் அடிக்கும். அதே சமயம், எதிர்க் கட்சி கூட்டணியான I.N.D.I.A வலுவடைவதற்கு முன்,

டிசம்பரில் தேர்தலை முன்னெடுத்துச் செல்ல மோடி திட்டமிட்டுள்ளார் என்ற செய்திகள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன. உங்கள் ருசியான ஞாயிறு டிபனுக்கான நேரம் இது, எனவே உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். நமது அடுத்த சந்திப்பில் மோடி அரசு 'இந்தியா'வை 'பாரத்' ஆக மாற்றுவது பற்றியும், ஜி-20 மாநாட்டின் விளைவுகள் குறித்தும் பேசுவோம். வணக்கம்.

# தென்னிலங்கையில் இருந்து கிளம்பும் சர்வதேச விசாரணைக் கோரிக்கைகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சி அலைவரிசை இலங்கை விவகாரங்கள் தொடர்பில் விவரணக் காணொளிகளை வெளியிடும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கிளம்பும் சர்ச்சைகள் சர்வதேச கவனத்தை ஈர்த்து விடுகின்றன.

உள்நாட்டுப் போரின் இறுதி வாரங்கள் பற்றி 'இலங்கையின் கொலைக்களங்கள்' (Sri Lanka's Killing fields) என்ற தலைப்பில் 12 வருடங்களுக்கு முன்னர் சனல் 4 வெளியிட்ட புலனாய்வு விவரணக் காணொளியை நாம் எல்லோரும் பார்த்தோம்.

2011 ஜூன் 14 ஒளிபரப்பான "இலங்கையின் கொலைக்களங்கள்" பிரிட்டனின் தொலைக்காட்சி வரலாற்றில் மிகவும் விரிவிளக்கமான விவரணக் காணொளிகளில் ஒன்று என்று கூட வர்ணிக்கப்பட்டது. அது மோதல் வலயத்தில் இடம்பெற்ற அதிர்ச்சியும் அச்சமும் தருகின்ற கொடூரமான போர்க் குற்றங்களை







உலகிற்கு காண்பித்தது.

ஸ்கொட்லாந்து திரைப்படத் தயாரிப்பாளரும் பத்திரிகையாளருமான கலம் மக்ரேயின் நெறியாள்கையில் பிரிட்டிஷ் தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஜோன் சினோவின் விளக்கத்துடன் வெளியான அந்த காணொளியில் போரில் உயிரத்தப்பிய குடிமக்கள், அந்த காலப் பகுதியில் இலங்கையில் இருந்த ஐக்கிய நாடுகள் பணியாளர்கள், மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச சட்ட நிபுணர்களின் நேர்காணல்களும் இடம்பெற்றிருந்தன.

இலங்கை அரசாங்கத்தினால் 'போலியானது' என்று வர்ணிக்கப்பட்ட காணொளியை மறுதலிக்க பாதுகாப்பு அமைச்சு 'திட்டமிட்ட பொய்கள்' (Lies Agreed upon) என்ற தலைப்பில் விவரணக் காணொளியை தயாரித்து வெளியிட்டது. ஆனால் 'இலங்கையின் கொலைக்களங்களுக்கு' சிறந்த விவரணக் காணொளிகளுக்கான சர்வதேச விருதுகள் சிலவும் கிடைத்தன.

இப்போது 12 வருடங்களுக்குப் பிறகு கடந்தவாரம் (செப்.5) இலங்கை தொடர்பில் சனல் 4 வெளியிட்டிருக்கும் இன்னொரு விவரணக் காணொளி மீண்டும் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது.

2019 ஈஸ்டர் ஞாயிறு (ஏப்ரில் 21) கொழும்பிலும் மட்டக்களப்பிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஆடம்பர ஹோட்டல்களிலும் பல வெளிநாட்டவர்கள் உட்பட 269 பேரைப் பலிகொண்ட குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் 'இலங்கையின் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் - செய்தி அனுப்பீடுகள்' (Sri Lanka's Easter Bombings -dispatches) என்ற தலைப்பிலான புதிய காணொளி அந்த குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் பெரிய அரசியல் சதித்திட்டம் ஒன்று பற்றிய தகவல்களை பிரதானமாக சுவிட்சர்லாந்தில் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கையர் ஒருவரின் நேர்காணலின் மூலம் வெளிப்படுத்துகிறது.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்ற சிவனேசதுரை சந்திரகாந்தனின் ஊடக பேச்சாளராகவும் நிதிச் செயலாளராகவும் முன்னர் பணியாற்றிய ஹன்சீர் அசாத் மௌலானா என்பவரே சனல் 4 அலைவரிசைக்கு நேர்காணலை வழங்கியிருப்பவர்.

ராஜபக்சாக்களை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கு குறிப்பாக கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறவைப்பதற்கு வசதியாக நாட்டில் பாதுகாப்பற்ற அச்சமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடன் தீட்டப்பட்ட சதித்திட்டத்தின் விளைவே ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் என்று நிறுவுவதை இலக்காகக் கொண்டே அசாத் மொலானா தகவல்களை கூறுகிறார்.

குண்டுத் தாக்குதல்களை நடத்த இஸ்லாமிய தீவிரவாதிகளை பயன்படுத்துவதற்கு தனது உதவியை இராணுவ புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே நாடியது பற்றியும் அது விடயத்தில் தான் செய்த காரியங்களையும் கூறும் அவர் பிள்ளையானையும் அந்த சதித்திட்டத்தின் ஒரு பங்காளியாக காண்பிக்கிறார்.

"சதித்திட்டம் பற்றிய தகவல்களுக்கு அப்பால் 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை, பிள்ளையானை முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலைவழக்கில் இருந்து விடுவிக்க நீதித்துறையில் செய்யப்பட்ட தலையீடுகள் போன்ற வேறு விவகாரங்கள் தொடர்பிலும் மௌலான பல விடயங்களை கூறியிருக்கின்றார் என்ற போதிலும் இந்த கட்டுரையின் நோக்கம் சனல் 4 காணொளிக்கு பிறகு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு விடுக்கப்படும் கோரிக்கைகளில் கவனம் செலுத்துவதே என்பதால் அவற்றை அலசுவதை இங்கு தவிர்க்கிறோம்.

'இலங்கையின் கொலைக்களங்கள்' காணொளியை நிராகரித்து அன்றைய அரசாங்கம் அதன் எதிர்வினையைக் காட்டுவதில் அவதானிக்கக்கூடியதாக இருந்த முனைப்பை புதிய காணொளி விவகாரத்தில் தற்போதைய அரசாங்கத்திடம் காணமுடியவில்லை.

ஜெனீவாவில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 வது கூட்டத் தொடருக்கு



**தென்னிலங்கையில் இன்று சர்வதேச விசாரணையைக் கோருபவர்கள் தங்களை நியாயப்படுத்த முன்வைக்கும் காரணங்களே தமிழர்களின் சர்வதேச விசாரணைக் கோரிக்கையின் பின்னணியிலும் இருக்கிறது என்பதை இனிமேலாவது ஒத்துக்கொள்ள முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது.**

முன்னதாக அரங்கேற்றப்படும் ஒரு 'நாடகமாக' சனல் 4 காணொளியை நோக்கும் அரசாங்கம் அதில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஒரு வரம்புக்கு உட்பட்டதாக பதிலளிப்பதே பொருத்தமானது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது.

காணொளியில் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் குறிப்பிடப்படுபவர்கள் மாத்திரம் பதிலளிக்க வேண்டுமே தவிர முழு அரசாங்கமும் அதைச் செய்யத் தேவையில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியதாக கடந்த வாரம் செய்திகள் வெளியான போதிலும், நேற்று சனிக்கிழமை அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக மறுத்து அறிக்கையொன்றை வெளியிட்டது.

காணொளி குறித்து அரசாங்கம் புதிய விசாரணையொன்றை நடத்தும் என்றும் பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைப்பது தொடர்பிலான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் பாராளுமன்றத்தில் அமைச்சர் மனுஷ நாணயக்கார முதலில் அறிவித்தார்.

அதேவேளை இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது தனது முன்னாள் செயலாளர் ஒரு ஏமாற்றுப்பேர்வழி என்றும் அவர் தான் தப்பிப்பிழைப்பதற்காக மற்றவர்களுக்கு துரோகமிழைக்கிறார் என்றும் குறிப்பிட்டார். இலங்கையில் தன்னால் வாழமுடியாது என்று பொய் கூறி மௌலானா வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் கோருகிறார். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவினரே என்பதை கத்தோலிக்கத் திருச்சபையும் மற்றையவர்களும் விளங்கிக்கொள்ளவேண்டும் என்று பிள்ளையான் கூறினார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கடந்த வியாழக்கிழமை நீண்டதொரு அறிக்கையை வெளியிட்டு சனல் 4 காணொளி ராஜபக்சாக்களுக்கு எதிரான வசைமாரி என்றும் அதன் பிரதான நோக்கம் 2005 தொடங்கி ராஜபக்சாக்களின் மரபுக்கு கரிபூசுவதேயாகும் என்றும் கூறியிருக்கிறார். அந்த அலைவரிசையினால் முன்னர் வெளியிடப்பட்ட காணொளிகளைப் போன்றே இதுவும் பொய்கள் நிரம்பியதாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சனல் 4 காணொளி கிளப்பியிருக்கும் சர்ச்சை தென்னிலங்கையில் இருந்து சர்வதேச விசாரணைக் கோரிக்கை கிளம்புகின்ற சூழ்நிலையை தவிர்க்கமுடியாமல் தோற்றுவித்திருப்பது ஒரு புதிய திருப்பமாகும்.

காணொளியின் தகவல்கள் குறித்து சர்வதேச விசாரணைஷயொன்று நடத்தப்படவேண்டும் என்று கொழும்பு அதிமேற்றிராணியார் கர்தினால் மல்கம் ரஞ்சித், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் குறித்த விசாரணை களில் ஆரம்பத்தில் ஈடுபடுத்தப்பட்டு பின்னர் அரசாங்கத்தினால் இடமாற்றம் செய்யப்பட்ட உள்நாட்டு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் சுயாதீன சர்வதேச குழுவொன்றினால் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறிய கர்தினால் மீண்டும் ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அமைப்பது நேரத்தையும் வளங்களையும் விரயம் செய் யும் ஒரு காரியமாகவே முடியும் என்று குறிப்பிடடார்.

உள்நாட்டில் வெளிப்படையானதும் நியாயமானதுமான விசாரணையொன்று நடத்தப்படவில்லை என்பதனாலேயே சர்வதேச விசாரணையைக் கோருவதாக கூறிய பிரேமதாச குண்டுத்தாக்குதல்கள் குறித்து முன்னர் வெற்றிகரமாக விசாரணையை நடத்திக்கொண்டிருந்தபோது அதில் இருந்து நீக்கப்பட்ட குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடம் புதிய விசாரணையை ஒப்படைக்கவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகிறார். பொன்சேகாவும் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் சர்வதேச விசாரணையே வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித்தைப் பொறுத்தவரை ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்களில் பலியானவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றம் ஒன்றின் விசாரணையைக் கோரும் நிர்ப்பந்தம் ஏற்படும் என்று இரு வருடங்களுக்கு முன்னரே கூறியிருந்தார் என்பதும் கடந்த வருடம் மார்ச் மாதம் ஜெனீவா சென்று அன்றைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பாச்லேயை சந்தித்து குண்டுத்தாக்குதலில் பலியானவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நீதி கிடைப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்து தனது விசனத்தை வெளிப்படுத்தி முறையிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் காட்டும் அக்கறையை கர்தினால் கடுமையாக கண்டனம் செய்தார் என்பது முக்கியமாக நினைவுபடுத்தப்பட வேண்டியதாகும்.

காலாதிகாலமாக மத நம்பிக்கையுடையதாக விளங்கி வரும் இலங்கை போன்ற நாடொன்றுக்கு மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் குறித்து 'போதனை' செய்வது மிகவும் கண்டிக்கத்தக்கது. மேற்குலகின் புதிய மதமாக மனிதஉரிமைகள் வந்துவிட்டன என்று ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு முன்னரான காலப்பகுதியில் 2018 செப்டெம்பரில் ஞாயிறு ஆராதனையொன்றில் கர்தினால் கூறியதாக பதிவுகள் உள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஈஸ்டர் தாக்குதல் சனல்-4 ஆவணம் ரணிலுக்கு பாலில் விழுந்த பழமாகுமா?

பனங்காட்டான்

2009 முள்ளிவாய்க்கால் பேரினப்படுகொலை அல்லது இனசங்காரத்தையடுத்து, இதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை தம்வயப்படுத்திய ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் அடுத்த ஏற்பாடு என்னவென்பது இந்த வாரம் (செப்டம்பர் 11) ஆரம்பமாகும் அதன் கூட்டத்தொடரில் தெரியவரலாம்.

2009 மே மாதம் அப்போதைய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கி மூன் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, முள்ளிவாய்க்காலை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து விடுத்த கூட்டறிக்கையின் உத்தரவாதங்கள் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மனித உரிமைப் பேரவையின் ஆணையாளராகவிருந்த நவநீதம் பிள்ளை முன்னெடுத்த முயற்சிகள் தீர்மானமாக வடிவெடுத்து ஒரு தசாப்தமாகி விட்டது. அதன் பின்னர் வந்த ஆணையாளர்களும் - முக்கியமாக மிச்சேல் பச்சிலற் அம்மையார் மேற்கொண்ட நீதி தேடும் முயற்சி சர்வதேச நீதிப்பொறிமுறையையும், பொறுப்புக்கூறலையும் வலியுறுத்தியது. அதற்கான மேலதிக ஆதாரங்களைத் தேடும் பணிக்கென தனி அலுவலகத்தையும் இது நிறுவியது.

2015ல் ரணிலும் மைத்திரியும் இணைந்து உருவாக்கிய நல்லாட்சி அரசு, அப்போது ஜெனிவாவில் அமெரிக்கா முன்னெடுத்த தீர்மானத்துக்கு இணைஅனுசரணை வழங்கி நம்பமுடியாத நம்பிக்கையை ஏற்படுத்தியது. இதனை ரணில் தலைமையிலான நிகழ்கால அரசு பின்வாங்கியது தனி வரலாறு.

ஜெனிவாவின் 46ம் 51ம் அமர்வுகளில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானங்கள் வலுவானவை. இலங்கை அரசை பொறுப்புக்கூறலுக்கும், சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறைக்கும் இது தள்ளியதால் இதனை இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் என்று கூறி சிங்கள பௌத்த இனவாதிகளை ஜெனிவாவுக்கு எதிராக திசை திருப்பி வந்தன இலங்கை அரசுகள்.

கடந்த வருட செப்டம்பர் மாத ஜெனிவா அமர்வின்போது மனித உரிமைப் பேரவை முன்மொழிந்த பரிந்துரைகள் இலங்கை அரசை நெருக்கடிக்குள் தள்ளியதாயினும் அதனை அவ்வாறானதாக அரசு வெளிக்காட்ட விரும்பவில்லை.

முக்கியமாக, பொருளாதார குற்றங்களில் ஈடுபட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜெனிவா கூறியது. சம்பந்தப்பட்டவர்கள் எவரென பெயர்குறிப்பிடப்படவில்லையாயினும், ராஜபக்சக்களையும் அவர்களுடன் இணைந்து இயங்கிய அதிகாரிகளையும் (படைத்தரப்பு உட்பட) ஜெனிவா சுட்டியதென்பது ரகசியமன்று.

சிவிலியன் துறைகளில் ராணுவத்தின் செல்வாக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ராணுவ பிரசன்னத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரப்பட்டது. ராணுவ வசமுள்ள அனைத்து தனியார் காணிகளையும் மீளளித்து, மதத் தலங்களை நிர்மாணித்தல் பற்றிய உரையாடல்கள் நடத்தி நிலப்பூசல் பாரபட்சமின்றித் தீர்க்கப்பட வேண்டுமெனவும் கூறியது.

மதத்தலங்கள் என்று பொதுப்படையாக இங்கு குறிப்பிடப்பட்டதாயினும், அப்போது வெடுக்குநாறிமலை, குருந்தூர்மலை ஆகிய தமிழரின் வழிபாட்டுத் தலங்கள் மீது தொல்லியல் திணைக்களம் மேற்கொண்டு வந்த அடாவடி நடவடிக்கைகளையே இது குறிகாட்டியது.




சர்வதேச குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை விசாரணை செய்வதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் தேசிய அதிகார வரம்புகளின் நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாகவும், உலகளாவிய அதிகார வரம்புகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளின் கீழும் அதற்குரிய சர்வதேச வலையமைப்புகளினூடாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் ஜெனிவா வேண்டியது.

இந்த வாரம் ஆரம்பமாகும் கூட்டத்தொடரில் முற்கூட்டிய அறிக்கையிலும் மனித உரிமைப் பேரவை இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. "நல்லிணக்க முன்னெடுப்புகளை மேற்கொள்வதில் ஜனாதிபதி வேறுபட்ட தொனியை வெளிப்படுத்துவதாகவும், தொல்பொருள் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக காணி சுவீகரிப்பை நிறுத்துவதாக அறிவித்திருப்பதும் உள்நாட்டில் மோதல்களுக்கான பதற்றங்கள் அதிகரிப்பதற்கு ஆதாரமாக உள்ளதாக குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கை, வடக்கு மற்றும் கிழக்கில் காணி தொடர்பான சர்ச்சைகள் தொடர்பில் மனித உரிமைகள் அலுவலகத்துக்கு தொடர்ந்தும் அறிக்கைகள் கிடைத்து வருவதாக குறிப்பிட்டுள்ளது.

மனிதாபிமான சட்டமீறல்களை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு பயணத்தடை மற்றும் சொத்து முடக்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று உறுப்பு நாடுகளிடம் பேரவை விடுத்த வேண்டுகோள் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. இதன் அடிப்படையில் ராணுவத்தளபதி சவேந்திர சில்வா உட்பட படைத்துறையைச் சேர்ந்த சிலருக்கு அமெரிக்கா பயணத்தடை விதித்தது. முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, கோதபாய ராஜபக்ச ஆகியோருடன் இரண்டு ராணுவ அதிகாரிகளுக்கு கனடிய அரசு தடை விதித்ததோடு கனடாவுக்குள் அவர்களுக்கு ஏதாவது சொத்துகள் இருப்பின் அவற்றை முடக்கும் உத்தரவையும் விடுத்தது.

ஜெனிவா தீர்மானத்தின் முன்மொழிவாளர்கள் என்ற வகையில் அமெரிக்காவும் கனடாவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டன. இத்தீர்மானத்தின் அடிப்படையில்தான் இலங்கையிலுள்ள கனடியத் தூதுவர் தமிழர் பிரதேசங்களுக்கு அண்மையில் சென்று பல தரப்பினரையும் சந்தித்து தகவல்களைப் பெற்றதுடன், தொல்பொருள் திணைக்கள ஆக்கிரமிப்புக்குட்பட்டிருக்கும் வழிபாட்டுத் தலங்களையும் சென்று பார்வையிட்டார்.

ஜெனிவா தீர்மானத்தின் பிரகாரமே கனடியத் தூதுவர் தமது பணிகளைப் புரிந்தாரென்பதை புரியும் அறிவற்ற சில சிங்கள அரசியல்வாதிகள் தமது மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் கனடியத் தூதுவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு பிதற்றி தம்மைத் தாமே சிறுமைப்படுத்திக் கொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற மூன்று மாதங்களின் பின்னர் - கடந்த வருட செப்டம்பர் மாத அமர்வின்போது ஜெனிவா விடுத்த அறிக்கையில் இன்னுமொரு முக்கிய அம்சம் உண்டு. 2019ம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பானது இது. இத்தாக்குதலில் பல குழந்தைகள் உட்பட சுமார் 250 பேர்வரை கொல்லப்பட்டனர். இவர்களுள் ஏழு பிரித்தானிய பிரஜைகளும் 43 வெளிநாட்டு உல்லாசப்பயணிகளும் அடங்குவர்.



**ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகும் வேளையில் முள்ளிவாய்க்கால் பேரினப் படுகொலைக்கு பொறுப்புக் கூறும் தீர்மானம் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தப்படலாம். இந்த நேரத்தில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் பல பரிமாணங்களை வெளிப்படுத்தும் சனல்-4 ஆவணம் ராஜபக்சக்களுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தலாம். இதனையிட்டு ரணில் உள்ளூர மகிழவும், தமது வருங்கால அரசியல் வெற்றிக்கான காய்களை லாவகமாக நகர்த்தவும் வாய்ப்பு அதிகமாகும்.**

இந்தத் தாக்குதல் படுகொலைகள் சம்பந்தமான நீதியான விசாரணை சந்தேகத்துக்கிடமின்றி இடம்பெறவில்லை. கோதபாய ராஜபக்ச ஜனாதிபதியாகவிருந்தபோது விசாரணைக் குழுவொன்றை நியமித்து அதன் அறிக்கையைப் பெற்றாராயினும், அதனைப் பகிரங்கப்படுத்தாது குளிரூட்டிக்குள் தள்ளிவிட்டார்.

மாறாக, தாக்குதலின் உண்மையைக் கண்டறிய முனைந்த மூத்த பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். சிலர் இடமாற்றம் செய்யப்பட்டனர். சிலர் திட்டமிடப்பட்டு வெளிநாடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். இவற்றுக்கு எதிர்ப்புறமாக ஜெனிவாவின் அறிக்கை இதுபற்றிக் குறிப்பிட்ட வாசகம் பின்வருமாறு அமைந்திருந்தது:

"உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் தொடர்பான முன்னைய விசாரணைகளின் முழுமையான கண்டுபிடிப்புகளைத் தவிர்த்து சர்வதேச உதவியுடன் தொடர்ச்சியான சுயாதீனமான வெளிப்படையான விசாரணையை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழுப்பங்களிப்பையும் உள்ளடக்கி நிறுவுதல்" என்று இந்தக் கோரிக்கை அமைந்திருந்தது. எனினும், ஒரு வருடமாகியும் ரணில் விக்கிரமசிங்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுனவின் ஆதரவை தம்முடன் தொடர்ந்து தக்க வைத்திருக்கும் நோக்கத்துடன், அவர்களைக் காப்பாற்றுவதற்காக இது தொடர்பான விசாரணையை நடத்த ரணில் விரும்பாது இருந்திருக்கலாம். அல்லது, இவ்விவகாரத்தில் தாம் தொடர்ந்து மௌனம் காப்பதன் வாயிலாக சர்வதேச விசாரணைக்குள் ராஜபக்சக்களை தள்ளி விடலாமென்ற குள்ளநரி தந்திர யுக்தியாகவும் இவ்வாறு அவர் நடந்து கொண்டிருக்கலாம்.

முள்ளிவாய்க்கால் பொறுப்புக்கூறல், அதற்கான சர்வதேச நீதிவிசாரணைப் பொறிமுறை என்னும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் ராஜபக்சக்களை ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்குள்ளும் தள்ளிவிட்டால் அவர்கள் மீண்டும் அரசியலில் ஈடுபட முடியாது போகும் நிலை உருவாகுமானால் அது தமது அரசியல் எதிர்காலத்துக்கு - முக்கியமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றிக்கான போனஸ் ஆக அமையுமென ரணில் எண்ணக்கூடும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவான வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாத சூழ்நிலை இப்போது காணப்படுகிறது. அதேசமயம் ராஜபக்ச குடும்பத்தின் மிக இளையவரான நாமல் ராஜபக்சவை ரணிலுக்குப் போட்டியாக்க சிலர் முனையும் இவ்வேளையில், ஈஸ்டர் தாக்குதல் ராஜபக்சக்களை குப்புற வீழ்த்துமானால், அதையும் தமக்கு சாதகமாக்க ரணில் நினைக்கிறாரென்றால் சனல்-4 ஆவணத்தை அவர் உளமார விரும்புவார்.

வேண்டுமானால் இது தொடர்பான சர்வதேச விசாரணைக்கு அவர் சம்மதித்தாலும் ஆச்சரியப்பட நேராது. இது தொடர்பான சர்வதேச சுயாதீன வெளிப்படையான விசாரணை ரணிலின் எதிர்காலத்துக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

வெளியாகியிருக்கும் சனல்-4 ஆவணம் ராஜபக்சக்களை நோக்கி ஏவப்பட்டிருக்கும் பாணம். இது தொடர்பான விசாரணை ராஜபக்சக்களை எழும்ப முடியாது அடித்து வீழ்த்துமென்றால், அது ரணிலுக்கு பாலில் விழுந்த பழம் போலாகும். இதனை எவ்வாறு அவர் கையாளப்போகிறார் என்பதிலேயே ராஜபக்சக்களின் எதிர்காலம் மட்டுமன்றி அவரின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

# நிலவு மீது ஏன் இந்த திடீர் மோகம்?



- த.வி.வெங்கடேஸ்வரன்

1959 ஜனவரி 2 அன்று ஏவப்பட்ட சோவியத் விண்கலம் லூனா 1, நிலவின் அருகே சென்ற முதல் விண்கலம். அப்போது முதல் தொடங்கிய மனிதனின் நிலவுப் பயணம், 1959 செப்டம்பர் 14 அன்று நிலவில் மோதிய லூனா 2 விண்கலத்தின் வழியாக அடுத்த கட்டத்தை அடைந்தது. 1966 பிப்ரவரி 3 அன்று மென்மையாக நிலவில் தரையிறங்கிய லூனா 9, நிலவில் தரையிறங்கிய முதல் விண்கலம் என்ற பெயரைப் பெற்றது. ஜூலை 1969இல் அமெரிக்காவின் அப்போலோ 11 விண்கலம் முதன்முதலில் நிலவுக்கு மனிதர்களை ஏந்திச் சென்றது.

1970 செப்டம்பரில் ஏவப்பட்ட சோவியத் லூனா 17விண்கலம் நிலவில் தரையிறங்கி, அங்கிருந்து கல், மண் மாதிரிகளைச் சேகரித்து பூமிக்குத் திரும்பியமுதல் தானியங்கி விண்கலம். இப்படிப் பற்பல விண்கலங்களை சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் 1960-70களில் போட்டி போட்டுக்கொண்டு நிலவை நோக்கி ஏவின. கடைசியில், 98ஆவது விண்கலமாக 1976இல் சோவியத் ஒன்றியம் ஏவிய லூனா 24, நிலவில் தரையிறங்கிக் கல், மண் மாதிரிகளைச் சேகரித்து பூமிக்குத் திரும்பியது.

### மீண்டும் நிலவு

அதன் பிறகு நிசப்தம். யாரும் பல பத்தாண்டுகள் நிலவை எட்டிக்கூடப் பார்க்கவில்லை. திடீரென மறுபடி நிலவுக்கு அடித்தது யோகம். 1976க்குப் பிறகு கடந்த ஐந்து ஆண்டுகளாகத்தான் நிலவில் மறுபடி விண்கலத்தைத் தரையிறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் சந்திரனில் தரையிறங்க நடந்த ஏழு முயற்சிகளில் ரஷ்யாவின் லூனா 25, இஸ்ரேலின் பெரேஷீட், ஜப்பானின் ஹகுடோ-ஆர், இந்தியாவின் சந்திரயான் 2 ஆகிய நான்கும் தோல்வியடைந்தன.

சீனாவின் சாங்' இ 4, சாங்' இ 5 ஆகிய இரண்டு விண்கலங்கள், இந்தியாவின் சந்திரயான் 3 ஆகிய மூன்று மட்டுமே வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளன. ஆகஸ்ட் மாத இறுதியில் ஜப்பானின் ஸ்லிம் எனும் விண்கலம் நிலவில் தரையிறங்க முயலும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சாதகமற்ற வானிலை காரணமாக அந்த முயற்சி ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், செப்டம்பர் 7 அதிகாலை அது விண்ணில் ஏவப்பட்டது.

### மோகத்தின் பின்னணி

நிலவு குறித்த பல கேள்விகளுக்கு விடையில்லை. நிலவின் வயது என்ன? நிலவில் நடுக்கங்கள் எப்படி ஏற்படுகின்றன? இந்தக் கோள் எதிலிருந்து பிறந்தது? ஏன் ஆண்டுதோறும் சுமார் மூன்று செ.மீ. பூமியைவிட்டு நிலவு விலகிச் செல்கிறது? இப்படிப் பல மர்மங்கள் உள்ளன. இவற்றை அறிந்துகொள்ளும் அறிவியல் ஆர்வம் ஒருபுறம் இருந்தாலும், நிலவில் அபரிமிதமாகக் கிடைக்கும் அரிய மண் தாதுக்கள் மீதான மோகமும் தற்போது நடைபெற்று வரும் முயற்சிகளுக்கு முக்கியக் காரணம்.

நாம் பயன்படுத்தும் கைபேசியின் தொடுதிரையில் இண்டியம் எனும் அரிய தனிமம் (rare earth element) உள்ளது. லாந்தனம், காடோலினியம், பிரசியோடைமியம், யூரோபியம், டெர்பியம், டிஸ்ப்ரோசியம் முதலிய அரிய னிமங்கள் காட்சித் திரையில் உள்ளன.

நாம் பயன்படுத்தும் மின்னணுக் கருவிகளில் நிக்கல், கேலியம், டான்டலம், மின்கலத்தில் லித்தியம், நிக்கல், கோபால்ட், கைபேசியின் உறைப் பெட்டியில் நிக்கல், மெக்னீசியம், ஒலிவாங்கி - ஒலிபெருக்கிக் கருவிகளில் நிக்கல், பிரசோடைமியம், நியோடைமியம், காடோலினியம், டெர்பியம், டிஸ்ப்ரோசியம் ஆகிய அரிய தனிமங்கள் உள்ளன.

### நான்காம் தொழிற்புரட்சியின் அடிப்படை

இந்தத் தனிமங்கள் பூமியில் கிடைப்பது அரிது. ஆனால், வண்டிக்கு அச்சாணிபோல மின்னணுக் கருவிகளுக்கு இவை இன்றியமையாதவை. நவீன நான்காம் தொழிற்புரட்சிக் கருவிகளான முப்பரிமாண அச்சிடும் இயந்திரம், காற்றாலைகள் போன்றவற்றை உற்பத்திசெய்ய அரிய தனிமங்கள் அவசியம்.

உணவில் உப்பு போடுவதுபோலச் சிறிதளவுதான் இந்த அரிய தனிமங்கள் தேவை. என்றாலும், உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பதுபோல, இந்தத் தாதுக்கள் இல்லை என்றால் மிகக் குறைந்த மின் அழுத்தத்தில் கையடக்க அளவில் திறம்பட வேலை செய்யும் நவீன மின்னணுக் கருவிகள் இல்லை.

ஒருகாலத்தில் நிலக்கரியும் பெட்ரோலியமும் எஃகும் இல்லாமல் தொழில் வளர்ச்சி சாத்தியமில்லை என்ற நிலை இருந்தது. அதேபோல அரிய தனிமங்களே நான்காம் தொழிற்புரட்சியின் அடிப்படை.

சூரியனில் நடக்கும் அணுக்கருப் பிணைவு வழியே ஆற்றலைத் தயாரிக்க இந்தியா, சீனா உள்பட 20 நாடுகள் கூட்டாக பிரான்ஸ் நாட்டின் கடராஷ் நகரத்தில் கட்டப்பட்டுவரும் ஈடெர் எனும் பன்னாட்டு வெப்ப அணுக்கருப் பிணைவு ஆய்வுலையை (International Thermonuclear Experimental Reactor [ITER]) நிறுவி வருகிறார்கள். 'செயற்கைச் சூரியன்' எனக் கூறப்படும் இந்த உலையில், இலகுத் தனிமங்களைப் பிணைத்துக் கன தனிமத்தை உருவாக்கி, ஆற்றலைப் பெறுவதுதான் நோக்கம்.

ஹீலியம் 3 எனும் ஹெலிய ஐசோடோப்பு பயன்படுத்தினால் இந்த உலையை இயக்க முடியும். பூமியில் பத்து லட்சம் ஹெலிய அணுக்களில் சுமார் 300 அணுக்கள் மட்டுமே ஹீலியம் 3 ஐசோடோப்பு ஆகும். ஆனால், ரிகோ லித் எனப்படும் நிலவின் மேல் மண்ணின் ஒரு கிராமில் 30 மைக்ரோ கிராம் ஹீலி யம் 3 உள்ளது. வெறும் ஒரு டன் ஹீலியம் 3 கொண்டு ஈடெர் அணுவுலை அணுக்கருப் பிணைவு மூலம் ஒரு ஆண்டுக்கு இந்தியாவின் ஆற்றல் தேவையைப் பூர்த்தி செய்துவிடலாம்.

நிலவின் மண்ணில் சுமார் 8 வீதம் டைட்டானியம், பொட்டாசியம், பாஸ்பரஸ் செறிவாக உள்ள மணல் பகுதியில் அரிய தனிமங்கள் இருக்கும். எதிர்காலத்தில் நிலவில் நிரந்தரக் குடியிருப்பை அமைத்து அரிய தனிமங்களையும் ஹீலியம் 3 போன்ற விலைகூடிய கனிமங்களையும் வெட்டியெடுத்து வந்துவிடலாம் எனக் கருதப்படுகிறது.

அமெரிக்காவும் ஆர்டிமிஸ் எனும் திட்டத்தின் பகுதியாக மறுபடி மனிதர்களை நிலவுக்கு அனுப்பத் திட்டமிட்டு வருகிறது. சீனாவும் சில ஆண்டுகளில் நிலவில் தளம் அமைப்போம் எனக் கூறிவருகிறது. பல்வேறு நாடுகளும் நிலவை நோக்கிய பயண முனைப்பைக் காட்டுவது இதன் தொடர்ச்சியாகத்தான்.

### நிலவு அரசியல்

வணிகம் என்று வந்தாலே அரசியலைத் தவிர்த்துவிட முடியுமா என்ன? இதுவரை நிலவு மனிதகுலத்தின் பொதுச் சொத்து. யாருக்கும் சொந்தம் இல்லை என்கிற சர்வதேசச் சட்டம்தான் நிலவி வருகிறது. ஆனால், இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் தனியார் நிறுவனங்கள் எடுக்கும் கனிமவளங்கள் மீது உரிமை கொண்டாட வழிவகுக்க வேண்டும் என்ற குரல்கள் எழத் தொடங்கிவிட்டன.

ஏழை சொல் அம்பலம் ஏறுமா? நிலவில் கால் பதிக்காத நாடுகளின் கூக்குரலை யார் செவிமடுக்கப் போகிறார்கள்? நிலவில் உள்ள கனிம வளங்கள் யாருக்குச் சொந்தம் என்கிற பங்கு பிரிப்பில் நமக்கும் பங்கு வேண்டும் என்றால் நாமும் நிலவைச் சென்றடைந்திருக்க வேண்டும். நிலவில் உள்ள விலை மதிப்பில்லாத கனிமவளம் தரும் ஈர்ப்பே நிலவு நோக்கிய இந்த திடீர் மோகத்துக்கு அடிப்படைக் காரணம். ●

# குடிவரவாளர் வருகைக்காக கதவுகளை அகலத் திறந்ததே கனடிய வீட்டுப் பிரச்னைக்கு காரணம்!

## சர்வதேச மாணவர் விசா விரைவில் 'வெட்டு?

கனடாவில் இப்போது பெரும் நெருக்கடியை உருவாக்கியிருக்கும் வீட்டுப் பிரச்சனைக்கு, பெருமளவான குடிவரவாளர்களை உள்ளே வர கனடிய அரசு அதன் கதவுகளை அகலத திறந்ததுதான் காரணமென்ற குற்றச்சாட்டு பல முனைகளிலிருந்தும் கிளம்பியுள்ளது.

குடிவரவாளர்களை உள்ளே வர அனுமதிக்கும் கனடிய மத்திய அரசு, அவர்கள் குடியிருப்பதற்குத் தேவையான தேவைகளை மாகாண அரசுகளுக்கும் நகரசபைகளுக்கும வழங்கத் தவறியதும் இவ்வேளையில் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஒட்டாவாவிலுள்ள மத்திய அரசாங்கமே புதிய குடிவரவாளர்களின் வருடாந்த இலக்கைத் தீர்மானிக்கிறது. இந்த இலக்கு முன்னைய வருடங்களிலும் பார்க்க அடுத்த மூன்று வருடங்களுக்கு அதிகூடியதாகும்.

"குடிவரவாளர்கள் வருகையை திட்டமிட்டு மேற்கொண்டிருப்பின் வீடுகளின் விலை அதிகரிப்பு, வாடகை அதிகரிப்பு என்பவற்றைக் கட்டுப் படுத்தியிருக்கலாம். புதிய குடிவரவாளர்களை உள்வர அனுமதிக்கும்போது இது நடைபெறவில்லை" என்பதைப் பலரும் இப்போது உணரத் தொடங்கியுள்ளனரென எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.

இப்போதுள்ள, மற்றும் இனி வரப் போகின்ற வீட்டு நெருக்கடிகளைத் தீர்க்க அடுத்த ஐந்தாண்டுக் காலத்துக்குள் சுமார் 820,000 மில்லியன் வீடுகள் தேவையாகலாமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனடாவுக்குத் தேவையான வீட்டு வசதி மூலோபாயம் 2017ல் ரூடோ அரசினால் அறிமுகப் - படுத்தப்பட்டது. சமூக வீட்டு வசதிகளைக் கட்டியெழுப்புவதில் அரசாங்கத்தின் ஈடுபாட்டை நிலைப்படுத்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக பல மில்லியன் டாலர்களை செலவு செய்வது அப்போது உறுதிப்படுத்தப்பட்டது.



எஸ்.தி.

இதற்காக 2019ல் வீட்டு வசதியை மனித உரிமையாக அறிவிக்கும் சட்டமும் நிறைவேற்றப் பட்டது.

ஆனால், எதிர் பார்த்த அளவுக்கோ அல்லது முன்னர் அறிவிக்கப்பட்ட அளவுக்கோ முன்னேற்றம் ஏற்படவில்லை. கொரோனா தொற்று நெருக்கடி, மக்கள் தொகை அதிகரிப்பு, குடிவரவாளர் வருகையின் வேகம், வட்டி வீதத்தின் அதிகரிப்பு என்பவை இதற்கான காரணங்களாகக் கூறப்படுகிறது.

குடிவரவு அமைச்சராக அண்மையில் நியமனமான மார்க் மில்லரும், முன்னைய குடிவரவு அமைச்சரும் தற்போது வீட்டு வசதி உட்கட்டுமான அமைச்சராகவுமுள்ள ஷோன் பிறேசரும் நிகழ்காலப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகியுள்ளனர்.

பிரச்சனைகள் எதிர்பார்த்ததைவிட அதிகமானாலும், குடிவரவு இலக்கை மாற்றும் திட்டமெதுவும் கிடையாது என்று அமைச்சர் மார்க் மில்லர் கூறியுள்ளார். புதிய குடிவரவாளர்கள், புலம்பெயர்ந்து வந்தவர்கள் வீடு வசதி சவாலுக்குக் காரணமல்ல என்று தெரிவித்திருக்கும் அமைச்சர் மார்க் மில்லர், கனடாவுக்குள் அனுமதிக்கப்படும் சர்வதேச மாணவர்களின் தொகைக்குத் தேவையான அளவு வீட்டு வசதியில்லாததை ஏற்றுக் கொண்டுள்ளார்.

2021ம் ஆண்டில் கனடிய மக்கள் தொகையில் சுமார் பத்து வீதம் பேருக்கு மலிவு வீட்டு வசதி தேவைப் படுமென்று கருதப்பட்டது. ஆனால் சுமார் 3.5 வீதம் பேருக்கு மட்டுமே இது கிடைத்ததாக கணக்கெடுப்புத் தரவு தெரிவித்துள்ளது. வீட்டு வசதி ஒரு பிரச்சனையாக இருப்பதைக் காரணம் காட்டி குடியிருப்பாளர் வருகையை தடுக்க முடியாமைக்குக் காரணம்,

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வாழ்வுச் செழிப்புக்கும் வேலையாட்கள் தேவையாகவுள்ளது என்று அரச தரப்பு சுட்டிக்காட்டுகிறது. அதே சமயம், கனடாவில் கல்வி பயில வரும் சர்வதேச மாணவர்களுக்கு விசா வழங்குவதை கட்டுப்படுத்துவது பற்றி கனடிய மத்திய அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. பல்கலைக்கழகங்களும் அனுமதி பெற்ற கல்லூரிகளும் இவர்களை அனுமதித்துள்ளதால் தற்போது 800,000 சர்வதேச மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதிப் பிரச்சனையை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சர்வதேச மாணவர் விசாவில் வெட்டு ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

(கனடா தமிழர் தகவல்)



# நீதியைக் கோரி நிற்கும் சிங்களத் தலைவர்களின் இரட்டைமுகம்

கந்தையா அருந்தவபாலன்

இலங்கையில் *2019*, ஏப்ரல் *21* ஈஸ்டர் நாளில் தேவாலயங்களில் நடைபெற்ற குண்டுத்தாக்கு தல்களுக்கான நோக்கம் மற்றும் அதன் பிரதான சூத்திரதாரிகள் தொடர்பான காணொலி ஒன்றினை ‘ சனல் 4’ வெளியிட்டதைத் தொடர்ந்து அக்காணொலியின் உண்மைத் தன்மை தொடர்பாக இயல்பாக எழும் ஐயங்களுக்கு அப்பால் அது உள்நாட்டு அரசியலில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டத்திலும் கூடிய அவதானிப்பு களைப் பெற்ற ஒன்றாக மாறியுள்ளது.

இக்காணொலி தொடர்பாக ராஜபக்ஷக்கள் மற்றும் அவர்களின் தற்போதைய விசுவாசிகளுக்கும் எதிர்த் தரப்பு அரசியல்வாதிகளுக்குமிடையில் காரசாரமான விவாதங்கள் பாராளுமன்றத்துக்குள்ளும் அதற்கு வெளியிலும் நடைபெற்று வருகின்றன. அவ்விவாதங்கள்தொடர்பாக முக்கியமான சில திருப்பங்களை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஒன்று இத்தாக்குதல் தொடர்பாக முன்னர் எதிர்த்தரப்பிலிருந்து ராஜபக்ஷக்கள்மீது விரல் நீட்டிய சிலர், தற்போது ஆளுந்தரப்புக்கு மாறி அமைச்சராக உள்ளவர்கள் ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் வகையில் இதற்கு எதிராகக் குரல் கொடுப்பது. இரண்டாவது தமிழ் மக்களுக்கெதிரான கொலைகள், காணாமல் ஆக்கப்பட்டமை உட்பட்பட யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை அல்லது சர்வதேசப் பொறிமுறைகளுடனான விசாரணை வேண்டுமென்ற தமிழினத்தினும் சர்வதேச அமைப்புகளதும் கோரிக்கையை, இலங்கையின் இறைமை, அரசியலமைப்பு என்ற போலிக்காரணங்களை முன்வைத்து நிராகரித்து வருபவர்களும் அதனை மௌனமாகக் கடந்து செல்பவர்களும் இன்று ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை வேண்டுமென்று கேட்பது. மூன்றாவது குண்டுத் தாக்குதல் நடந்தபோது ஆட்சியில் இருந்தவர்கள் நீதியான விசாரணை ஒன்றினை நடத்துவதற்கு வாய்ப்பிருந்தும் அதைத் தவற விட்டுவிட்டு தற்போது சர்வதேச விசாரணையைக் கோரி நிற்பது. அடுத்தது ராஜபக்க்ஷக்களின் ஆட்சியில் குறிப்பாக கோத்தாபய பாதுகாப்புச் செயலராக இருந்தபோது கருணா, பிள்ளையான் போன்ற குழுக்களைப் பயன்படுத்தித் தமிழ்த்தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் படுகொலைகள் செய்யப்பட்டமை தொடர்பாக அக்காணொலியில் பேசப்பட்டுள்ள போதும் அது தொடர்பாக எதுவும் பேசாது தனியே குண்டுத்தாக்குதலுக்கான விசாரணை தொடர்பாகவே பேசப்படுவது. இவர்கள் மட்டுமல்ல கோத்தாபய கூடத் தன்னிலை விளக்கத்தில் இக்கொலைகள் தொடர்பாக எந்த மறுப்பையும் வெளியிடவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. இவ்விடயங்களை ஆழமாகப் பார்த்தோமானால் பதவிகளுக்காக பச்சோந்திகளாக மாறுவோர் உட்பட நீதி கோரிநிற்கும் சிங்களத் தலைவர்கள் அனைவருமே தமிழருக்கான நீதி தொடர்பாக ஒரு முகத்தையும் சிங்களவர்க்கு இன்னொரு முகத்தையும் காட்டுவது இன்னும் தெளிவாகத் தெரியும்.

இலங்கை ஆட்சியாளர்கள் மீதும், அவ்வாட்சியாளரின் செல்வாக்குக்கும் அழுத்தங்களுக்கும் உட்படும் நீதித்துறை மற்றும் காவல்துறைகள் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்து பல பத்தாண்டுகள் கடந்துவிட்டன. அதனால்தான் தம்மீது மேற்கொள்ளப்பட்ட அத்தனை வன்முறைகளும் ஒடுக்குமுறைகளும் பெரும்பான்மையின ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனப்படுகொலை நடவடிக்கைகள் என்பதால் அவ்வாட்சியாளரின் கீழ் அதற்கு நீதி கிடைக்காது என்பதை உணர்ந்து தமக்கான நீதியைப் பெற்றுத் தருமாறு சர்வதேசத்திடம் அவர்கள் கையேந்தி நிற்கிறார்கள். இதனடிப்படையில் சர்வதேச மனித உரிமைப் பேரவையால் உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக்கூறல், நிலைமாறுகால நீதி தொடர்பாக முன்மொழியப்பட்ட தீர்மானங்களைக் கூட மறுத்தல், காலங்கடத்துதல், ஏமாற்றுதல், நீர்த்துப் போகச்செய்தல் போன்ற உத்திகளின் மூலம் செயலிழக்கச் செய்யும் காரியங்களில் ஆட்சியாளர் மட்டுமன்றி அனைத்துச் சிங்களத் தலைவர்களும் தொடர்ந்து ஈடுபட்டே வருகின்றனர். இவ்வாறு தமிழர்களின் சர்வதேசம் நோக்கிய நீதிக்கான கோரிக்கையை எப்போதுமே ஏளனப்படுத்தியும் மறுத்தும் வரும் இந்தச் சிங்களத் தலைவர்களில் ஒரு பிரிவினர்தான் இன்று ஈஸ்டர்குண்டுத் தாக்குதலுக்கான சர்வதேச விசாரணைக்கு ஓங்கிக் குரல் கொடுக்கின்றார்கள். இதற்காக உள்நாட்டில் உருவாக்கப்படும் ஆணைக்குழுக்களிலோ, புலன் விசாரணைகளிலோ தமக்கு நம்பிக்கை இல்லை என அடித்தும் கூறுகிறார்கள். இன்றுவரை இதனை தமிழ்த்தரப்பு கூறும்போது மறுத்துவந்தவர்கள் இப்போது தமது நலன்களுக்காக கூறத் தொடங்கியுள்ளனர். தங்கள் இனத்தைச் சேர்ந்த பணியாளரையே பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் நீதித்துறை, காவல்துறை மற்றும் ஆணைக்குழுக்களை நம்பாத இத்தலைவர்கள் அவற்றைத் தமிழர்கள் நம்பவேண்டும் என்று கூறுவது எவ்வளவு பொருத்தப்பாடானது? தமக்கே நீதி வழங்காது என்று இவர்கள் கருதும் இலங்கை அரச இயந்திரம் தமிழர்க்கு மட்டும் எப்படி நீதி வழங்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்?

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட அக்கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் பலரும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிலரும் சர்வதேச விசாரணையைக் கோரும் அதேவேளை நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கூட தாம் வெளிநாட்டு விசாணைக்கு தயார் என்று கூறியுள்ளார். அரசியல்வாதிகளின் தேவைக்காக மேற்கொள்ளப் பட்டதாகக் கருதப்படும் *229* அப்பாவி மக்களின் படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியம் எனக்கருதும் அத்தலைவர்களுக்கு அதே அரசியல்வாதிகள் ஆட்சியிலிருந்தபோது மேற்கொண்ட இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்களின் கொலைகளுக்கும் காணாமல் ஆக்கப்பட்டமைக்கும் நீதி கிடைக்க சர்வதேச விசாரணை அதைவிட அவசியம் என்பதை ஏன் உணரமுடியாமலுள்ளது? இன்று வெறுமனே சிலரின் வாக்குமூலங்களைக் கொண்டு

> **இலங்கையில் ஆட்சியாளர்களாலும் அவர்களின் ஆதரவாளர்களாலும் செய்யப்படுகின்ற சட்டத்திற்குப்பறம்பான எந்தவொரு விடயத்திற்கும் உரியமுறையிலான விசாரணைகளோ அன்றிப் பொறுப்புக் கூறலோ இடம்பெறுவதில்லை என்பதே வரலாறு. ஆட்சியாளர்கள் மாறினாலும் அவர்கள் ஒருவரை ஒருவர்காட்டிக் கொடுக்கமாட்டார்கள்**

வெளிப்படுத்தப்பட்ட அக்காணொலியை வைத்து வெளிநாட்டு விசாரணையைக்கோரி நிற்போர் தமிழ் மக்கள் மீதான இராணுவத்தின் பல்வேறு யுத்தக் குற்றங்களை நேரடிக்காட்சிகளுடனும் சான்றுகளுடனும் இதே ‘சனல்4’ ஊடகம் வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களில் இந்தச்சத்தியவான்கள் ஏன் அமைதி காத்தனர்? ஏனெனில் ஒன்றுக்குக் கேட்பது, இன்னொன்றுக்கு கேட்காமல் இருப்பது இரண்டுமே அவர்களின் அரசியல் இருப்புக்கும் தேர்தல் வெற்றிக்கும் அவசியமானவை. தென்னிலங்கையுடன் தொடர்புபட்ட, குறிப்பாகச் சிங்கள மக்களுடன் தொடர்புடைய விடயங்களுக்கு நீதி கோருவது அவர்களது வாக்கி வங்கியை நிரப்புவதற்கு உதவுவது போல தமிழ்மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு குரல் எழுப்பாதிருப்பது அல்லது தடையாக இருப்பதுவும் அவர்களது வாக்கு வங்கியை நிரப்ப உதவும் என்பதனாலாகும்.. இதுதான் அவர்களின் உண்மை முகம். சென்ற ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு ஆதரவு வழங்குமாறு மக்களைக் கேட்ட, இன்றும் அவருடனே கூட்டணி வைத்துள்ள, சில வேளைகளில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் அவருக்கே வாக்களிக்குமாறு கோரக்கூடிய தமிழ்த் தலைவர்களால் சஜித்திடம் ஏன் இக்கேள்வியைக் கேட்கமுடியவில்லை? அதேபோலவே இலங்கை கத்தோலிக்க மக்களின் தலைமைக் குருவாகக் கருதப்படுகின்ற வணக்கத்துக்குரிய பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தொடர்ந்தும் நீதிக்காக குரல் எழுப்பி வருவதுடன் வத்திக்கான் உட்பட பல வெளிநாட்டு நிறுவனங்களிடமும் அது தொடர்பாக முறையிட்டும் உள்ளார். இன்று அவரும் வெளிநாட்டு விசாரணைஅவசியமென்று உரக்கக் கூறுகிறார். மதத் தலைவர் என்ற வகையில் தனது மதத்தினர்க்கு அதுவும் தேவாலயத்தில் புனித நாளொன்றில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட கொடூரம் தொடர்பாக நீதிக்காகஅவர் போராடுவது நியாயமானது மட்டுமன்றி அவசியமானதும் கூட. அதேபோல இந்நாட்டில் அவரது கத்தோலிக்க மக்கள் உட்பட இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக நீதியான விசாரணைக்கு அவர் இதுவரை குரல் எழுப்பா தது ஏன் என்ற தமிழ்க் கத்தோலிக்கரின் கேள்விக்கு அவரது விடை என்ன? துன்பப்படும் மக்களின் மீட்ப ரான கர்த்தரின் சேவகனான பேராயர்துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் தன்னாட்டுத் தமிழ் மக்களுக்கான நீதிக்கு சர்வதேச விசாரணையை ஏன் கோரவில்லை? அவரைப்போன்ற இன்னொரு பேராயரான வண. இராயப்பு ஜோசப் அவர்கள் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் இழப்புகள் பற்றி தரவுகளுடன் வெளிப் படுத்தியிருந்தும் அவற்றுக்காக பேராயர் கர்தினால் நீதி கேட்காதது ஏன்? அவ்வறாயின் பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களால் போதிக்கப்படும் அன்பு, கருணை, பாவப்பட்டோருக்க இரங்குதல் என்ற கர்த்தரின் வார்த்தைகள் எல்லாம் வெறும் வெற்று வார்த்தைகள் தானா? அல்லது அவையும் இனம் சார்ந்தது தானா?

இக்காணொலியை ஏன் ‘சனல் *4*’ இந்த நேரத்தில் வெளியிட்டது என்பது தொடர்பாக பல கேள்விகள் இருந்தாலும் அதில் கூறப்பட்டுள்ள பிரதான விடயங்கள் தொடர்பாகச் சிங்கள மக்களில் ஒருபகுதியினர்க்கு ஐயங்கள் எழுந்தாலும் தமிழ்மக்கள் அனைவர்க்கும் அதன் உண்மைத்தன்மை தொடர்பான கேள்விகள் இருக்காது எனக் கூறலாம். ஏனெனில் கோத்தாபய தொடர்பாகவும் பிள்ளையான், கருணா உட்பட்ட குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் தமிழ்மக்கள் தெளிவாகவே அறிந்து வைத்துள்ளனர். அது மட்டுமன்றி ராஜபக்ஷக்கள் தமது பதவி, அதிகாரங்களுக்காக எந்த எல்லைக்கும் போகத் தயங்காதவர்கள் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியதையும் நாடு கண்டுள்ளது. *2015* இல் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்திருந்தும் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறாது வேறு வழிகளின்மூலம் பதவியில் தொடர முயற்சிகள் எடுத்ததையும் நாடறியும். ஈஸ்டர் தாக்குதல் நடந்த காலத்திலிருந்தே அதன் சூத்திரதாரிகள் ராஜபக்ஷ தரப்பாக இருக்கக் கூடுமென்ற ஐயங்கள் ஏற்கனவே பல அரசியல், மதத் தலைவர்களால் வெளிப்படுத்தப் பட்டும் இருந்தன. ஆனால் அது தொடர்பாக நேர்மையான முறையில் விசாரணைகள் மேற்கொண்டு உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக அதை முஸ்லிம்கள் மீதுமுழுமையாக மடைமாற்றும் செயற்பாடுகளே மேற்கொள்ளப் பட்டன. அத்துடன் அத்தாக்குதல்தொடர்பான தகவல் முற்கூட்டியே கிடைத்திருந்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறிய குற்றத்துக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதும் சில காவல்துறை அதிகாரிகள் மீதும் தண்டப்பணம் விதித்ததுடன் அப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் முனைப்பே காணப்பட்டது.

இலங்கையில் ஆட்சியாளர்களாலும் அவர்களின் ஆதரவாளர்களாலும் செய்யப்படுகின்ற சட்டத்திற்குப்பறம்பான எந்தவொரு விடயத்திற்கும் உரியமுறையிலான விசாரணகளோ அன்றிப் பொறுப்புக் கூறலோ இடம்பெறுவதில்லை என்பதே வரலாறு. ஆட்சியாளர்கள் மாறினாலும் அவர்கள் ஒருவரை ஒருவர்காட்டிக் கொடுக்க மாட்டார்கள். எதிர்க்கட்சியிலிருக்கும் போது ஆட்சியாளரின் முறைகேடுகள் தொடர்பாக உரத்துக் கொடுக்கும் தலைவர்கள் தாம் ஆட்சிக்கு வந்ததும் அவை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுப்ப தில்லை. ஏனெனில் அவர்களும் அதே வேலைகளைத்தான் தமதுஆட்சிக்காலத்தில் செய்வார்கள். இந்தவகையில் அரசியல்வாதிகளிடத்து பரஸ்பர புரிந்துணர்வும்விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் நிறையவே உள்ளன. இதனால் பாதிக்கப்படுவது மக்களும்நாடும் தான். அரசியல்வாதிகளின் இவ்வாறான நடவடிக்கைகளே இலங்கையை இன்றைய மோசமானநிலைமைக்கு கொண்டுவந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் குற்றங்களுக்கு உரிய தண்டனையும் பொறுப்புக்கூறலும் இல்லையென்றால் ஈஸ்டர் தாக்குதல் போல இன்னும் பல தாக்குதல் இடம்பெறவே செய்யும். தமிழ் மக்கள் மீதான பாரிய உரிமை மீறல்களுக்கான நீதி மறுப்புக்கு அனைத்து சிங்களத் தலைவர்களும் உடந்தையாக இருந்தமையே ஈஸ்டர் தாக்குதலைச்செய்வதற்கு சம்பத்தப்பட்டோருக்கு ஊக்கமளித்தது என்பதை இப்போது சர்வதேச விசாரணையைக்கோரிநிற்கும் தலைவர்கள் மட்டமன்றி சிங்கள மக்களும் உணரவேண்டும். ஒரு நாட்டில் மக்களுக்கானநீதியென்பது பொதுவானது. அது இனம்,மதம் போன்ற தனிமனித வேறுபாடுகள் பார்ப்பதில்லை. இவ்வுண்மையை நீதிக்காக்க் குரல் கொடுக்கும் அனைவரும் உணரவேண்டும். அதை விடுத்துமக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதில் அரசியல் தலைவர்கள் இரட்டை முகத்தைக் காட்டினால் எவருக்கும் நீதியை அவர்களால் பெற்றுக் கொடுக்க முடியாது போகும்.

# தர்மலிங்கம் சித்தார்த்தன்:
# அகவை எழுபத்து ஐந்தும் அறுபது வருட அரசியல் வாழ்வும்




**செ.ஜெகநாதன்**
மத்தியகுழு உறுப்பினர், புளொட்

**இன்று அவரது 75வது பிறந்த நாளையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**

தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் சித்தார்த்தன் அவர்களை ஆரம்ப காலகட்டங்களில் அவருடை தந்தையுடனும், தனியாகவும் பார்த்திருந்தாலும் நெருக்கமான பழக்கங் கள் இருந்ததில்லை. கழகத்துடன் செயல்பட ஆரம்பித்ததின் பின்னராகவே அவருடன் நெருக்கமாக பழகும் வாய்ப் பும், சில அரசியல் முடிவுகளை மேற் கொள்ளும் பொழுது அவருடன் கலந்து ஆலோசிக்கும் வாய்ப்புகளும் எனக்கு கிடைத்தன. இலங்கை இந்திய உடன் படிக்கைகக்கு பின்னர் நான் இலங் கைக்கு பயணங்களை மேட்கொளும் போதெல்லாம் அவருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பும் ஒன்றாக அரசியல் செய்யும் வாய்ப்பும் அதிகமாயின.

அவர் சிறுவனாக இருந்தபோது தந்தையுடன் சத்தியாகிரக போராட்டத்தில் கலந்து கொண்டதில் இருந்து இன்று வரைக்குமான போராட்டங்களில் கலந்து கொண்டதோடு அந்த போராட்டங்களில் பிரதான செயல்பாட்டாளருமாக இருந்து வந்துள்ளார். ஆயுத இயக்கங்களில் உருவாக்கம், திம்பு பேச்சுவார்த்தையில் கழகத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டமை, செயலதிபர் அமரர் உமாமகேஸ்வரன், டேவிட் ஐயா ஆகியோரோடு மொரிசியஸ் நாட்டிக்கு உத்தியோக பூர்வ விஜயம், இலங்கை இந்திய உடன் படிக்கை, இந்திய படையினருக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையிலான மோதல், பின்னர் விடுதலை புலிகளுக்கும் இலங்கை படைகளுக்கும் இடையிலான மோதல், விடுதலை இயக்கங்களுக்கு இடையிலான மோதல், பின்னரான ஜனநாயக தேர்தல் அரசியல் என்று அணைத்து காலகட்டங்களிலும் அவர் பயணித்து வந்ததோடு, அந்த சம்பவங்களின் கண்கூடான சாட்சியமாகவும் இருந்து வந்துள்ளார். இன்று ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாறு தெரியாது தம்மை தீவிர தமிழ் தேசிய வாதிகளாக காண்பித்து வரும் சிலருக்கு மத்தியில் சித்தார்த்தன் தன்னை ஒரு போதும் முன்னிலை படுத்தியது கிடையாது. அவரின் அங்க அசைவில் கூட தலைவன் என்ற இறுமாப்பிணை காணமுடியாது. பார்ப்பதற்கு எளிமையாகவும், பழகுவதற்கு ஒரு பண்பான தலைவரும் ஆவார்.

இலங்கை இந்திய உடன்படிக்கை மற்றும் 2009 ஆண்டிக்கு இடைப்பட்ட வருடங்களில், அவரின் உயிருக்கு ஆபத்தான இக்கட்டான, நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கருத்தில் கொண்டு அயராது செயல்பட்டவர். குறிப்பாக வவுனியா இன்று தமிழ் பிரதேசமாக இருப்பதற்கு ஆன சூழ்நிலைமைகளை ஏற்படுத்தியதில் அவரின் வகிபாகம் என்பது பிரதானமானதாகும். அத்துடன் அந்த பிரதேச மக்கள் அவரை இரண்டு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்வு செய்திருந்தார்கள். பெரும்பான்மையின அரசுகள் அவருக்கு பல தடவைகள் அமைச்சர் பதவி தருவதாக அழைத்த போதும், தமிழ் மக்களுக்கு ஒரு முறையான அரசியல் தீர்வு எட்டும் வரையில் எந்த பதவிகளையும் ஏற்று கொள்வதற்கு அவர் மறுத்திருந்தார். செயலதிபர் உமாமகேஸ்வரன் கொலைக்கு பின்னரில் இருந்து இன்று வரைக்கும் கட்சியின் வளர்ச்சியிலும் தமிழ் மக்களின் உரிமை போராடத்திலும் ஏனைய சில தலைவர்களை போல் தன்னை விளம்பர படுத்திக் கொள்ளாது அமைதியாக செயல்பட்டு வருபவர்.

அவருடைய அறுபது ஆண்டுகால அரசியல் அனுபவமும், எழுபத்தைந்து வருட வாழ்நாள் அனுபவமும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு நன்மை பயர்க்க கூடியவகையில் அவர் ஒரு முன்னோடியாகவும், தமிழ் மக்களின் பிரச்சனைகளையும் உணர்ந்து கொண்டு செயல்படுபவராகவும் இருப்பார் என நம்புகிறேன். தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தில் அவரின் பயணம் தொடர பாரதியார் வேண்டிய விசையுறு பந்தினை போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உடலை அவருக்கு இயற்க்கை வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன். ●

---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**செல்வா. கேசவன் சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** நிர்வாகம் சீர்குலைந்த இனம்தான் சமஷ்டி வேண்டும் - தனிநாடு வேண்டும் என்று கேட்கிறது. எங்களுடைய கடமைகளை நிறைவேற்ற முடியாதவர்கள் தனிநாடு பெற்றோ அல்லது சமஷ்டி பெற்றோ நடத்த முடியாது. அதற்கேற்றவாறு நாங்கள் எங்களை இப்போதே மாற்ற வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் கூறியுள்ளாரே. அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

**வியுக்தியார்:** அவர் சொன்னால் சரியாகத்தானே இருக்கும். ஒன்று இரண்டு வருடங்கள் அல்ல. ஐந்து வருடங்கள் இந்த வடமாகாணத்தை ஒரு முதலமைச்சராக இருந்து நிர்வகித்தவர் அவர். தனது திறமையின் அனுபவத்தைக்கொண்டுதான் இப்படிச் சொல்கிறார் என்று நினைக்கின்றேன். தன்னையும் அவர் வளர்த்துக் கொள்ளப்போகிறார் என்று நம்புவோம். அதுசரி அவர் நமக்கு சமஷ்டி வந்தாலும் தனிநாடு வந்தாலும் அதனை நிர்வகிக்கின்ற தகுதி இப்போது இல்லை எனவே இப்படியே அடிமைகளாகவே இருந்துவிடுவோம் என்று சொல்கிறாரோ தெரியவில்லையே.

---

**க. தில்லைநாதன், மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** தமிழர் தலைநகரான திருகோணமலையில் கண்ட கண்ட இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவவும் - சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களை அமைக்கவும் பேரினவாதம் முயற்சிக்கின்றது. அவர்களின் இந்தச் சண்டித்தனத்துக்கு நாம் ஒருபோதும் இடமளியோம் என்று திருகோணமலை மாவட்ட எம்.பி.யும் தமிழரசுக்கட்சியின் மூத்த தவைருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** அப்ப இனி என்ன திருகோணமலையில் எங்கும் புதிய பௌத்த விகாரையை கட்ட மாட்டார்கள் என்று நாம் நம்பலாம். ஐயாவுக்கு திருகோணமலை இன்னமும் ஞாபகத்தில் இருக்கின்றது என்பதை தனக்கு வாக்களித்த மக்களுக்கு சொல்லியிருக்கிறார் போலும். வேறு ஒன்றுமல்ல, இதுவரை நடந்த சிங்கள குடியேற்றங்கள், கட்டப்பட்ட விகாரைகள் எல்லாம் அவரது அனுமதியுடன் தான் கட்டப்பட்டது என்பதையாவது இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அதுதான் இனி விடமாட்டேன் என்கிறாரோ?

---

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** அண்மையில் சில நாட்களாக பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுவது பற்றிய செய்திகளே வருகின்றன. பெற்றோல், டீசல் என்பவற்றின் விலைகள் அதிக அளவில் அதிகரித்திருந்தன. பின்னர் எரிவாயுவின் விலையும் அதிகரித்தது. இவ்வாறு அதிகரிக்கப்பட்ட பொருட்கள் எல்லாமே இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள்தான். ஆனால் டொலரின் பெறுமதி இந்தக் காலப்பகுதியில் கூடியதாக தெரியவில்லையே. அப்படியெனில் ஏன் இவற்றின் விலைகள் அதிகரிக்கின்றன என்பது உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் வருகின்றபோது 'பார்த்தீர்களா எங்கள் அரச நிறுவனங்கள் எல்லாம் எங்கள் நிர்வாகத்தால் இப்போது லாபத்தில் இயங்குகின்றன" என்று அவர்களுக்கு காட்டுவதற்காக இருக்கலாம். அதைவிட முக்கியமானது, இப்படி கொஞ்சம் கொஞ்சமாக கூட்டிக்கொண்டு போகின்றபோது மக்களுக்கு அதன் தாக்கம் பெரிதாக தெரிவதில்லை. நவம்பரில் பட்ஜெட் வரும்போது பெரிய குறைப்பைச் செய்தால், மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை.

---

**ரி. ஜீவன்குமார் வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்று ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் கோரிக்கை விடுத்திருக்கிறாரே. அப்படி நடந்தால் இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றியும் சர்வதேச விசாரணைக்கு ஒப்புக்கொள்ளவேண்டிய நிலமை ஒன்று வருமல்லவா?

**வியுக்தியார்:** ஈஸ்டர் தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை நடாத்தப்படவேண்டும் என்று ஐநா மனித உரிமை ஆணையாளர் கோரிக்கை விடுக்கவில்லையே. அவர் கோரியது சர்வதேச ஆதரவுடன் இலங்கை விசாரணையை நடாத்தவேண்டும் என்றுதான். அந்தத் தாக்குதலில் சர்வதேச தொடர்புகள் இருந்தது என்று நம்புகின்றாரோ தெரியவில்லை. அதனால்தான் சர்வதேச ஆதரவுடன் என்கிறார் என்றுதான் நினைக்கின்றேன். ஆனால் கர்தினால் மல்கம் ரஞ்சித்தோ, சர்வதேச தரத்தில் விசாரணைகள் நடாத்தப்படவேண்டும் என்றுதான் கோரிக்கை விடுத்திருக்கிறார். அதாவது பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல்கொடுக்கும் கர்தினால் கூட, சர்வதேச விசாரணையை விருப்பவில்லை என்பது தெரிகின்றது. அதன் பின்னாலும் நமது இறுதி யுத்த விவகாரம்தான் பின்னணியில் இருக்கின்றது என்றுதான் நினைக்கின்றேன். அதாவது ஈஸ்டர் தாக்குதல் பற்றி சர்வதேச விசாரணை நடந்தால், இறுதி யுத்த சர்வதேச விசாரணையையும் தடுக்கமுடியாமல் போய்விடும் என்று கர்தினாலும் நினைக்கிறார் போலும். ஆக அங்கும் இனவாத சிந்தனைதானோ தெரியவில்லை.

---

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 7 வயதுச் சிறுமியின் கையின் ஒரு பகுதி சத்திர சிகிச்சை மூலம் துண்டிக்கப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தை மாத்திரமன்றி முழு தமிழர்களையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கின்றதே. ஒருவரின் அசட்டையீனத்தால் இன்று ஒரு சிறுமியின் எதிர்காலமே பாதிக்கப்பட்டிருக்கின்றதே. அந்தத் தவறைச் செய்தவருக்கு அதிகபட்ச தண்டனை கொடுக்க வேண்டுமல்லவா?

**வியுக்தியார்:** நீங்கள் சொல்வது சரியானதுதான். ஒரு வரின் அசட்டையீனத்தால் இன்று ஒரு சிறுமி தன்வாழ் நாள் முழுவதும் அனுபவிக்கப்போகின்றாள். அவருக்கு அதிகபட்ச தண்டனை கொடுத்தால்தான் இதுபோன்ற சம்பபவங்கள் இனிமேலும் நடக்காமல் இருக்கும் என்ற வாதம் சரியானதுதான். ஆனால் மிகவும் வளர்ச்சிய டைந்த நாடுகளிலேயே சுகாதாரத்துறையில் இதுபோன்ற தவறுகள் நடப்பதும் உண்டு என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஒரு காலில் ஏற்பட்ட நோய் காணரணமாக வலதுகால் கழட்டப்படவேண்டியிருந்தது. ஆனால் வைத்தியர் வலதுகாலுக்கு பதிலாக இடதுகாலை கழட்டிய சம்பவம் ஒன்றுகூட நடந்திருக்கின்றது. இது நடந்தது நமது நாட்டில் அல்ல. பிரான்ஸ் நாட்டில். என்ன அந்தத் தவறுக்காக பிரான்ஸ் வைத்தியசாலை பல மில்லியன் யூரோக்களை நட்டஈடாக வழங்கியது. ஆனால் நம்மவர்களின் அசட்டையீனம் என்பது இன்று சுகாதாரத்துறையில் மட்டுமல்ல அனைத்து துறைகளிலும் வியாபித்து நிற்கின்றது. பணிசெய்பவர்கள் எவரும் தமது பணியை உணர்ந்து செய்வதாக இல்லை என்ற புகார் அனைத்து தரப்பிலும் உண்டு.

# ஆஸியில் பழங்குடியினர் குரல் வாக்கெடுப்பு: அபோரிஜின உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



அவுஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களின் உரிமைகளை நிர்ணயிக்க வாக்கெடுப்பு (Indigenous voice to parliament referendum) நடத்துவது தொடர்பான சட்டமசோதா கடந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

தற்போது பழங்குடியினரின் குரல் மீதான முக்கிய வரலாற்று சிறப்புமிக்க வாக்கெடுப்பு அக்டோபர் 14 அன்று நடைபெறவுள்ளது.

### அவுஸ்திரேலிய பழங்குடியின உரிமை

அவுஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களுக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்தும், அவுஸ்திரேலியா பழங்குடியினர் உரிமைகள் மீதான வரலாற்று சிறப்புமிக்க வாக்கெடுப்பு அக்டோபர் வெற்றி பெற்றால், பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்கள் அவுஸ்திரேலிய அரசியலமைப்பால் முழுமையாக அங்கீகரிக்கப்படுவார்கள்.

மேலும், இவர்களுக்கு சட்டப்பேரவையில் ஆலோசனை வழங்க நிரந்தர பிரதிநிதி உருவாக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த திட்டம் அவுஸ்திரேலியாவில் பரபரப்பாக பேசப்படும் தலைப்பு ஆகும்.




பழங்குடியினருக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்து அவுஸ்திரேலியாவில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெற்றிகரமான வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இந்த வாக்கெடுப்பு வெற்றிபெற, பெரும்பான்மையான அவுஸ்திரேலியர்கள் “ஆம்” என்று வாக்களிக்க வேண்டும், மேலும் 6 மாநிலங்களில் 4 பெரும்பான்மை தேவையாகும்.

அவுஸ்திரேலியாவின் மக்கள்தொகை 26 மில்லியன் ஆகும். இதில் பழங்குடி அவுஸ்திரேலியர்கள் சுமார் 3 வீதம் மட்டுமே இருக்கிறார்கள். ஆனால் அதிகாரப்பூர்வ தரவுகள், இந்நாட்டின் சிறைவாசிகளில் கால் பகுதி இவர்களை கொண்டது என்றும், சிறிய குற்றங்களுக்காகவே பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பழங்குடி மக்கள் தொன்மை

அவுஸ்திரேலியாவில் பழங்குடி மக்கள் மிகத் தொன்மையான வாழ்க்கை வாழ்ந்து உள்ளனர். இதுவரை பல ஆய்வு கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் லெஜெமுங்கோ (Laje Mungo) எனும் இடத்தில், 40,000 ஆண்டுகளுக்கு முன், அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாழ்ந்து உள்ளதற்கான வரலாற்றுச் சான்றுகள் கிடைத்து உள்ளன.

1770-இல் பிரித்தானியர்கள் அவுஸ்திரேலியாவினை பற்றி அறிந்து கொண்டார்கள். அவுஸ்திரேலியாவின் வரலாறு பிரித்தானிய குடியேற்றம் மற்றும் பழங்குடிகளை எதிர்கொண்ட முறை குறித்து சார்புள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஐரோப்பியர்கள் இங்கு வரும் முன்னரே சீனத்தின் புகழ் பெற்ற கடற்தளபதி செய்ங் ஹெயின் கடற்படை பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இங்கு வந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது

### பழங்குடியின மக்கள் அபோரிஜினர்

அவுஸ்திரேலியாவில் பல நூற்றாண்டுகளாக வாழும் பழங்குடியின மக்கள் அபோரிஜின்ஸ் (Aborigins). இவர்களுக்கு இதுவரை அரசியலமைப்பு ரீதியாக அங்கீகாரம் கிடைக்கவில்லை. இதனால் தேசிய கொள்கை வகுப்பில் எந்த பங்களிப்பும் இன்றி இருந்து வருகின்றனர்.

அதை மாற்றும் முயற்சியின் முதல் படியாக, பழங்குடியின மக்கள் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவில் வசிக்கும் மக்களுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் வழங்கவேண்டுமா, என்பதை தீர்மானிக்க இந்நாட்டு மக்களிடையே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.




### மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள்

அவுஸ்திரேலியாவின் பழங்குடியின மக்கள் அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்த வாக்கெடுப்பு குறித்து பேசியுள்ள பிரதமர் அந்தோனி அல்பானீஸ், “பாராளுமன்றங்கள் சட்டங்களை இயற்றுகின்றன. ஆனால் மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள். இது உங்கள் நேரம், உங்கள் வாய்ப்பு, சரித்திரம் படைப்பதில் ஒரு பகுதியாக இருப்பதற்கான வாய்ப்பு. இப்போது, அவுஸ்திரேலிய மக்களுக்கு நல்லிணக்கத்திற்கு ‘ஆம்’ என்றும், ‘முதல் பூர்வீக மக்களுக்கான’ அங்கீகாரத்திற்கு ‘ஆம்’ என்றும் சொல்ல வாய்ப்பு கிடைக்கும்” என்றார்.

> பழங்குடியினரின் குரல் மீதான முக்கிய வாக்கெடுப்புக்கு தயாராகும் அவுஸ்திரேலியாவில், அபோரிஜின மக்களின் உரிமை உண்மையிலேயே மறுக்கப்பட்டுள்ளதா என்பது முக்கியமான விடயமாகும்

அவுஸ்திரேலிய பழங்குடியினரின் 3ல் ஒரு பங்கு மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். பல வருடங்களுக்கு முன் ஆங்கிலேயர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்ததும், லத்தீன் சட்டப்பூர்வ வார்த்தையான “டெர்ரா நுல்லியஸ்” (நிலம் யாருக்கும் சொந்தமில்லை) என்று ஒரு கொள்கையை பயன்படுத்தி பூர்வீக அவுஸ்திரேலியர்களின் நிலத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

### பாராளுமன்றத்திற்கான குரல்

அவுஸ்திரேலியாவில் உள்ள பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவில் வசிக்கும் மக்கள் பாராளுமன்றத்திற்கு ஆலோசனை வழங்கக்கூடிய “பாராளுமன்றத்திற்கான குரல்” என்ற ஒரு ஆலோசனை குழுவை அமைப்பதற்காக அரசியலமைப்பு சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதை அவுஸ்திரேலியர்கள் ஆதரிக்கிறார்களா, இல்லையா என இந்த வாக்கெடுப்பின் மூலம் மக்களிடம் கேட்டறியப்படும்.

பழங்குடி மக்களுக்கு 1960கள் வரை தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஒரு தனித்துவமான குழுவாகக் கூட கருதப்படவில்லை. முதல்முறையாக கொள்கை வகுப்பதில் தற்போது அர்ப்பணிப்புடன் கூறப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை பாராளுமன்றத்தின் மேலவையான செனட் சட்டவரைபுக்கு 52 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 19 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்து நிறைவேற்றினர். இதேநேரம் அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழ்சபை கடந்த மே மாதம் இந்த வரைவு சட்டத்தை நிறைவேற்றியது.

### சரித்திரம் படைக்க முடியும்

நாம் ஒன்று சேர்ந்து, பழங்குடியின மக்களை நமது அரசியலமைப்பில் அங்கீகரிப்பதன் மூலம் சரித்திரம் படைக்க முடியும் என்று பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார். அவரது மத்திய இடது அரசாங்கம், குறைந்த அளவிலான கல்வி, மோசமான சுகாதாரம் மற்றும் அதிக சிறைத்தண்டனை விகிதங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படும் பழங்குடி சமூகத்தை மேம்படுத்த விரும்புவதாகக் கூறுகிறது.

அவுஸ்திரேலியர்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு குரல் கொடுப்பதற்கு ஒரு படி நெருக்கமாக உள்ளது என்று பூர்வீக ஆஸ்திரேலிய அமைச்சர் லிண்டா பர்னி கூறியுள்ளார்.

அரசியலமைப்பில் எந்த மாற்றமும் இரட்டைப் பெரும்பான்மை தேவை. அதாவது, தேசிய அளவில் 50மூக்கும் அதிகமான “ஆம்” வாக்குகள் இருக்க



வேண்டும் மற்றும் குறைந்தது ஆறு மாநிலங்களில் நான்கு மாநிலங்கள் ஆதரவாக பெரும்பான்மையைப் பதிவு செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சியான பழமைவாதக் கூட்டணியானது அதன் வாக்கெடுப்பு நிலைப்பாட்டில் பிளவுபட்டுள்ளது. ஆனால் லிபரல் கட்சியின் தலைவர் பீட்டர் டட்டன் “ஆம்” என்ற வாக்கு அதிகாரப்பூர்வமாக நாட்டை இன ரீதியாகப் பிரிக்கும் என்று புகார் செய்துள்ளார்.

### 60,000 ஆண்டுகளாக வாழும் பழங்குடியினர்

இந்த பொது வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டால், குறைந்தபட்சம் 60,000 ஆண்டுகளாக இக்கண்டத்தில் வாழ்ந்து வரும் ஆஸ்திரேலிய பழங்குடியினத்தவர்கள், முதல் முறையாக அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்படுவார்கள்.

இதனால் இந்த வாக்கெடுப்பு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவாக பார்க்கப்படுகிறது. இதன் மூலம், அரசியலமைப்பு சட்டம் வழங்கும் உரிமையின் காரணமாக, இவர்களை பாதிக்கும் சட்டங்கள் குறித்து இவர்களை கலந்தாலோசித்தாக வேண்டும் என்ற உரிமை இவர்களுக்கு கிடைக்கும்.

இருப்பினும் கணிப்புகளின்படி, பெரும்பாலானோரின் ஆதரவு இருந்தாலும், இது குறித்த சர்ச்சைகள் விவாதங்கள் கடுமையாவதை தொடர்ந்து, தற்போது ஆதரவு குறைய தொடங்குவதாக தெரிகிறது.

ஆயினும் பழங்குடியின அவுஸ்திரேலியர்களிடையே கூட, முன்மொழியப்பட்ட இந்த மாற்றம் பாரியளவில் பிரபலமாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது பழங்குடியினரின் குரல் மீதான முக்கிய வரலாற்று சிறப்புமிக்க வாக்கெடுப்பு அக்டோபர் 14 அன்று நடைபெற்ற பின்னரே புதிய மாற்றத்திற்கான வழிமுறை திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மதுபோதையில் குழப்பம் பெலாரஸ் பிரஜை கைது !

கொழும்பு, செப். 10

அதிக மதுபோதையில் குழப்பம் விளைவித்த பெலாரஸ் பிரஜையொருவர் ஹபராதுவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் குறித்த பெலாரஸ் பிரஜை செயற்படுவதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டார்.

பெலாரஸ் நாட்டு பிரஜை அதிக மதுபோதையில் தனது நண்பரையும் தங்கியிருந்த உணவக உரிமையாளரின் மகள் உள்ளிட்டோரையும் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பெலாரஸ் நாட்டு பிரஜை பொலிஸாரையும் தாக்குவதற்கு முயற்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கு கடத்த மறைத்துவைக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருளுடன் நால்வர் கைது!

**சென்னை, செப். 10**

**இலங்கைக்கு கடத்துவதற்காக இந்தியாவின் வேதாளை மீனவ கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருட்களுடன் பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

கைதானவர்களிடமிருந்த இந்திய மதிப்பில் 6 கோடி ரூபா பெறுமதியான 6 கிலோ ஐஸ் போதைப்பொருட்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது . இந்தியாவின் சில இடங் களிலிருந்து அண்மையகாலமாக போதைப் பொருட்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகின்றன.

கடல் வழியாக நடைபெறும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களை தடுக்க இந்திய மத்திய, மாநில உளவுத் துறை, மாவட்ட காவல்துறை, சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இந்தியாவிலுள்ள வேதாளை எம்.ஜி.ஆர் நகரில் வசித்து வரும் சேதுராஜன் என்பவர் வீட்டில் இலங்கைக்கு கடத்துவதற்காக போதைப்பொருள் பதுக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றது .

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டிலிருந்து 6 கிலோ நிறையுடைய ஐஸ் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் குறித்த வீட்டின் உரிமையாளரும் உரிமையாளரின் உறவினர் ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் நடத்திய தொடர் விசாரணையில் ஐஸ் போதைப் பொருளை இவர்களுக்கு சொந்தமான படகில் இலங்கைக்கு கடத்தி செல்ல முட்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அத்துடன் இந்த விசாரணையின் போது மேலும் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மதுபானத்தை வாங்கிவிட்டுப் பணத்தை செலுத்தாது தப்பிய பொலிஸ் பரிசோதகர்!

கொழும்பு, செப். 10

முச்சக்கரவண்டி ஒன்றில் வந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவர் இரண்டு மதுபானச்சாலைகளுக்கு சென்று மதுபானத்தை பெற்றுவிட்டு பணத்தை செலுத்தாது தப்பியோடும் காட்சிகள் சி.சி.ரி.வி. கமெராக்களில் பதிவாகியுள்ளன.

குறித்த சமபவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மட்டக்களப்பு நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மதுபானச்சாலைக்குச் சென்று அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டு பணத்தைத் தருவதாக கூறிவிட்டு மதுபானப் போத்தல்களுடன் முச்சக்கரவண்டியில் குறித்த பொலிஸ் பரிசோதகர் தப்பி ஓடியுள்ளார்.

இதே போன்று மற்றுமொறு மதுபானச்சாலைக்கு சென்ற குறித்த பொலிஸ் பரிசோதகர் அங்கும் அரைப் போத்தல் மதுபானத்தை வாங்கிவிட்டு பணத்தை எடுத்து வருவதாக தெரிவித்து மதுபானத்துடன் முச்சக்கர வண்டியில் தப்பியோடியுள்ளார்.

இந்தக் காட்சிகள் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமெராக்களில் பதிவாகியுள்ள நிலையில், அவை சமூக ஊடகங்களில் வைராலகியுள்ளன.

(அ)

# கோழி இறைச்சியின் விலை மேலும் குறையும்

கொழும்பு, செப். 10

ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,250 முதல் 1,100 வரை குறைக்கப்படும் என அகில இலங்கை கோழிப்பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு இடையே இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் பெரிய அளவிலான உற்பத்தியாளர்கள் மத்தியில் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

எனவே பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சிக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# மாற்றுத் திறனாளி கழுத்தறுக்கப்பட்டு கொலை!

கொழும்பு, செப். 10

செவிப்புலனற்ற மற்றும் பேச்சுத்திறன் குறைபாடுடைய நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை சேருபிட, கொலபகே வத்தையைச் சேர்ந்த டொனால்ட் பியரத்ன என்ற நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மது போதையில் இருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.

கொலை செய்யப்பட்ட நபரிடம் சந்தேக நபர் பணத்தைக் கடனாக பெற்றுள்ளதாகவும் கடனாகக் கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்கும் போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் களுத்துறைப் குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# தென்னிலங்கையில் இருந்து கிளம்பும்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு பல சந்தர்ப் பங்களிலும் அவர் சர்வதேச தலையீடுகளுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்தார்.

இதனிடையே, கடந்த வெள்ளிக் கிழமை பாராளு மன்றத்தில் உரையாற்றிய நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச சனல் 4 காணொளி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணையின் தன்மையை பாராளு மன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று கூறினார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற உடனடியாகவே ரணில் விக்கிரமசிங்க சர்வதேச விசாரணை குறித்து யோசனையை முன்வைத்தார். ஆனால் அதற்கு எந்தவொரு தரப்பிடமிருந்தும் சாதகமான பதில் கிடைக்க வில்லை. அதனால் விசாரணையின் தன்மையை தீர்மானிக்க வேண்டியது இப்போது பாராளுமன்றத்தின் பொறுப்பு என்று அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய பின்புலத்தில் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து இதுவரையில் நடத்தப்பட்ட விசாரணைகளை ஒரு தடவை திரும்பிப்பார்ப்பது அவசியமானதாகும்.

குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற மறுநாளான ஏப்ரில் 22, 2016 அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்ற நீதிபதி விஜித் மலலகொட தலைமையில் குழுவொன்றை நியமித்தார். அந்தக் குழு ஜூன் 10, 2019 அதன் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது.

தாக்குதல்கள் நடைபெற்று ஒரு மாதம் கழித்து மே 22, 2019 பாராளுமன்றம் தீர்மானம் ஒன்றின் மூலம் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் தெரிவுக்குழு ஒன்றை நியமித்தது. மலலகொட குழுவின் அறிக்கையும் கூட தெரிவுக்குழுவின் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

பிறகு செப்டெம்பர் 20, 2019 அதிவிசேட வர்த்த மானி அறிவித்தல் மூலமாக சிறிசேன ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவொன்றை உயர்நீதிமன்ற நீதிபதி ஜனக் டி சில்வா தலைமையில் நியமித்தார். அந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை தலைவர் பெப்ரவரி 1, 2021 ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் கையளித்தார்.

ஆனால், அந்த அறிக்கையின் பல பகுதிகள் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாக இருப்பதாகக் காரணம் கூறி ஜனாதிபதி செயலகம் அவற்றை வெளியிடாமல் நிறுத்திவைத்தது. என்றாலும், அந்த பகுதிகள் உள்ளடங்கலாக இறுதி அறிக்கை ஜனாதிபதி கோட்டாபயவின் அறிவுறுத்தலின் பேரில் பாராளுமன்ற சபாநாயகரிடம் பெப்ரவரி 22, 2022 கையளிக்கப்பட்டது.

ஆனால், இந்த குழுக்கள், பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் எல்லாமே குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களும் கத்தோலிக்க திருச்சபையும் அரசியல் கட்சிகள் உட்பட பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களும் கிளப்பிய சகல கேள்விகளுக்கும் பதில்களைத் தரத்தவறிவிட்டன.

இது உள்நாட்டு விசாரணைகள் மீது இதுகாலவரையில் தமிழர்கள் மத்தியில் இருந்த நம்பிக்கையீனம் தவிர்க்க முடியாமல் தென்னிலங்கையில் சிங்கள சமூகத்துக்கு பரவுவதற்கு வழிவகுத்திருக்கிறது.

சர்வதேச சமூகமும் இலங்கையின் உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கையீனத்தை அண்மைக்காலமாக வெளியிட்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

நாளை ஜெனீவாவில் தொடங்கவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 வது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் 2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் போன்ற அடையாளபூர்வ முக்கியத்துவம் வாய்ந்த மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் சரவதேச உதவியுடன் சர்வதேச நியமங்களுக்கு இசைவான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் காண்காணிப்பகம் (Human Rights Watch) உட்பட ஒன்பது சரவதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கூட்டாக கடந்தவாரம் வெளியிட்ட அறிக்கையொன்றில் இலங்கையின் முன்னைய விசாரணைக் குழுக்கள் உண்மையை வெளிக்கொணரவும் நீதியை வழங்கவும் தவறிய நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றன என்றும் அதனால் அரசாங்கத்தின் உத்தேச “ தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்தும் கடுமையான சந்தேகங்கள் கிளம்புகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கைகளை வலுப்படுத்தக்கூடியவையாக அமைந்திருக்கின்றன.

சனல் 4 காணொளியின் நம்பகத்தன்மை குறித்து வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். அது வேறு விடயம். ஆனால், குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் காணப்படுகின்ற வழமைக்கு மாறான தாமதங்களும் உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிவதில் காணப்படும் அக்கறையின்மையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டை மாத்திரமல்ல,பின்னணியில் இருந்திருக்கக் கூடியவர்களை பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது என்ற சந்தேகத்தையும் கடுமையாக வலுப்படுத்துகிறது.

இந்த நிகழ்வுப் போக்குகள் எல்லாம் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையில் பல வருடங்களாக உறுதியாக இருக்கும் தமிழர்களின் நிலைப்பாட்டின் நியாயத்தையே பிரகாசமாக துலங்க வைக்கின்றன.

ஆனால், தென்னிலங்கையில் இன்று சர்வதேச விசாரணையைக் கோருபவர்கள் தங்களின் கோரிக்கையை நியாயப்படுத்துவதற்கு கூறும் காரணங்களே அடிப்படையில் தமிழர்களின் கோரிக்கையின் பின்னணியிலும் இருக்கிறது என்பதை இனிமேலாவது ஒத்துக் கொள்ள முன்வருவாரகள் என்று எதிர்பார்க்கமுடியாது. அது தான் இலங்கை அரசியல்.

## வடக்கு...

வடக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர்கள் யுவதிகள், பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இல்லாது இருக்கும் போது இவ்வாறான வேலைவாய்ப்புக்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை என வடக்கு கிழக்கெங்கும் தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக மக்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

பெரும் சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில் இவ்வாறு வடபகுதியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் விடயம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## சர்வதேச...

சனல் 4 இல் கூறப்பட்டுள்ள விடயங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். ஏனெனில் இங்கு விசாரணையை ஒப்படைத்து சரி வராது. இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் திருப்தியும் இல்லை.

சனல்-4 காணொளி குறித்து விசாரணை அவசியம் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. ஐ.நாவின் கோரிக்கையின் பிரகாரம் சர்வதேச விசாரணை நடத்துவதே சிறந்தது." - எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (அ)

## ஈஸ்டர்...

வவுனியா தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தொடர்பாக சனல் 4 வெளியிட்ட தகவலானது பரபரப்பாக பேசப்பட்டு வருகின்ற நிலை காணப்படுகின்றது. இன்று தென்னிலங்கையில் உள்ளவர்களும், கர்தினாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்துக்கு செல்லவேண்டும் என்ற கோரிக்கை வைக்கின்றனர்.

நாங்களும் இது தொடர்பாக சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று சொல்வதுடன், விரைவாக இதனை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்தியே இவ்விடயமானது தற்போது பேசுபொருளாக இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

மகிந்தவின் குடும்ப ஆட்சி காலத்தில் தமிழ் மக்களை படுகொலை செய்ததுடன் மனித உரிமை மீறல்களையும் மேற்கொண்டனர். இது தொடர்பாக ஐ.நா. சபை கண்டனம் தெரிவித்ததுடன் இது தொடர்பாக பூரண விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று இலங்கை அரசிடம் கோரிக்கை முன்வைத்திருந்தது.

இவ் விடயம் தொடர்பாக கடந்த காலங்களில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளவேண்டும் அல்லது சர்வதேச நீதித்துறையை சார்ந்தவர்கள், சர்வதேச வழக்கறிஞர்களை அழைத்து விசாரணை செய்யவேண்டும் என வலியுறுத்தியிருந்தோம்.

ஆனால் இச்சந்தர்ப்பத்தில் குரல் கொடுக்காத எதிர்க்கட்சித் தலைவர், கர்தினால் மற்றும் ஏனையவர்கள் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை வைத்துக் கொண்டு அரசியல் நடத்துவது உண்மையில் கேவலமான விடயமாகும்.

கர்தினால் உட்பட அனைவரும் மனச்சாட்சியுடன் இந்நாட்டில் புரையோடிப்போய்யுள்ள இனப்பிரச்னையை தீர்க்க வேண்டும் என எண்ணி இருந்திருந்தால், கடந்த காலங்களில் மகிந்தவின் குடும்பம் மேற்கொண்ட அட்டூழியங்கள், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்திருந்திருக்கலாம்-என்றார். (அ)

## சீனாவுக்கு..

பிங் உள்ளிட்ட சீனத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கை தனது இரு தரப்பு கடன்களை மறுசீரமைப்பதில் சீனாவுடன் தொடர்ந்து ஈடுபட்டுள்ள நிலையில் இந்த விஜயம் அமையவுள்ளது.

அவர் கடந்த வருடம் ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் சீனாவுக்கு மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ விஜயம் இதுவே முதல் தடவையாகும். (அ)

## சனல் 4...

பொலிஸ், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சிவில் சேவையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளது.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், குழுவின் பிரதிநிதிகள் நியமனம் ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சனல் 4 வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளளார். (அ)

## மொரோக்கோவில்...

மலைகளில் 18.5 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி 23:11 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. அதை தொடர்ந்து, 19 நிமிடங்களுக்குப் பிறகு 4.9 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

மரக்கேஷ் மற்றும் தெற்கில் பல பகுதிகளில் மக்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அட்லஸ் மலைத்தொடரில் உள்ள தொலைதூர கிராமங்களுக்கு செல்வதில் பெரும் சிரமம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக பழைய கட்டடங்களால் ஆன கிராமங்களுக்கு மீட்புப் படையினர் செல்ல சில நாட்கள் ஆகலாம்.

மொராக்கோ கடற்கரையில் உள்ள கேனரி தீவுகள் மற்றும் அதன் கிழக்கு அண்டை நாடான அல்ஜீரியாவில் உள்ள மக்கள் கூட நிலநடுக்கத்தை உணர்ந்ததாக கூறுகிறார்கள்.

அதிர்ச்சியடைந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி மராகேஷின் தெருக்களில் தப்பிச் செல்லும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவியிருக்கின்றன.

நகரின் பழமையான சுவர்களும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

மராகேஷில் சில கட்டடங்கள் இடிந்து விழுந்துவிட்டன என்று அப்பகுதியில் வசிக்கும் ஒருவர் ரொய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் தெரிவித் தார்.

நிலநடுக்கம் காரணம் பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் புகுந்தனர்.

"நாங்கள் மிகவும் கடுமையான நடுக்கத்தை உணர்ந்தோம். நிலநடுக்கத்தால் மக்கள் அனைவரும் அதிர்ச்சியிலும் பீதியிலும் இருந்தனர். குழந்தைகள் அழுது கொண்டிருந்தனர், பெற்றோர்கள் கலக்கமடைந்தனர்" என்று அப்தெல்ஹாக் எல் அம்ரானி என்பவர் தெரிவித்தார். நிலநடுக்கம் ஏற்பட்ட 10 நிமிடங்க ளில் மின்சாரம், தொலைபேசி இணைப் புகள் துண்டிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடலோர நகரங்களான ரபாட், காசாபிளாங்கா மற்றும் எஸ்ஸௌயிராவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது. (அ)

## கொக்குத்...

முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் மற்றும், தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி ஆகியோரால், சட்டத்தரணி எஸ்.துஸ்யந்தி ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மனிதப் புதைகுழி இரண்டாம் நாள் அகழ்வின்போது துப்பாக்கிச் சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோக துண்டுகள், துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படும் ஆடைகள் என்பன தடயப் பொருட்களாக மீட்கப்பட்டிருந்தன.

மூன்றாம் நாள் அகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் உடையது என சந்தேகிக்கப்படும் உடல் எச்சங்கள் இரண்டு முழுமையாக மீட்கப்பட்டதுடன், குறித்த உடல்களுடன் காணப்பட்ட ஆடைகளில் சில இலக்கங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்று நான்காவது நாள் அகழ்வின்போது சில முக்கிய தடயப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளபோதிலும் இது தொடர்பாக அதிகாரபூர்வமாக கருத்து தெரிவிப்பதற்கு அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்றும் குறித்த மனிதப் புதைகுழி வளாகத்தை பார்வையிடுவதற்கென யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் குழு ஒன்று வருகை தந்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாதுகாப்பு...

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பட்ட ஆவணப்படத்தில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை உத்தியோகபூர்வமாக மறுப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்திருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்காக ஏப்ரல் 21 தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதற்காக தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே தற்கொலைக் குண்டுதாரிகளுடன் சந்திப்பை நடத்தியதாகவும் குறித்த ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள பாதுகாப்பு அமைச்சு சனல் 4இன் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக அறிவித்திருந்தது.

இந்தநிலையில், கொழும்பு ஆயர் இல்லம் குறித்த அறிக்கைக்கு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்த காணொளியில் உள்ள சில விடயங்கள் குறித்து பரபரப்பாக பேசப்பட்டாலும், இதில் சந்தேகத்திற் குரிய பகுதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறிப்பாக பிள்ளையானின் நடவடிக்கைகள், தற்கொலை குண்டுதாரிகள் போன்ற சில வெளிப்படுத்தல்கள் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளன.

மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயை தூக்கிலிடவோ, கோட்டாபயவை ஆயுள் முழுவதும் சிறையில் அடைக்கவோ கோரவில்லை.

மாறாக இந்த காணொளி வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தீவிரமாக விசாரித்து பின்னர் அறிக்கை வெளியிடவேண்டும் என ஆயர் இல்லம் கோரியுள்ளது.

இந்தநிலையில், ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தும் வகையில் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையை வன்மையாக கண்டிப்பதாக கொழும்பு பேராயர் இல்லத்தின் செய்தி தொடர்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (அ)

## சஹ்ரானின்...

பங்கேற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், சஹ்ரானின் சகோதரர் ஐ.எஸ் அமைப்பு மீதான ஈர்ப்பை கொண்டிருந்ததை தாம் அவதானித்ததாகவும் எந்தவொரு தாக்குதலுக்காகவும் அவரிடம் உதவிகளை கோரவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கூறினார். (அ)

## ஏற்படவுள்ள...

சனல் 4 விடுத்த குற்றச்சாட்டுகளை பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சு, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் குற்றச்சாட்டை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மீதும், தற்போதைய சிறிலங்கா அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து, அரசாங்கம், சட்ட அமுலாக்க அமைப்புகள், பாதுகாப்புப் படைகள் மற்றும் சர்வதேச புலனாய்வு அமைப்புகள் விரிவான விசாரணைகளை மேற்கொண்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பல ஆண்டுகளாக, உள்ளூர் மற்றும் சர்வதேச விசாரணைகள், சஹ்ரான் ஹாஷிம் தலைமையிலான ஐ.எஸ்.ஐ. எஸ்ஸை சேர்ந்த குழு உறுப்பினர்களை இந்த பயங்கரமான சோகத்தின் சிற்பிகளாக தொடர்ந்து சுட்டிக்காட்டியதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டது.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் முழு உண்மையை வெளிக்கொணருவதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளன.

உள்ளூர் மற்றும் சர்வதேச நிபுணத்துவ நிறுவனங்களால் நடத்தப்படும் வெளிப்படையான விசாரணைகளை எளிதாக்குவதன் மூலம் அவர்கள் அவ்வாறு செய்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத எதிர்ப்புப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றின் உன்னிப்பான பணி உட்பட இந்த விசாரணைகள், தாக்குதலுக்கான தீவிர தீவிரவாதக் குழுவின் பொறுப்பை தொடர்ந்து உறுதிப்படுத்தியுள்ளன. கூடுதலாக, தேசிய பாதுகாப்பிற்கான துறைசார் மேற்பார்வைக் குழு தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்மொழிவதில் முக்கிய பங்கு வகித்தது.

மேலும், அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸ் மற்றும் அமெரிக்காவில் உள்ள பெடரல் பீரோ ஒஃப் இன் வெஸ்டிகேஷன் (எவ்.பி.ஐ) ஆகியவற்றால் நடத்தப்பட்ட விரிவான விசாரணையையும், அமெரிக்க நீதித்துறை வழங்கிய தீர்ப்பையும் அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டியது அவசியம் என்று பாதுகாப்பு அமைச்சகம் கூறியது. அவர்கள் உள்ளூார் விசாரணைகளின் கண்டுபிடிப்புகளை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச புலனாய்வு அமைப்பின் இந்த உறுதியான ஒப்புதல் விசாரணையின் துல்லியம் மற்றும் நேர்மையை மேலும் உறுதிப்படுத்துகிறது என்று அமைச்சு வலியுறுத்தியது.

பாதுகாப்பு அமைச்சு கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளித்து, புலனாய்வுப் பத்திரிகையின் முக்கியத்துவத்தை நிலைநிறுத்தும் அதேவேளையில், சனல் 4 அவர்களின் வீடியோ ஆவணப்படத்தில் கூறப்பட்ட மோசமான ஆதாரபூர்வமற்ற உரிமை கோரல்கள், தீங்கிழைக்கும், மற்றும் எதிர்பாரா செயல்கள் அல்லது பின்விளைவுகளுக்கு சந்தேகத்திற்கு இடமின்றி பொறுப்பேற்கப்படும் என்று அந்த அறிக்கை கூறுகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளக விசாரணை வேண்டாம்!

## அருட்தந்தை சிறில் காமினி தெரிவிப்பு



கொழும்பு, செப். 10

**உயிர்த் ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பில் உள்ளக விசாரணை வேண்டாம். சர்வதேச விசாரணையே அவசியம் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அருட்தந்தை சிறில் காமினி மேலும் தெரிவிக்கையில்-

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதும், பாராளுமன்றம் தலையீடுகளை செய்வதும் வேடிக்கையான தாகும்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பாக பாராளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் பல விசாரணைகளும் ஆய்வுகளும் நடத்தப்பட்ட போதிலும் இது வரை நீதி கிடைக்கப்படவில்லை.

சுயாதீன மற்றும் சர்வதேச விசாரணையை நடத்த ஒரு முறையான நடவடிக்கை தேவை. உள்ளக விசாரணைகளில் அனைவரும் நம்பிக்கையிழந்துள்ளனர்.

பேராயர் மெல்கம் ரஞ்சித் அதனால்தான் சர்வதேச விசாரணையின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் - என்றார். (அ)

# வவுனியாவில் வாகன விபத்து; பொலிஸ் கான்ஸ்டபிள் மரணம்

## பொலிஸ் கான்ஸ்டபிள் மரணம்

வவுனியா, செப். 10

வவுனியாவில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ-9 வீதி, விளக்குவைத்தகுளத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்த கப் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வவுனியாவில் இருந்து புளியங்குளம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அதே இடத்தில் பலியானார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணை, ஓமந்தை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விபத்தில் கண்டியைச் சேர்ந்தவரும் புளியங்குளம் பொலிஸ் கான்ஸ்டபிளுமான கருணாதிலக்க (வயது-55) என்பவரே பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தௌஹீத் ஜமாத் அமைப்பை தம் அரசியலுக்கு பயன்படுத்திக்கொண்டார்கள் ராஜபக்ஷர்கள்!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 10

சிங்கள பௌத்தர்கள் மத்தியில் அடிப்படைவாதம் தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்தி ராஜபக்ஷர்கள் தௌஹீத் ஜமாத் அமைப்பை தமது அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்திக் கொண்டார்கள். தௌஹீத் அமைப்பு ராஜபக்ஷர்களுக்கு சார்பாக செயற்படவில்லை என்பதை ராஜபக்ஷர்களால் நாட்டு மக்களிடம் குறிப்பிட முடியுமா? ராஜபக்ஷர்கள் தமது அரசியல் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக சர்வதேச மட்டத்தில் தேசிய புலனாய்வு பிரிவை பல வீனப்படுத்தியுள்ளார்கள் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என ராஜபக்ஷர்கள் குறிப்பிடுவது சிறுபிள்ளைத்தனமானது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கெடம்பே ரஜமஹா விகாரைக்கு ஒருமுறை சென்று "தாங்கள் அடிப்படைவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே அந்த அடிப்படைவாத என்ன? அதன் உறுப்பினர்கள் யார் என்பதை தேசிய புலனாய்வு பிரிவின் பிரதானி சுரேஷ் சாலே,கபில ஹெந்தவிதாரண,முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டபய,மகிந்த ஆகியோர் நாட்டு மக்களுக்கு குறிப்பிட வேண்டும்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு யாருடையது,தேர்தல் காலத்தில் தௌஹீத் அமைப்பு ராஜபக்ஷர்களுக்கு செயற்படவில்லையா? 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷர்களுக்கு வாக்களிக்குமாறு தௌஹீத் அமைப்பு குறிப்பிடவில்லையா? பௌத்தர்கள் மத்தியில் அடிப்படைவாதம்,கருத்தடை தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்தி விட்டு மறுபுறம் தௌஹீத் ஜமாத் அமைப்பை தமது அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்திக் கொள்ளவில்லையா என்பதை ராஜபக்ஷர்கள் நாட்டு மக்களுக்கு குறிப்பிடவேண்டும்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு, தேசிய புலனாய்வுப் பிரிவு என்பன வற்றின் கவனத்துக்கு அப்பாற்பட்ட வகையில் சஹ்ரான் செயற்பட்டுள்ளார். சர்வதேச மட் டத்தில் இந்தியா,பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இஸ்லாமிய அடிப் படைவாத செயற்பாடுகள் தீவிரமடைந்த பின்னணியில் 2010 முதல் 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தௌஹீத் ஜமாத் அமைப்பு அரசியல் நோக்கத்துக் காக அரச அனுசரணையுடன் பாது காக்கப்பட்டது.

உலகில் எந்த நாட்டு புலனாய்வுப் பிரிவும் குண்டுதாரியின் வீட்டுக்குச் செல்லாது. தாஜ் சமுத்திரா ஹோட்டலில் குண்டுத்தாக்குதலை நடத்த சென்ற ஜமீலை புலனாய்வு அதிகாரி ஒருவர் சந்தித்துள்ளார்.

அத்துடன் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் மாத்தளைக்கு சென்று பிறிதொரு அடிப்படைவாதியிடம் இந்த தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல் என்று ஏற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளார்.உலகில் எந்த நாட்டிலும் இவ்வாறான புலனாய்வுப் பிரிவு கிடையாது. ஆகவே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்கூட்டியதாகவே பலவிடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது.ஆகவே தற்போது எவரும் தப்பிக்க முடியாது.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் பல விடயங்களை வெளிக்கொண்டு வர முயற்சித்த சானி அபேசேகரவை ராஜபக்ஷர்கள் கொல்லாமல் கொன்றார்கள். மனசாட்சியில்லாமல் அவரை நெருக்கடிக்குள்ளாக்கினார்கள்.ஒட்டுமொத்த மக்கள் மத்தியிலும் தேசிய புலனாய்வுப் பிரிவு தற்போது அபகீர்த்திக்குள்ளாக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# ராஜபக்ஷக்களைக் கூண்டோடு கைது செய்து சிறையிடுங்கள்!

## ரணிலிடம் சஜித் அணி வேண்டுகோள்



கொழும்பு, செப். 10

"இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களிலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களிலும் ராஜபக்சக்கள் தொடர்புபட்டுள்ளனர் என்று 'சனல் 4' தொலைக்காட்சி வெளியிட்டுள்ள வீடியோவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, ராஜபக்சக்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்."

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.


"இலங்கையை மாத்திரமல்ல ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் 'சனல் 4' வெளியிட்டுள்ள காணொலியை நிராகரிக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை கட்டாயம் வேண்டும்" - என்றும் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. இதனைத் தெரிவித்துள்ளார்.

"2019இல் மக்களைக் கொன்றுவித்து ஆட்சியைப் பிடித்த ராஜபக்ஷக்கள், கடந்த வருடம் (2022) மக்களைப் பட்டினியால் சாகடித்து ஆட்சியைத் தக்கவைக்கலாம் என்று கனவு கண்டுள்ளார்கள். ஆனால், வீறுகொண்டு எழுந்த மக்கள், ராஜபக்சக்களைக் கூண்டோடு பதவிகளிலிருந்து விரட்டியடித்தார்கள்" - என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"சகல விதமான ஊழல் - மோசடிகளிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்புபட்டுள்ளனர். எனவே, ராஜபக்ஷக்கள் அனைவரையும் சிறைக்கு அனுப்பியே தீர வேண்டும்" - என்றும் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# பேருந்துக்கு வீதியில் காத்திருந்த ஆசிரியையின் சங்கிலி அறுப்பு!



வடமராட்சி, செப். 10

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நேற்று மாலை 04.30 மணியளவில் ஆசிரியை ஒருவரின் தங்கிச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியை பேருந்திற்காக காத்திருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அவரது தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மருதங்கேணி பொலீஸ் நிலையத் தில் முறையிடப்பட்ட நிலையில் உடனடியாக அவ்வி டம் சென்ற மருதங்கேணி பொலிஸார் மேலதிகாரி விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-02)

# பராமரிப்பாளர் பணிகளுக்காக 566 இலங்கையர் இஸ்ரேலுக்கு!

கொழும்பு, செப். 10

பராமரிப்பாளர் பணிகளுக்காக 566 இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கமைய, குறித்த இலங்கையர்களுக்கு அந்தநாட்டில் தொழிலுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 12ஆம் திகதி இஸ்ரேலுக்கு பராமரிப்பாளர் பணிகளுக்காக செல்லவிருக்கும் மற்றுமொரு இலங்கையர் குழுவுக்கு நேற்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் விமான பயணச்சீட்டு வழங்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாணவச் செல்வங்களே!

# தன்னம்பிகையுடன் முன் நகர்வோம்!!

**சிவா முருகுப்பிள்ளை**



கல்வி மனிதனுக்கு அடிப்படையான விடயம் என்பதற்கு அப்பால் அது தான் அவனை தான் யார் என்பதை உணர வைத்து எதிர்காலத்தில் இந்த சமுதாயத்திற்கு வேண்டியவனான அடையாளப்படுத்துவதற்கும் முதன்மையாக இருக்கின்றது.

ஒருவர் தன்னை பகுத்தறிதல் என்பதற்கு அடிப்படையாக இருப்பது கல்வி தான்.

இதற்கான அடிப்படைக் கல்வியிற்கு அப்பால்... எழுத்தறிவுக்கு அப்பால் எல்லாவற்றையும் அறிவதற்கான திறவுகோலாக அதற்கான அனுமதியிற்கான பரீட்சையாக அமைவது இலங்கையில் நடைபெறும் கபொத உயர்தரப் பரீட்சை.

அந்த வகையில் பரீட்சையும் பெறுபேறுகளும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக சமூகத்தில் பார்க்கப்படுவது இயல்புதானே.

இந்த தரம் அறியும் பரீட்சையின் முடிவுகள் தற்போது வெளி வந்துள்ளன.

இதில் வெற்றி அடைந்தவர்களாக பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்கள் அதிகம் சமூகத்தில் கொண்டாடப்படுவதும் அடையாளப்படுதப்படுவதுமான அடுத்த கட்டப் பாய்சலுக்குள் உள்ளாகும் உளவியலுக்குள் இந்த மாணவரகள் செல்வது கொண்டாட்டமான நிகழ்வு தான்.

அந்த வகையில் அவர்கள் அனைவருக்கும் மொழி மதம் இனம் பிரதேசம் பாடசாலை எல்லாவற்றையும் கடந்து எமது பிள்ளைகளாக அவர்களை கொண்டாடுகின்றோம் வாழ்த்துகின்றோம்.

கூடவே இந்த போட்டிப் பரீட்சையில் அடுத்த கட்ட நகர்விற்கு அனுமதியிற்கான வாரம்புகளை வாய்க்கால்களை அடைய முடியாதவர்களின் இதற்கான கல்வி முயற்சியில் தம்மை ஈடுபடுத்திய அந்த முயற்சிகளை நாம் புறந்தள்ளிப் போக முடியாது.

இவர்கள்தான் என் அதிக கவனத்தைப் பெறும் மாணவர்களாக எப்போதையும் போல் இருக்கின்றார்கள்.

உங்கள் முயற்சி அந்த எல்லைக் கோட்டைத் தாண்ட முடியாவிட்டாலும் சற்றுத் தாமதாகமாகவேனும் எல்லைக் கோட்டைத் தாண்டி ஓட்ட பந்தயத்தை முடித்த மாணவர்களாக நான் பார்க்கின்றேன். வரவேற்கின்றேன். உங்களின் மாணவ உழைப்பை மதிக்கின்றேன். இன்னும் ஒரு தடவை முயற்சி செய்துதான் பாருங்களே வெற்றி உங்கள் அருகில் இருந்ததாக நிச்சயம் உணர்வீர்கள்.

இவ்வாறு சிகரம் தொட்ட பலரை எனது மாணவர்களாகவும் நண்பர்களாகவும் சக பல்கலைக்கழக சகபாடி மாணவர்களாகவும் நான், நாம் கண்டுதான் வந்திருக்கின்றோம்.

எனவே எல்லைக் கோட்டைத் தாண்ட முடியவில்லை என்ற ஏமாற்றம் விரக்தி என்பனவற்றை புறந்தள்ளி முயற்சி செய்யுங்கள் நிச்சயம் உங்களால் முடியும் அந்த எல்லைக் கோட்டைத் தொட.

இதற்கான எம் தரப்பு உதவிகளை வழங்க நான் உட்பட பலரும் காத்திருக்கின்றோம் ஒரு ஆசிரியராக பெற்றோராக நண்பர்களாக.

அது எழுத்தறிவித்தல் என்றாக ஊக்க உதவி ஆலோசனை என்றாக பலவழிகளிலும் உறுதுணையாக இருக்க பலரும் எம் சமூகத்தில் இருக்கின்றனர் அதில் நானும் ஒருவனாக இருந்து கொண்டுதான் இருக்கின்றேன்.

எனவே இந்த பரீட்சைத் தோல்வியை வாழ்க்கைத் தோல்வி என்று பாராமல் வாய்ப்பு மறுக்கப்பட்ட ஒரு தருணமாக பார்த்து வாய்ப்பு கிடைக்கும் தருணத்தை ஏற்படுத்தும் முயற்சியாளனாக உங்களை நம்பிக்கையுடன் மாற்றி அமையுங்கள். இக்கணத்தில் இருந்து.

வெற்றி அடைந்து பல்கலைக் கழகம் சென்ற பலரும் சகல தடைகளையும் கடந்து பல்கலைக் கழகம் என்று உயர் நிலையை அடைந்தாலும் அடைந்தது போல் உணர்தாலும் கொண்டாடினாலும் பல்கலைக் கழக வாழ்வில்.... அந்த உயர்கல்வி ஓட்டத்தில்.... பாய்சலில்... புதிய மாணவ வாழ்க்கைச் சூழலில் ஏற்படும் புதிய கல்விச் சுமைகள்..... கஸ்டங்கள்..... ஏமாற்றங்கள்.... புதிய சூழலுடன் சேர்ந்து ஓடமுடியாத சூழல் என்றாக மன அழுத்தங்கள் ஏமாற்றங்களை சந்தித்து தம்மை தாமே அழித்துக் கொள்ளும் தற்கொலை போன்ற முடிவுகளுக்கு சில மாணவர்கள் அண்மைக் காலங்களில் ஈடுபடுவதாக வரும் புள்ளி விபரங்கள் எம்மை விழிப்படையச் செய்துள்ளது..... கவலையடைவும் செய்துள்ளது.

இப்படியான சூழலில் கைத் தொலைபேசி, கணினி என்று பூட்டிய அறை என்றாக உங்கள் உள்ளங்களை உணர்வுகளை குறுக்காமல் நண்பர்கள் பெற்றோர்கள் உறவுகள் அயலவர் என்பவர்களுடன் அளவளாவுதல் உரையாடுதல் என்றாக உங்கள் பிரச்சனைகள் உணர்வுகள் உழைச்சல்களைப் பரிமாறி உங்கள் மனதை ஆற்றுப்படுத்துங்கள்.

இந்த செயற்பாடுகள் மூலம் நாம் எதிர்பார்க்கும் ஒரு பிரஜையாக இந்த சமுதாயத்தில் தொடர்ந்தும் வாழும் வாழ்வேண்டியவராக உங்களை நிறுவதையே நாம் பார்க்கவே விரும்புகின்றோம்.

இங்கும் இந்த மனதை ஆற்றுப்படுத்துதல் என்பதாக எத் துணை தேவைகளையும் சமுதாயமாக தனி நபர்களாக நாம் பெற்றோர் ஆசிரியர் வழிகாட்டிகள் என்ற வகையில் மொழி மதம் இனம் பிரதேசம் கடந்து கரம் கொடுக்க காத்திருக்கும். நானும் இந்த சமூகத்தின் ஒரு அங்கத்தினராக உங்களை எதிர்பார்த்துக் காத்திருகின்றேன்..... கரம் கொடுப்பதற்காக.

முன்னெற்றகரமாக பாய்சலை அதிகம் ஏற்படுத்தும் கல்வி முறை தொழில் கல்வி முறை என்றாக எமது கல்வி முறை இன்னும் செழுமைப் படுதப்பட வேண்டும் அதுவரை எமக்கு கிடைக்கும் இந்த கன்னங்கரா உருவாக்கிய இலவசக் கல்வியை தொடர்ந்தும் இறுக பற்றிப் பி(ப)டிப்போம்.

கோட்டைக் கடந்தவர்கள்... கடப்பதற்கு அண்மித்தவர்கள்.... சற்றே பின தங்கியவர்கள்.... என்ற வேறுபாடுகள் புறம்தள்ளி முயல்வோம் வெல்வோம் உளம் சோரோம் மாணவச் செல்வங்களே எங்கள் பிள்ளைகளே அந்த கோட்டை யைப் பிடிப்பதற்காக.





# பின்செல்லும் சந்திரமுகி - 2

ராகவா லாரன்ஸ் நடிப்பில் உருவாகியுள்ள ‘சந்திரமுகி 2’ படத்தின் வெளியீடு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

பி. வாசு இயக்கத்தில், 2005ஆம் ஆண்டு வெளியாகி வெற்றி பெற்ற படம், ‘சந்திரமுகி’. ரஜினிகாந்த், ஜோதிகா, நயன்தாரா, பிரபு, வடிவேலு உட்பட பலர் நடித்திருந்தனர். இதன் இரண்டாம் பாகம் ‘சந்திரமுகி 2’ என்ற பெயரில் உருவாகியுள்ளது. இதில் ராகவா லாரன்ஸ், கங்கனா ரனாவத், வடிவேலு, ராதிகா உட்பட பலர் நடித்துள்ளனர்.

இந்தியளவிலான படமாக உருவாகும் இந்தப் படம் வரும் 15ஆம் திகதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், படக்குழு தரப்பில் தொழில்நுட்ப காரணங் களுக்காக படத்தின் வெளியீடு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. அன்றைய தினம் விஜய் ஆண்டனியின் ‘ரத்தம்’, ஜெயம் ரவியின் ‘இறைவன்’, ஹரீஷ் கல்யானின் ‘பார்கிங்’, சித்தார்த்தின் ‘சித்தா’ உள்ளிட்ட படங்கள் வெளியாகவுள்ளன.

# மிரட்டும் பார்வை

நடிகர் மம்முட்டியின் பிறந்தநாளையொட்டி அவர் நடிக்கும் ‘பிரமயுகம்’ படத்தின் முதல் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு வெளியான ‘பூதகாலம்’ படத்தின் மூலம் கவனம் பெற்ற ராகுல் சதாசிவம் இயக்கும் புதிய படம் ‘பிரமயுகம்’. மம்முட்டி முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஓகஸ்ட் மாதம் தொடங்கியது. அர்ஜூன் அசோகன், சித்தார்த் பரதன், அமல்டா லிஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்துக்கு கிறிஸ்டோ சேவியர் இசையமைக்கிறார்.

முதல்பார்வையில், மேல்சட்டை இல்லாமல் நாற்காலி ஒன்றில் அமர்ந்திருக்கும் மம்முட்டியின் சிரித்த முக்கத்துடன் கூடிய வில்லன் பார்வை மிரட்டலாக இருக்கிறது. குறிப்பாக, கறைபடிந்த பற்களுடன் கூடிய சிரிப்பும், கறுப்பு வெள்ளை தோற்றமும் படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.





# புதிய தொடக்கம்

ரஜினிகாந்த் நடிப்பில் கடந்த மாதம் வெளியான ஜெயிலர் திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்று வசூலில் சாதனையும் படைத்துள்ளது.

இதைத்தொடர்ந்து தனது மகள் ஐஸ்வர்யா இயக்கியுள்ள லால் சலாம் படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் ரஜினி நடித்து வந்தார். விஷ்ணு விஷால், விக்ராந்த் இருவரும் கதாநாயகர்களாக நடித்துள்ள இந்த படம் கிரிக்கெட்டை பின்னணியாக கொண்டு உருவாகி உள்ளது. இந்த படத்தில் மொய்தீன் பாய் என்கிற கதாபாத்திரத்தில் ரஜினி நடித்துள்ளார்.

இதன் படப்பிடிப்பு ஏற்கனவே முடிவடைந்துவிட்ட நிலையில் இதன் அடுத்தகட்டப் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் இந்த படத்திற்கு ரஜினிகாந்த் தற்போது குரல் கொடுத்து வருகிறார். இது குறித்த தகவலை படத்தின் இயக்குனர் ஐஸ்வர்யா வெளியிட்டுள்ள பதிவில், “இன்று மிகச்சிறந்த நாள்... எனது தந்தையுடன் குரல் கொடுக்கும் பணியில்..” என்று குறிப்பிட்டுள்ளார்.

**திரைப்படம் - ஜவான்**
**இயக்கம் - அட்லீ**
**இசை - அனிருத்**
**நடிப்பு - ஷாருக்கான், நயன்தாரா, விஜய் சேதுபதி**

தேசப்பற்று, அப்பா - மகன் பாசம், கணவன் - மனைவி நேசம், மகளின் அன்பு, அதிரடி சண்டை படம், ஊழல் எதிர்ப்பு, வாக்கு அரசியல், விவசாயிகள் பிரச்னை என்று ஒரே படத்தில் 20 கதைகள் வைத்திருந்தாலும் ஆரம்பம் முதல் கடைசி வரை எந்த ஒரு தொய்வும் இல்லாமல் படத்தை விறுவிறுப்பாக நகர்த்தியிருக்கிறார் இயக்குநர் அட்லீ. தமிழ் ரசிகர்களுக்கு வேண்டுமானால் இந்தப் படம் பல படங்களின் கதை போலத் தெரியலாம், ஆனால், ஹிந்தி ரசிகர்களுக்கு இப்படி ஒரு படம் என்பதே புதிதாகத்தான் இருக்கும்.

விக்ரம் ரத்தோர் என்ற பெயரில் மெட்ரோ ரயிலை கடத்தி, ஏழு லட்சம் விவசாயிகளின் கடன்களை அடைக்கிறார் ஷாருக்கான். அடுத்து சுகாதார மந்திரியை கடத்தி 200இற்கும் மேற்பட்ட மருத்துவமனைகளுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறார். அந்தக் கடத்தல்கள் எதனால் நடக்கிறது என்பதை விசாரிக்கும் அதிகாரி நயன்தாரா. தனது மகளுக்கு ஓர் அப்பா வேண்டுமென்பதற்காக ஷாருக்கைத் திருமணம் செய்து கொள்கிறார். விக்ரம் ரத்தோர் என்ற பெயரில் கடத்தல்களில் ஈடுபட்ட ஷாருக்கைத்தான் தான் திருமணம் செய்து கொண்டோம் என்பது திருமணத்துக்குப் பிறகுதான் நயன்தாராவுக்குத் தெரிகிறது. அதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குகிறார். அப்போது தான் யார் விக்ரம் ரத்தோர், எதற்காக இப்படி செய்கிறார் என்பதைத் தெரிந்து கொள்கிறார். அது என்ன என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

விவசாயிகளுக்கு உதவும், ஏழை மக்களுக்கு உதவும் பல தமிழ் படங்களைப் பார்த்துள்ளோம். ஆனால், அந்தப் படங்கள் சொல்லாத பின்னணி அரசியலை







இந்தப் படத்தில் வெளிப்படையாக சொல்லியிருக்கிறார் இயக்குநர் அட்லீ. இதற்கு முன்பு அவர் இயக்கிய தமிழ்ப் படங்கள் சந்தித்த விமர்சனத்தையே இந்தப் படமும் சந்திக்கும். அதே போல அந்தப் படங்கள் பெற்ற வெற்றி, வசூலை விடவும் இந்தப் படம் அதிகம் வசூலித்தால் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தமிழ் நடிகர்கள், நடிகைகளும் படத்தில் இருப்பதால் ஒரு மொழிமாற்றப் படத்தைப் பார்க்கிறோம் என்ற உணர்வே ஏற்படவில்லை.

விக்ரம் ரத்தோர், ஆசாத் என இரண்டு கதாபாத்திரங்கள் ஷாருக்கான். அப்பா, மகன் இருவருமே அதிரடியில் கலக்கியிருக்கிறார்கள். ஷாருக்கானுக்கே உரிய ஒரு ஸ்ரைல் படம் முழுவதும் நிரம்பியிருக்கிறது. அவருக்கு போட்டியாக நயன்தாரா, விஜய் சேதுபதி உள்ளிட்ட மற்றவர்கள் நடித்திருந்தாலும் இது ஒரு ஷாருக் படம் என காட்சிக்குக் காட்சி பேச வைக்கிறார்.

மத்திய விசாரணை அதிகாரியாக நயன்தாரா. ஏற்கெனவே இது போன்ற ஒரு கதாபாத்திரத்தை ‘இமைக்கா நொடிகள்’ படத்தில் அவர் செய்திருந்தாலும், இந்தப் படத்தில் இன்னும் சிறப்பாகத் தெரிகிறார். அவருக்கும் ஷாருக்குக்கும் இடையில் காதல் காட்சிகள் இல்லையென்றாலும் இருவரும் இடம்பெறும் காட்சிகளில் காதல் வழிகிறது.

ஆயுதக் கடத்தல், தொழிற்சாலைகளை நடத்தும் பெரிய வியாபாரி, இந்திய அரசியலை பின்னாலிருந்து ஆட்டுவிப்பவர் என பெருநிறுவன வில்லனாக நடித்திருக்கிறார் விஜய் சேதுபதி. கதாபாத்திரம் புதிதாக இல்லையென்றாலும் விஜய் சேதுபதியின் வில்லத்தனம் புதிது.


பின்னணிக் கதையில் அப்பா ஷாருக்கின் ஜோடியாக தீபிகா படுகோனே. சிறப்புத் தோற்றம் என்றாலும் அவருக்கு ஏற்படும் முடிவு கண்களில் கண்ணீரை வரவழைக்கும். யோகி பாபு ஒரே ஒரு காட்சியில் வந்து போகிறார். ஷாருக்கின் ‘சார்லீஸ் ஏஞ்சல்ஸ்’களாக பிரியாமணி, சான்யா மல்கோத்ரா, சஞ்சிதா பட்டாச்சார்யா, கிரிஜா ஓக், லெஹர் கான், ஆலியா குரேஷி அதிரடியில் அசத்துகிறார்கள்.

அனிருத்தின் பின்னணி இசை மற்றும் பாடல்கள் படத்துக்கு பெரும் பலம். ஜி. கே. விஷ்ணுவின் ஒளிப்பதிவில் ஒவ்வொரு காட்சியிலும் பிரமாண்டம். படம் இரண்டே முக்கால் மணி நேரம் என்றாலும் விறுவிறுப்பாகத் தொகுத்திருக்கிறார் ரூபன்.

படத்தின் முதல் அரை மணி நேர மெட்ரோ ரயில் காட்சிகள் மிகவும் நீளம். பல விசயங்களை ஒரே படத்தில் சொல்லியிருப்பதும் அதிகசுமை ஆகிவிட்டது. அடுத்து இப்படித்தான் காட்சிகள் போகும் என ஊகிக்க முடிவதும் மைனஸ். மற்றும்படி அதிரடி திரைக்கதை பிரியர்களுக்கு பிடிக்கும்.

# இரு நாயகிகள்

இளன் இயக்கத்தில் கவின் ‘ஸ்டார்’ என புதிய படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். ரைஸ் ஈஸ்ட் மற்றும் சிறீ வெங்கடேஸ்வரா சினி சித்ரா என இரு நிறுவனங்களும் இணைந்து இந்தப் படத்தை தயாரிக்கின்றனர்.



இந்த படத்தில் கதாநாயகியாக யார் நடிக்கின்றார் என அறிவிக்கவில்லை. இந்த நிலையில் அதிதி பொஹங்கர், பிரீத்தி முகுந்தன் என இருவரும் கதாநாயகியாக நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

# சூர்யாவுடன் சேரும் நஸ்ரியா

சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா தனது 43ஆவது படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்துக்கு ஜி. வி. பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். இந்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் மலை யாள நடிகர் துல்கர் சல்மான் நடிக்கவுள்ளார்.



இதைத் தொடர்ந்து இப்படத்தில் கதாநாயகியாக நடிகை அதிதி ஷங்கரை நடிக்க வைக்கப் பேச்சு நடந்து வருவதாக கூறப்பட்டு வந்த நிலையில் தற்போது கதாநாயகியாக நடிக்க நடிகை நஸ்ரியா ஒப்பந்தம் ஆகியுள்ளார். மேலும், இவர் அதிதி ஷங்கருக்கு பதிலாகவா அல்லது மற்றொரு கதாநாயகியாகவா நடிக்கவுள்ளார் என்பது குறித்து தெளிவான தகவல் இல்லை.



# இந்தியா-பாகிஸ்தான் போட்டி மேலதிக நாள் ஒதுக்கீடு!

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர் 4 சுற்றில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையிலான ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டால் போட்டியை மறு நாள் நடத்த ஆசிய கிரிக் கெட் சபை முடிவு செய்துள்ளது.

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கை, பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. லீக் சுற்று முடிவடைந்து தற்போது சுப்பர் 4 சுற்று போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதன் முதல் ஆட்டம் லாகூரில் நடைபெற்ற நிலையில் மீதம் உள்ள 5 போட்டிகளும் கொழும்பில் உள்ள ஆர்.பிரேமதாசா சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுடன் மோதுகிறது. இந்நிலையில் இந்த ஆட்டத்துக்கு மேலதிக நாள் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெறும் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டால் மறுநாளான நாளை திங்கட்கிழமை போட்டி நிறுத்தப்பட்ட நிலையில் இருந்து தொடர்ந்து நடத்தப்படும் என ஆசிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

லீக் சுற்றில் இரு அணிகளும் கண்டியில் உள்ள பல்லேகலையில் மோதிய ஆட்டம் மழை காரணமாக பாதியில் தடைப்பட்டது. இந்த போட்டியை காண்பதற்கு ரசிகர்கள் குறைவான எண்ணிக்கையிலேயே மைதானத்துக்கு வந்திருந்தனர். இதனால் தொடரை நடத்தும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சார்பில் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் ஜெய் ஷாவுக்கு இழப்பீடு கோரி கடிதம் எழுதப்பட்டிருந்தது. இந்த சூழ்நிலையில்தான் சுப்பர் 4 சுற்றில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டத்துக்கு மேலதிக நாள் அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மற்ற ஆட்டங்களுக்கு மேலதிக நாள் அறிவிக்கப்படவில்லை.


# பலப்பரீட்சை

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸின் அரினா சபலெங்கா, அமெரிக்காவின் கோ கோ காஃப் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி சுற்றில் 2ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா, 17ஆம் நிலை வீராங்கனையான மேடிசன் கீஸ்/டன் மோதினார்.

2 மணி நேரம் 32 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அரினா சபலெங்கா 0-6, 7-6 (7-1), 7-6 (10-5) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றோர் அரை இறுதி ஆட்டத்தில் 6ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கோ கோ காஃப், 10ஆம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் கரோலினா முச்சோவாவுடன் மோதினார். இதில் கோ கோ காஃப் 6-4, 7-5 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார். சம்பியன் பட்டம் வெல்வதற்கான இறுதி ஆட்டத்தில் அரினா சபலெங்கா - கோ கோ காஃப் பலப்பரீட்சை நடத்துகின்றனர். இந்தப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.




# நாம் வரலாற்றை மாற்றியவர்கள்!

உலக உதைபந்தாட்ட வரலாற்றை தாங்கள் இருவரும் மாற்றி அமைத்தவர்கள் என மெஸ்ஸியையும் தன்னையும் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார் கிறிஸ்ரியானோ ரொனால்டோ. 38 வயதான அவர் போர்த்துக்கல் மற்றும் அல்-நாசர் அணிக்காக விளையாடி வருகிறார்.

உதைபந்தாட்ட உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக ரொனால்டோ அறியப்படுகிறார். கடந்த 2003 முதல் அவர் சர்வதேச போட்டிகளில் போர்த்துக்கல் அணிக்காக விளையாடி வருகிறார். கழகம், சர்வதேசம் என அனைத்து போட்டிகளிலும் சேர்த்து மொத்தம் 850 கோல்களை பதிவு செய்த முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை அண்மையில் படைத்தார். இந்தப் பட்டியலில் மெஸ்ஸி இரண்டாவது இடத்தில் உள்ளார்.



இந்தச் சூழலில் லிஸ்பனுக்கு அருகே உள்ள ஓயைரஸ் பகுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மனம் திறந்து பேசியுள்ளார்.

“நான் எனது கோல் எண்ணிக்கையை இதற்கும் மேல் கூட்டவே விரும்புகிறேன். நான் களத்தில் விளையாடும் காலம் வரை எனது இலக்கை மிக உயரத்தில் வைக்க வேண்டும் எனக் கருதுகிறேன். எதிர்வரும் யூரோ கிண்ணத் தொடருக்கான இரண்டு தகுதிச்சுற்றுப் போட்டியிலும் போர்த்துக்கல் வெற்றி பெற வேண்டுமென விரும்புகிறேன். அது நடந்தால் நாங்கள் யூரோ கோப்பைக்கு தகுதி பெறுவோம்” எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரிடம் மெஸ்ஸி குறித்த கேள்வி முன்வைக்கப்பட்டது. “உங்களுக்கு ரொனால்டோவை பிடிக்கும் என்பதற்காக மெஸ்ஸியை வெறுக்க வேண்டியதில்லை. நாங்கள் உலக உதைபந்தாட்ட வரலாற்றை மாற்றி அமைத்தவர்கள். நாங்கள் இருவரும் 15 ஆண்டு காலம் ஆடுகளத்தை பகிர்ந்து கொண்டவர்கள். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் மரியாதை கொடுத்து வருகிறோம். நாங்கள் இருவரும் நண்பர்கள் என நான் சொல்வதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் அவருடன் தகவல் பகிரந்தது இல்லை. உணவு கூட இணைந்து சாப்பிட்டது கிடையாது. நாங்கள் இருவரும் தொழில்முறை சகாக்கள்.

அவர், அவரது வழியிலும். நான், எனது வழியிலும் பயணிக்கிறோம். நான் பார்த்ததிலிருந்து இருவரின் ஆட்டமும் மேம்பட்டுள்ளது. நான் ஐரோப்பாவுக்கு வெளியில் வந்து விளையாட விரும்புகிறேன். அதை செய்கிறேன். ரசிகர்கள் ரொனால்டோ எதிர் மெஸ்ஸி என வைத்து பார்ப்பதை வழக்கமாக கொண்டுள்ளார்கள்” என்றார்.

## பாக்கு ஏற்றுமதியால் 7 மாதங்களில் 10,566 மில்லியன் ரூபா வருமானம்!

கொழும்பு, செப். 10

வருடத்தின் முதல் 7 மாதங்களில் பாக்கு ஏற்றுமதி மூலம் 10,566 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதே காலகட்டத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பாக்கின் அளவு 7648 மெற்றிக் தொன் ஆகும்.

தற்போது, ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் மானிய முறையில் பாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

(அ)

## கண் வைத்தியர் வெளிநாடு சென்றதால் மக்கள் சிரமம்!

கொழும்பு, செப். 10

இரத்தினபுரி-கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் கண் வைத்தியர் வெளிநாடு சென்றுள்ளதால் சிகிச்சைகளுக்காக வருகைத்தரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியத்திற்கு முகங்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஹவத்தை, கொடவெல, ஓபநாயக்க, பெல்மதுளை, பலாங்கொடை மற்றும் வெலிகேபொல ஆகிய பிரதேசங்களில் இருந்து சிகிச்சைக்காக வருகை தரும் மக்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த வைத்தியசாலைக்கு கண் வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .

(அ)

## வறட்சி காரணமாக சிறுபோகத்தில் 63,000 ஏக்கர் விளைநிலங்கள் அழிவு

கொழும்பு, செப். 10

வறட்சியான வானிலையினால் சிறுபோகத்தில் 63,000 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்கள் அழிவடைந்துள்ளதாக விவசாய காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிக்கை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் விவசாய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சபையின் தலைவர் வீரசேகர குறிப்பிட்டார்.

வறட்சியான வானிலையினால் நெற்பயிர் விளைநிலங்களே அதிக அளவு பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

பெரிய வெங்காயம், மிளகாய், சோயா உள்ளிட்ட ஏனைய போகப் பயிர்கள் பயிரிடப்பட்டிருந்த 460 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்களும் அழிவடைந்துள்ளதாக விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

வறட்சியான வானிலையினால் 64,342 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# வெளிநாட்டு நோயாளர்களை நாட்டுக்கு ஈர்க்க உயர்ந்த சுகாதாரத்துறை அவசியம்

## வலியுறுத்துகிறார் ஜனாதிபதி




கொழும்பு, செப். 10

வெளிநாட்டு நோயாளர்களை இந்நாட்டுக்கு ஈர்க்கும் வகையில் மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பவற்றை உயர் தரத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த, முழு மையான சுகாதார கொள்கை அவசியமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜோசப் பிரேசர் வைத்தியசாலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற நூற்றாண்டு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்நாட்டுக்கு வெளிநாட்டு நோயாளர்களை மருத்துவ தேவைக்காக வரவழைப்பதற்கு மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பன உயர் தரத்தில் காணப்பட வேண்டும்.

எமது சுகாதார கொள்கை தொடர்பில் நாம் மீளச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்நாட்டில் வைத்தியசாலை கட்டமைப்பு அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகள் என பிளவுபட்டு காணப்படுகின்றன. பெருமளவான வைத்தியர்கள் நாட்டை விட்டுச் செல்கிறார்கள்.

அதனால் நாட்டிற்குள் அதிகளவில் வைத்தியர்களை உருவாக்க வேண்டியுள்ளது. அதற்கமைய முதலாவது அரச சார்பற்ற வைத்திய பீடத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை வைத்தியர்கள் இல்லாமல் ஐக்கிய இராச்சியம் தனது வைத்தியசாலைகளை நடத்திச் செல்வதில் நெருக்கடியை எதிர்கொள்கிறது. அதனால் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இந்தியாவுடன் சேர்ந்து, நாங்கள் ஐக்கிய இராச்சியத்தின் வைத்தியசாலை கட்டமைப்பை நாமும் நடத்திச் செல்கிறோம் என்று கூறினால் தவறாகாது.

உதவி பெறும் நாடாக மட்டுமன்றி, உதவி வழங்கும் நாடாகவும் இலங்கை மாற வேண்டும். மேலும், அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயற்படுவதற்கான செயற்றிட்டங்களை நாம் தயாரித்துள்ளோம்.

அரசாங்கத்தினால் நாட்டு பிரஜைகளுக்கு மருத்துவக் காப்புறுதி பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. அப்போது சிகிச்சைக்காக தனியார் வைத்தியசாலைக்குச் செல்வதா அரச வைத்தியசாலையை நாடுவதா என்பதை மக்கள் தீர்மானிப்பர்.

இந்த நாட்களில் நானும் ஒரு வைத்தியரை போலவே செயற்படுகிறேன். மரணத்தின் இறுதி தருவாயிலிருக்கும் நோயாளியை சுமந்துச் செல்லும் அதே நேரம் அவருக்கு சிகிச்சையளித்து காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன்.

திறந்த பொருளாதார கட்டமைப்பின் கீழ் நாடு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதனால் தனியார் நிறுவனங்களும் அபிவிருத்தி அடையலாம். அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டுக்கு முன்னேற்றம் கிட்டாது-என்றார். (அ)

